
வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை - 8

ஒளிவிளக்கு எம்.ஜி.ஆர்

முனைவர் செ. இராஜேஸ்வரி, M.A., M.Phil., P.hd.,



சந்திரோதயம் பதிப்பகம்

3,462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு,கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018, Mob. : 7010997639.




லண்டனில் நடந்த எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் பேராசிரியை ராஜேஸ்வரி செல்லையா எழுதிய நூலை சென்னை முன்னாள் மேயர் சைதை துரைசாமி அவர்கள் வெளியிட அதை இயக்குனர் தங்கர் பச்சான் பெற்றுக்கொண்ட போது எடுத்த படம்..

வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர் நூல்வரிசை – 8

ஒளிவிளக்கு எம்.ஜி.ஆர்.

முனைவர் செ. இராஜேஸ்வரி, M.A., M.Phil., P.hd.,



சந்திரோதயம் பதிப்பகம்

3,462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு,கம்பர் சாலை,

தினமணி நகர், மதுரை – 625 018, Mob.:7010997639.

நூல் விவரம்

நூலின் பெயர்	:	*ஒளிவிளக்கு எம்.ஜி.ஆர்.*
நூல் வரிசை	:	*வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர் நூல்வரிசை - 8*
ஆசிரியர்	:	*முனைவர் செ.இராஜேஸ்வரி*
முன் பின் முகப்பு அட்டை அமைப்பு	:	*செ.மீனாட்சி*
பதிப்பாளர்	:	*சந்திரோதயம் பதிப்பகம்* *3,462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு,* *கம்பர் சாலை, தினமணி நகர், மதுரை – 625 018* *தொலைபேசி எண் : 7010997639*
பதிப்பு	:	*முதல் (பிப்ரவரி 2019)*
மொழி	:	*தமிழ்*
பக்கங்கள்	:	*154*
விலை	:	*200*



லண்டனில் நடந்த எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் பேராசிரியை ராஜேஸ்வரி செல்லையா எழுதிய நூலை சைதை துரைசாமி வெளியிட அதை இயக்குனர் தங்கர் பச்சான் பெற்றுக்கொண்ட போது எடுத்த படம்.

வெளிநாடுகளில்

தமிழர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தந்தவர் எம்.ஜி.ஆர்.

லண்டனில் நடந்த விழாவில், சைதை துரைசாமி புகழாரம்

லண்டன், ஜன.10-

வெளிநாடுகளில் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தந்தவர் எம்.ஜி.ஆர். என்று லண்டனில் நடந்த விழாவில், சைதை துரைசாமி புகழாரம் செலுத்தினார்.

லண்டனில் விழா

லண்டன் எம்.ஜி.ஆர். பேரவை சார்பில் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா அங்குள்ள ரெட்பிரிட்ஜ் டவுன் ஹாலில் நடைபெற்றது. சென்னை மாநகராட்சியின் முன்னாள் மேயரும், மனிதநேய மையத்தின் தலைவருமான சைதை துரைசாமி தலைமை தாங்கினார்.

தமிழ் திரைப்பட இயக்குனர் தங்கர் பச்சான், ஈஸ்ட் ஹாம் எம்.பி. டிம்ஸ் ஸ்மபன்ஸ், கவுன்சிலர்கள் மேரி குரூஸ், பரம் நந்தா, பிரான்ஸ் எம்.ஜி.ஆர். பேரவை தலைவர் முருகு பத்மநாபன், நாமக்கல் எம்.ஜி.ஆர்., டி.எம்.எஸ். பால்ராஜ், சிங்கப்பூர் மஞ்சுளா, மலேசியா எம்.ஜி.ஆர். பாலன் உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர்.

விழாவில் 25 ஆண்டுகளுக்கு முன்பு இயக்குனர் தங்கர் பச்சான் எழுதிய 'வெள்ளை மாடு' சிறுகதைகள் தொகுப்பின் சிறப்பு பதிப்பும், '9 ரூபாய் நோட்டு' நாவலின் 5-வது பதிப்பும், பேராசிரியை ராஜேஸ்வரி செல்லையா எழுதிய, 'எம்.ஜி.ஆர். ஒரு ஜீவநதி', 'கலியுக போராளி எம்.ஜி.ஆர்.' ஆகிய நூல்களும் வெளியிடப்பட்டன.

சைதை துரைசாமி பேச்சு

விழாவில் சைதை துரைசாமி பேசியதாவது:-

எம்.ஜி.ஆர்., வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பை (தகவல் தொழில்நுட்பம்) ஏற்படுத்தி அவர்களது குடும்ப அந்தஸ்தை உயர வைத்தவர்.

திரைப்படத் துறையில் அவர் ஒரு சிற்பி சிலையை செதுக்குவதைப் போல தன்னுடைய எண்ண வடிவங்களை, மக்கள் நலனை, வாழ்வியல் பண்புகளை அனைத்தையும் செதுக்கி, செதுக்கி கல்வெட்டாக பதித்து உள்ளார்.

அனைவருக்கும், எல்லா காலங்களுக்கும் பயன்படக் கூடிய வகையில் தன்னுடைய கலை பயணத்தை தொடர்ந்து ஒரு மாபெரும் நடிகராக திரைப்படத்துறையில் பவனி வந்து வெற்றி கண்டவர்.

இறை தூதர்

எம்.ஜி.ஆர். ஆட்சியில் அமர்ந்தவுடன் ஏழை-எளியவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் ஆகியோரின் வாழ்க்கைதரம் உயரும் வகையில் திட்டங்களை தீட்டி மக்களுக்கான ஆட்சி என்பதை நிலை நிறுத்தினார்.

எதை எடுத்துக் கொண்டாலும், அது மக்களுக்காக என்று தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்ட அதிசய மனிதர் எம்.ஜி.ஆர்., அவரை போன்ற மனிதர்கள் தோன்றுவது அரிது. எம்.ஜி.ஆர். ஒரு இறை தூதர் என்று கூட சொல்லலாம்.


இவ்வாறு அவர் பேசினார்.

விழா ஏற்பாடுகளை லண்டன் எம்.ஜி.ஆர். பேரவை தலைவர் அப்பு தாமோதரன் செய்திருந்தார். எஸ்.வி.ரஞ்சன் நன்றி கூறினார்.


15.00
भारत
INDIA
2017
डा. एम. जी. रामचन्द्रन
DR. M. G. RAMACHANDRAN

அன்பு காணிக்கை

தாம் வாழும் நாடுகளில் எம்.ஜி.ஆருக்கு மன்றமும் பேரவையும் அமைத்துச் சிறப்பு செய்கின்ற வெளிநாட்டு ரசிகர்களுக்கு அன்பு காணிக்கை.



பாரீசில் எம்.ஜி.ஆர்., பிறந்த நாள் விழா

தினமலர் வாசகர் பார்த்தசாரதி

பாரீஸ்: பாரீஸ் நகரில் தமிழர்கள் நிறைந்துள்ள கார்துய் நோர்ட் பகுதியில் தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் பிறந்த நாள் விழா, பாரீஸ் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர்., நற்பணி மன்றம் சார்பில் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு மன்றத் தலைவர் தோமா மாறன் தலைமை வகிக்க, எம்.ஜி.ஆரின் படத்திற்கு வெற்றி, மாலை அணிவித்தார். பாரீஸ் - புதுச்சேரி அசோசியேஷன் தலைவர் பாரீஸ் பார்த்தசாரதி மலர்த்துாவி அஞ்சலி செலுத்தினார். பாரீஸ் ஹாட் பிரட்ஸ் உரிமையாளர் பொதோதுஸ் இனிப்பு வழங்கினார். விழாவில் கொள்கை மணி, ரோசம்பேர், கணேசன் ஆதினார் பங்கேற்றனர்.

நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழிபெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக்கட்டுரைகள் வெளியிட்டார். 1988 முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். Indian Women–Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Eco Vision and Mission, Neuro Ophthalmology Articles போன்ற பனுவல்களை தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணை பதிப்பாசிரியராகப் [Associate editor] பணயாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியை தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் இன்று மூன்று பாகங்களாக வெளி வந்துள்ளது. அங்கு வெளிநாட்டு மாணவர்களுக்கு தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1987 முதல் எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு. இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து பல ஆண்டுகள் தீவிரமாக பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்க பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழிபெயர்ப்பாளராகவும் தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றியபோது அங்கு வந்த வெளி மாநிலம் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த கண் மருத்துவர்களுக்கு தமிழ் கற்பிக்க *Tamil for Non-Tamils* என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்த பாட நூல் அங்கு பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்கு செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க *Easy English* என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளிமாநிலத்தவருக்கும் வெளி நாட்டவருக்கும் ஆங்கிலமும் தமிழும் கற்பித்தார். மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி அளித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக வரலாறு குறித்து அறிந்திருந்தார். குறிப்பாக எம்.ஜி.ஆர் பற்றிய தகவல்களை நிறைய தொகுத்து வைத்திருந்தார். தமிழ்க் கலையும் பண்பாடும் பற்றிக் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ், மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலை உருவாக்கியவிதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிய அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்க திரையரங்குக்கு அழைத்துச் சென்றார். திரை அரங்கில் ரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து போய் எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும் பேராசிரியை ஒருவரும் ஆராய்ச்சி செய்ய தொடங்கினர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றைத் தொடங்கி அவர் குறித்த

நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.

எம்.ஜி.ஆர் பற்றி ஒப்பனையும் ஒரிஜினலும் எம் ஜி ஆர் க௦௦ என்ற தலைப்பில் விகடன்.காமில் முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www.tamilauthors.com என்ற இணைய இதழில் "எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி" என்ற பெயரில் 16 கட்டுரைகளை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து "பெண்கள் போற்றும் பெருந்தலைவர் எம்.ஜி.ஆர்." என்ற பெயரில் 21 கட்டுரைகளை வெளியிட்டார். எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஒரு நூல் எழுதும் முயற்சியில் தகவல்களை திரட்டி வருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம். தற்போது எட்டு நூல்கள் வெளியிட்டுள்ளார். அவை 'வெற்றித்திருமகன்' என்ற பெயரில் தொடங்கும் வரிசை நூல்கள் ஆகும். 2.எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம், 3.எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகளை விளக்கும் சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா, 4.வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட 5. மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர், 6.எம்.ஜி.ஆர் ஒரு ஜீவ நதி, 7. எம்.ஜி.ஆர் ஒரு கலியுகப்போராளி, எட்டாவதாக **"ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்."** *என்ற இந்நூல் வெளிவந்துள்ளது.*

இவர் எழுதிய சிறுகதைகள் 'அமராவதியின் காதல்'என்ற பெயரில் அமேசானில் வெளிவந்துள்ளது. இவர் எழுதி வரும் ஆய்வுக்கட்டுரைகள நெருஞ்சி என்னும் இலக்கிய இதழில் வெளிவருகின்றன.

உள்ளடக்கம்



भारत
INDIA
सत्यमेव जयते
रुपये
100
RUPEES

1

மக்களின் மனம் கவரும் எம்.ஜி.ஆர். படத்தலைப்புகள்

எம்.ஜி.ஆர் படத்தின் தலைப்புகளுக்கும் அவரது தனிமனிதச் செயற்பாடுகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அவர் தந்தை அன்பை அறியாதவர். தாயால் வளர்க்கப்பட்டவர். தாயாரின் கண்டிப்பு மொழிகளும் வசைமொழிகளும் அவரது நினைவில் நின்றன. அண்ணனின் பாசமும் அன்பும் ஏழு வயது முதல் அவரை திரையுலகம் வரை அரவணைத்துக்கொண்டு சென்றது. எம்.ஜி.ஆரின் அரசியல் ஈடுபாட்டில் அவர் அண்ணனுக்கு பெருவிருப்பம் கிடையாது. அம்மா, அண்ணன், அண்ணி, மனைவி குழந்தைகள் மட்டுமே அவரது குடும்பம் திரையுலகிலும் அரசியலிலும் அவருக்கு நண்பர்கள் இருந்தனர். நலம்விரும்பிகள் இருந்தனர். அடிவருடிகள் இருந்தனர். எதிரிகளும் துரோகிகளும் அவரைப்புரிந்து கொள்ளாமல் அடுத்தவர் பேச்சைக்கேட்டு அவரைப் பகைத்துக்கொண்ட சில அப்பாவிகளும் இருந்தனர். அவரது ரசிகர்கள் அவரது ரத்தத்தின் ரத்தமாக விளங்கினர். அவரது உயிர்நாடியாக இருந்தது உழைக்கும் வர்க்கத்தினரும் தாய்மாரும் பெண்களும் ஆவார். இவர்களை மையப்படுத்தியே அவரது படத்தலைப்புகள் வைக்கப்பட்டன. இவற்றைப் பார்ப்பதற்கு முன்பு சில இலக்கியச்சான்று உடைய தலைப்புகளைப் பற்றி காண்போம்.

ஆயிரத்தில் ஒருவன்

1965 ஆம் ஆண்டு ஜூலை ஒன்பதாம் நாள் வெளிவந்த படம் ஆயிரத்தில் ஒருவன். கம்ப இராமயணத்தை திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்தபோது கம்பர் தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலை நூறுபாட்டுக்கு ஒரு பாட்டாகப் புகழ்ந்திருந்தார். அதனைக் கேட்ட சபையினர் 'இராம காதையில்' (கம்பர் சூட்டிய பெயர்) நரஸ்துதி (மனிதனைப்புகழ்வது) அதிகம் இருப்பதாகக் குற்றம் சாட்டினார். உடனே கம்பர் சரி நான் ஆயிரம் பாடல்களுக்கு ஒரு பாடலாக சடையப்ப வள்ளலைப் புகழ்ந்து பாடுகிறேன் என்றார். மேலும், சடையப்ப வள்ளல் நூற்றில் ஒருவர் அல்லர் அவர் ஆயிரத்தில் ஒருவர் என்றார். இந்த 'ஆயிரத்தில் ஒருவன்' என்ற பெயர் எம்.ஜி.ஆரின் படத்துக்கு சூட்டடப்பட்டது.



ஆயிரத்தில் ஒருவன்

எம்.ஜி.ஆரின் கதை இலாகாவில் இருந்த வித்வான் வே. இலட்சுமணன் எம்.ஜி.ஆர் கம்பராமாயணம், தொல்காப்பியம் போன்றவற்றைப் படிக்க உதவினர். மேல்சபைத் தலைவராக இருந்த மா.பொ.சி. அவருக்குச் சிலப்பதிகாரச் சுவையைப் புகட்டினார்.

கம்பன் விழா ஒன்றில் சிறப்புரை ஆற்றிய எம்.ஜி.ஆரை வியப்புடன் பார்த்த மு.மு. இஸ்மாயில் அவர்கள் 'நீங்கள் கம்பனை எங்குக் கற்றீர்கள்?' என்றார். அதற்கு எம்.ஜி.ஆர் சிறு வயதில் சம்பூர்ண இராமாயணத்தில் நடித்த காலத்தில் இருந்தே எனக்கு கம்பராமாயணத்தில் பரிச்சயம் உண்டு என்றார்.

கம்பன் விழாவில் பங்கேற்கும் அளவுக்கு எம்.ஜி.ஆருக்கு கம்பராமாயணம் தெரிந்திருந்தது. அவர் படத்துக்கு அவருடன் இருந்த இலக்கிய இதிகாசத் தேர்ச்சி பெற்ற நண்பர்கள் காட்சி சித்தரிப்பு. வசன உதவி, பெயர் சூட்டல் ஆகியவற்றிற்கு உதவினர். ஆஸ்தான நாத்தகி, அரசவைக் கவிஞர் என்பவை எல்லாம் பல வருடங்களுக்குப் பிறகு அவர் முதலமைச்சர் ஆனதும் நடைமுறைக்கு வந்ததற்கு அடிப்படை காரணம் அவர் சினிமாவில் இருக்கும்போதே இலக்கியம் இதிகாசம், இசை, நாட்டியம் போன்றவற்றில் தேர்ச்சி பெற்றவர்களை தன்னுடன் வைத்திருந்ததே ஆகும்.

ஆசைமுகம்

எம்.ஜி.ஆரின் தேர்தல் நிதியைவிட அவர் தன் முகத்தை ஒருமுறை மக்களிடம் வந்து காட்டினாலே போதும் திமுக அதிக ஒட்டுகளை பெற்று வெற்றிவாகை சூடும் என்றார் அறிஞர் அண்ணா. எம்.ஜி.ஆரின் மலர்ந்த முகத்தைப் பார்க்க மணிக்கணக்கில் மக்கள் காத்துக்கிடந்தனர். இதனால், ஆசைமுகம், முகராசி என்ற பெயர்கள் அவர் படங்களுக்கு சூட்டப்பட்டன.



ஆசைமுகம் *(10-12-65)* படம் தமிழில் வந்த முதல் பிளாஸ்டிக் சர்ஜரி செய்து முகத் தோற்றத்தை மாற்றும் அறுவைசிகிச்சை படம் ஆகும். ராம்தாஸ் தன் முகத்தை பிளாஸ்டிக் சர்ஜரி மூலமாக எம்.ஜி.ஆர் முகம் போல மாற்றிக்கொள்ளும் படம் ஆசைமுகம். ரேவதியும் அவர் கணவரும் இதே கதையமைப்பில் ஒரு படம் எடுத்தபோது 'புதியமுகம்' என்று பெயரிட்டனர். இது அறிவியல் சாதனையைக் குறிக்கும் பெயர். ஆனால் எம்.ஜி.ஆர் முகம் 'செண்டிமெண்ட்' சார்ந்தது. அது "ஆசைமுகம்".

பாரதியார் பாடல்களில் காதலி ஒருத்தி

"ஆசை முகம் மறந்து போச்சே - இதை
ஆரிடம் சொல்வேண்டி தோழி"

என்று காதலனின் முகம் மறந்துவிட்டதை பற்றி தன் தோழியிடம் கூறுவாள். இந்த 'ஆசைமுகம்' என்ற பெயர் ரசிகர், ரசிகைகள் ஆவலோடு பார்க்க விரும்பும் எம்.ஜி.ஆரின் முகத்துக்கு ஏற்ற பெயராகவும் கதையோடு பொருந்திச் செல்கின்ற பெயராகவும் அமைந்தது.

முகராசி

1966ம் ஆண்டு பிப்ரவரி 18-ம்நாள் தேவர் ஒரு படம் வெளியிட்டார். எம்.ஜி.ஆரை வைத்து 12 நாட்களில் எடுக்கப்பட்ட படம் என்ற சாதனை படைத்த இப்படத்துக்கு அவர் 'முகராசி' என்று பெயரிட்டார். படம் அமோக வெற்றி. குறைந்த செலவில் எடுத்து நிறைய இலாபம் கிடைத்த படம் முகராசி. இதில் ஜெயலலிதா சிலம்பு சுற்றுவது ரசிகர், ரசிகைகளிடையே நல்ல வரவேற்பை பெற்றது. ரவுடிகளிடம் இருந்து தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காக எம்.ஜி.ஆர் அவருக்கு தற்காப்புக் கலையின் அவசியத்தை எடுத்துரைப்பார். அமெரிக்க மாணவிகள் இப்படத்தைப் பார்த்தபோது ஜெயலலிதா கதாபாத்திரத்தை 'Empowered Woman' எனப்பாராட்டினார்.



முகராசி

குடியிருந்த கோயில்

எம்.ஜி.ஆர் படங்களில் தாய்க்குலம் விரும்பும் வகையில் தாய்ப்பாசம் இடம்பெற்று இருக்கும். தந்தைப் பாத்திரம் புதியபூமி, விவசாயி, பணக்காரக் குடும்பம் போன்ற சில படங்களில் மட்டுமே காணப்படும்.

தாயைப்பற்றிக் குறிப்பிடும் போது சில பெரியவர்களின் கதைகள் நமக்கு நினைவுக்கு வரும். உலகத்தையே வெறுத்த துறவிகளால் கூட தாய்ப்பாசத்தை துறக்க இயலவில்லை. நபிகள் நாயகம் தாயின் காலடியில் உன் சொர்க்கம் இருக்கிறது என்றார். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட போது தன் சீடர்களைப்பார்த்து 'இதோ உன் தாய்' என்று தன் தாயாரைப் பார்த்துக்கொள்ளும்படி வேண்டுகிறார். சங்கரர் தன் தாய்க்கு இறுதிக்கடன் தீர்க்க எங்கிருந்தாலும் வந்து விடுவேன் என்கிறார். ஒரு தாய்க்கு மகன் செய்யும் கடமையை அவர் மறக்கவில்லை. பட்டினத்தார் தன் தாயின் சிதைக்கு தீமூட்டிய பிறகு குடியிருந்த கோயிலை தீக்கு இரையாக்கி விட்டேனே என வருந்துகிறார். இங்கு தாயை இவர் 'குடியிருந்தகோயில்' என்று குறிப்பிட்டது, எம்.ஜி.ஆர் படத்துக்கு பொருத்தமான தலைப்பாக இடம்பெற்றது. ஆரம்பத்தில் இதற்கு 'சங்கமம்' என்றுதான் பெயர் சூட்டியிருந்தனர். ஆனால் அதைவிட 'குடியிருந்தகோயில்' என்ற பெயரை எம்.ஜி.ஆருக்குப் பொருத்தமாகத் தோன்றியது. படமும் வெள்ளிவிழா கொண்டாடியது.

தெய்வத்தாய், தாயின் மடியில், தாய்க்குத் தலைமகன், தாய் சொல்லைத் தட்டாதே , தாய்க்குப் பின் தாரம், என பல படங்களா தாய் என்னும் சொல்லை தலைப்பில் பெற்றிருந்தன. இவை தாய்க்குச் சிறப்புச் செய்த படங்கள் ஆகும்.

உலகம் சுற்றும் வாலிபன்

தமிழ் மொழி அகராதியைத் தொகுத்த ஏ.சிதம்பரநாதன் செட்டியார் உலகநாடுகள் பலவற்றைச் சுற்றி வந்து உலகம் சுற்றிய தமிழன் என்று ஒரு நூல் வெளியிட்டார். எம்.ஜி.ஆர் இத்தலைப்பை உலகம் சுற்றும் வாலிபன் என்று தனக்கேற்றபடி மாற்றிக்கொண்டார்.

காவல்காரன்

1967-ல் திமுக வெற்றி பெற்றதும் செப்டம்பர் ஏழாம் நாள் வெளிவந்த திரைப்படம் இது. இந்தப் படத்துக்கு முதலில் "மனைவி" என்று பெயர் சூட்டியிருந்தனர். எம்.ஜி.ஆர் ஜெயலலிதாவைத் திருமணம் செய்து குடும்பம் நடத்தி குழந்தை பெறும் படமாக இருந்ததால் ஜெயலலிதாவுக்கு முக்கியத்துவம் அளித்து "மனைவி" என்று பெயர் சூட்டப்பட்டது.



காவல்காரன்

விளம்பர ஸ்டில்கள் எடுத்தபோது “ஒரு படத்தில் எம்.ஜி.ஆர் ஒரு கையில் டார்ச் லைட்டும் மறுகையில் சிறு தடியுமாக இரவில் காவல் பணிமேற்கொள்ளும் ரோந்துப் போலிஸ் போலத் தோன்றினார். அதைப்பார்த்த கவிஞர் வாலி இந்தப்படத்துக்கு ‘காவல்காரன்’ என்று பெயரிடலாமே என்றார். எம்.ஜி.ஆருக்கும் சரியனப்பட்டது ஏனென்றால் இப்படத்தில்

“என் இல்லம் புகுந்தாலும் உள்ளம் கவர்ந்தாலும்

நான் தான் காவலடி”

என்று பாடல் வரிகள் அமைந்திருக்கும். எனவே மனைவிக்கும் காதலிக்கும் நானே காவல்காரன் என்ற பொருளில் இந்தப் பாடல் வரிகள் எழுதப்பட்டிருந்ததால் ‘காவல்காரன்’ என்பதே பொருத்தமான தலைப்பாகத் தோன்றியிருக்கும். இவர் காவல்துறையை சேர்ந்தவராகவும் இப்படத்தில் நடித்திருந்தார்.

ஜெயலலிதா எம்.ஜி.ஆரிடம் செல்வாக்குப் பெறுவதை விரும்பாத சிலர் ஆரம்பம் முதலே ஜெயலலிதாவை கழற்றிவிடத் திட்டமிட்டனர். ‘மனைவி’ என்ற பெயரை நீக்கிட்டாலும் பிடிவாத குணம் உடைய ஜெயலலிதா அடுத்தடுத்த படங்களில் கணவன், கண்ணன் என் காதலன் படத்தலைப்புகளில் தன் முக்கியத்துவத்தை நிறுவி அடிமைப்பெண்ணில் தன் செல்வாக்கின் உச்சத்தைத் தொட்டார்.

திருடாதே

‘பாக்கெட்மார்’ என்ற இந்திப் படத்தைப் பார்த்து எடுக்கப்பட்ட திருடாதே படம் 1958ல் தொடங்கி 1961-ல் வெளிவந்தது. இப்படத்துக்கு “நல்லவனுக்குக்

காலமில்லை''என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது. ஆனால் இத்தலைப்பு எம்.ஜி.ஆருக்குப் பிடிக்கவில்லை.

''எம்.ஜி.ஆரே நல்லவனுக்கு காலமில்லை என்று சொல்லிவிட்டார். இனியெதற்கு நல்லவனாக வாழவேண்டும்'' என்ற எதிர்மறை எண்ணத்தை இத்தலைப்பு உருவாக்கிவிடும் என்று எம்.ஜி.ஆர் தன் குழுவினரிடம் தெரிவித்தார். பின்பு “அந்தப் படக்குழுவினரைச் சேர்ந்த மா. லட்சுமணன் என்பவர் (இவர் வித்வான் வே. லட்சுமணன் கிடையாது) 'திருடாதே' என்ற பெயரைக்கூறினார். எம்.ஜி.ஆருக்கு இந்தப் பெயர் பிடித்திருந்ததால் அவருக்கு ரூ.500 அன்பளிப்பாகக் கொடுத்தார். படத்தில் வரும்

திருடாதே பாப்பா திருடாதே

வறுமை நிலைக்கு பயந்துவிடாதே

திறமை இருக்கு மறந்து விடாதே



திருடாதே

என்ற பாடல் படத்தலைப்புக்கு வலுச்சேர்த்தது. 'திறமை இருக்கு' என்று பாடியது வறுமையில் உழன்றவருக்கு உழைத்து வாழும் நம்பிக்கையை வாழ்வில் ஏற்படுத்தியது.

நல்லவன் வாழ்வான்

திருடாதே' படத்துக்கு 'நல்லவனுக்குக் காலமில்லை' என்று முதலில் சூட்டியிருந்த பெயர் சரியில்லை என்று மாற்றிய எம்.ஜி.ஆர். தன் அடுத்த படத்திற்கு 'நல்லவன் வாழ்வான்'என்று பெயர் வைத்தார். இது அறிஞர் அண்ணா கதை வசனம் எழுதியபடம். அண்ணா தனது இதயக்கனி எம்.ஜி.ஆர். என்பதைக் குறிப்பிடும் வகையில் ஒரு கூட்டத்தில் பேசினார். அதனால் இதயக்கனி என்று ஒரு படத்துக்கு எம்.ஜி.ஆர். பெயரிட்டார். பணத்தோட்டம், பணம் படைத்தவன், பணக்காரக்குடும்பம் ஆகியவை பணக்காரனின் முகத்திரையைக் கிழித்த படங்கள்.

திமுக ஆட்சியில்

திமுக அரசாட்சி அமைந்ததும் தமிழ்நாட்டில் பொற்காலம் பிறந்துவிட்டதாகக் கருதும் வகையில் புதியபூமி, ஒளிவிளக்கு, தேர்த்திருவிழா, ஒரு தாய் மக்கள், நல்ல நேரம், போன்றவை வெளிவந்தன. புதியபூமி என்பது கிறிஸ்தவக் கோட்பாடான 'புதியவானம், புதியபூமி'என்பதைச் சார்ந்ததாகும். எம்.ஜி.ஆர்., திமுகவில் இருந்த போது இந்துமத, எதிர்ப்பாளராக இருக்கிறார் என்பதை நம்பிய கிறிஸ்தவர்கள் பலர் அவரை Secret Christian என்றே நம்பினார். அவர் தினமும் பைபிள் வாசித்து ஜெபம் செய்வார் என்றும் கூறி வந்தனர். தென் தமிழகத்தில் இவருக்கு இருந்த ஆதரவைப் பார்த்ததால் இவரை வைத்து 'பரமபிதா' என்ற படத்தை எடுக்க முன் வந்தனர். கேரளாவில் எம்.ஜி.ஆர். இயேசுகிறிஸ்து வேடத்தில் இருக்கும்

படத்தை தம் வீட்டில் வைத்து மெழுகுவர்த்தி ஏற்றினர். படகோட்டி படப்பிடிப்புக்கு கொல்லத்துக்குப் போயிருந்த எம்.ஜி.ஆரிடம் இத்தகவலைத் தெரிவித்ததும் அவர் 'என்னப்பா உயிரோடு இருக்கும் போது எனக்கு பூ, மாலை, மெழுகுவர்த்தி ஏற்றுகிறீர்களே' என்று சொல்லிச் சிரித்தாராம்.

அண்ணாவின் தலைப்புகள்

அறிஞர் அண்ணாவைத் தன் தலைவராகக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர் அவரது கதைகளின் தலைப்புகளைத் தன் படங்களுக்குச் சூட்டி தன்னை ஒரு தி.மு.க.காரர் என்று பறைசாற்றிக் கொண்டார். காங்கிரஸ் ஆட்சியில் துணிச்சலுடன் எம்.ஜி.ஆர். செயல்பட்டதற்கு படத்தலைப்புகளும் நற்சான்றாக அமைந்தன. அவரது நாவல்களின் தலைப்புகளான



எங்க வீட்டுப் பிள்ளை

குமரிக்கோட்டம், பெரிய இடத்துப்பெண் என்ற பெயர்களில் படம் எடுத்து வெளியிட்டு வெற்றிவாகை சூடினார்.

தனக்கான பெயர்கள்

தனது பெயரையும் புகழையும் உயர்த்தும் வகையில் தன்னை நேசிக்கும் தமிழ் மக்களின் உள்ளங்களில் உயர்ந்த ஓரிடத்தைப் பெற்றிருப்பதை உறுதிப்படுத்தும் வகையிலும் சில படங்களுக்குப் பெயர் சூட்டினார். அவற்றுள் சில, உலகம் சுற்றும் வாலிபன், எங்க வீட்டுப்பிள்ளை, என் அண்ணன், அன்னமிட்டகை, தனிப்பிறவி, முகராசி, நினைத்தை முடிப்பவன், கருணாநிதிக்கு இலவசமாக நடித்துக்கொடுத்த கலைஞரின் எங்கள் தங்கம், தர்மம் தலை காக்கும் ஆகியன. இவை எம்.ஜி.ஆரின் மீதான நல்லவன், வல்லவன், கொடையாளி என்ற கருத்துக்களை மேலும் வலுப்படுத்த உதவிய படத்தலைப்புகள் ஆகும்.

திமுக ஆட்சிக்கு முன்

எம்.ஜி.ஆர் பட வரலாற்றை திமுக ஆட்சிக்கு முன்பு, திமுக ஆட்சியின் போது, அதிமுக ஆரம்பித்த பிறகு என்று மூன்றாக பகுக்கலாம்.

புதிய பூமி

கதிரவன் என்ற பெயருடைய எம்.ஜி.ஆர் ஆங்கில மருத்துவராக ஒரு மலைக்கிராமத்துக்கு வந்ததும் அங்கிருந்த மந்திரம் தந்திரம் என்ற அறியாமை இருள் மறைந்து பகுத்தறிவுப் பகலவனின் ஒளி தோன்றியது. இது திமுகவின் ஆட்சி நாட்டில் புதிய பூமியை உருவாக்கியதற்கான அத்தாட்சிப்பத்திரம் ஆகும்.

அதிமுக தோன்றிய பின்பு...

அதிமுக ஆட்சியில் சேர்ந்து தன்னைப் பின்பற்றுவோருக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதைத் தெரிவிக்கும் வகையில் படத்தலைப்புகளை அமைத்தார். முதலில் நேற்று இன்று நாளை, பின்பு அதைத் தொடர்ந்து உரிமைக்குரல், நாளை நமதே, பல்லாண்டு வாழ்க, இன்று போல் என்றும் வாழ்க நிறைவாக மதுரையை (தமிழகத்தை) மீட்ட (திமுகவிடம் இருந்த) சுந்தர பாண்டியன் (அழகான தலைவன் எம்.ஜி.ஆர்). இப்படத்துடன் அவர் காலத்திய அவரது திரையுலக வரலாறு நிறைவு பெற்றது. அவர் காலத்திற்குப்பின்பு அவர் நடித்த அவசரப்போலீஸ் படம் வெளி வந்தது. எம்.ஜி.ஆர் நடித்த இரண்டு பாடல் காட்சிகளும் சில வசனக்காட்சிகளும் மட்டுமே அப்படத்தில் இருந்தன.

அதிமுக தொடங்கிய பிறகு இதோ என் பதில், நல்லதை நாடு கேட்கும், உன்னை விடமாட்டேன், புரட்சிப்பித்தன் போன்ற படங்கள் எம்.ஜி.ஆர் நடித்து வர வேண்டியவை. ஆனால் அவர் முதல்வராகிவிட்டதால் வரவில்லை.

ஏழைப்பங்காளன் எம்.ஜி.ஆர்

ஏழைகளின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய எம்.ஜி.ஆர். பாட்டாளிகளில் ஒருவராகத்தான் நடித்து பணக்கார முதலாளிகளின் கொட்டத்தை ஒடுக்கியதால் பலரும் எம்.ஜி.ஆரை. தம் பங்காளியாகவும் தம் ரட்சகராகவும் பார்த்தனர். துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனம் செய்யும் இறையம்சம் பொருந்தியவராகவே எம்.ஜி.ஆர். அவர்களுக்குத் தோன்றினார். எனவே எம்.ஜி.ஆர் ‘உங்களில் ஒருவன் நான்’ என்ற கருத்தை வலியுறுத்தும் வகையிலான உழைக்கும் வர்க்கத்தினரின்

பாத்திரங்களை ஏற்று நடித்தார். தன் படங்களுக்கும் உழைப்பவரின் பெயரையே சூட்டினார். ஆட்டோகிராஃப் போடும் போதும், 'உழைப்பவரே உயர்ந்தவர்' என்று எழுதிக் கையெழுத்துப்போட்டுக் கொடுத்தார்.

தொழிலாளி, படகோட்டி, விவசாயி, ரிக்ஷாக்காரன், மீனவநண்பன், உழைக்கும் கரங்கள், ஊருக்கு உழைப்பவன், உரிமைக்குரல் என்று தன் படங்களுக்குப் பெயர் சூட்டினார்.

1001 அரபுக் கதைகள்

மேடை நாடகமாக குலேபகாவலி நாடகம் 'பகடை 12' என்ற பெயரில் நடைபெற்று களின் பேராதரவைப் பெற்றது. இதை எம்.ஜி.ஆர். நடித்து ராமண்ணா தனது ஆர்.ஆர்.பிக்சர்ஸ் மூலமாக படமாக எடுத்தார். ஆயிரத்தோரு அரபுக் கதைகளைச் சேர்ந்த குலேபகாவலி, பாக்தாத்திருடன், அலிபாபாவும் 40 திருடர்களும் படங்கள் எம்.ஜி.ஆருக்கு பெரும் வெற்றிப் படங்களாக அமைந்தன.

படத்தலைப்பு என்பது ஒரு படத்துக்கு முகம் போன்றது எனவே எம்.ஜி.ஆர். மிகவும் ஆலோசித்து படத்தலைப்பைச் சூட்டியுள்ளார்.

"எம்.ஜி.ஆர். அவர்கள் எந்தத் துறையில் பணியினை மேற்கொண்டாலும், அந்தத் துறை ஒவ்வொன்றிலும் அவர் வெற்றி பெற்றே தீருவார்."

- அறிஞர் அண்ணா

2


எம்.ஜி.ஆர். நடனக் காட்சிகளின் புதுமை

எம்.ஜி.ஆர் தன் படங்களில் வித்தியாசமான நடனக்காட்சிகள் அமைய வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பார். ஆகவே, அவருடன் நடிக்கும் நடிகையாரும் நடனப்பயிற்சி உடையவர்களாக இருக்க வேண்டும். மந்திரிகுமாரி பட நாயகி சரோஜா (உதயசங்கரின் மாணவி) முதல் பத்மினி, ஜெயலலிதா, லதா எனப் பலரும் நடனத்தில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தனர். சரோஜாதேவி 'குரூப்டான்சராக' இருந்து கதாநாயகி ஆனவர். கே.ஆர். விஜயா 'ஸ்ட்ரீட்டான்சராக' இருந்து திரையுலகிற்கு வந்தவர். இவர்களும் ரசிகைகளைக் கவரும் வகையில் 'சினிமா டான்ஸ்' ஆடுவதில் வல்லவர்களாக இருந்தனர். இவர்கள் தவிர சிறந்த நாட்டியக்காரர்களான E.V. சரோஜா, எல் விஜயலட்சுமி, ஹெலன் (ஹிந்தி) ஆகியோரையும் எம்.ஜி.ஆர் தனது பாடல் காட்சிகளில் பயன்படுத்தினார். நடனக் காட்சிகளில் எம்.ஜி.ஆர் தனது உடையும் நடையும் வெகுப்பொருத்தமாகவும் அழகாகவும் இருக்கும்படி பார்த்துக் கொண்டனர்.

கதாநாயகியின் தகுதி

கதாநாயகியாக நடிக்க விரும்புவோர் நடனத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தமிழைத் தெளிவாகப்பேச வேண்டும் என்று ஒரு பேட்டியில் எம்.ஜி.ஆர். நடனத்தை அடிப்படைத்

தகுதியாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும், மஞ்சுளாவை ஐந்து வருடத்துக்கு ஒப்பந்தம் செய்தபோது அவருக்குத் தனி ஆசிரியர் வைத்து நடனம் கற்பிக்கவும் ஏற்பாடு செய்திருந்தார். நடனப்பயிற்சியே கதாபாத்திரத்தின் உணர்ச்சியை உள்வாங்கிக் கொண்டு கண்களாலும் முகபாவத்தாலும் உடல் மொழியிலும் அவற்றைப் பிரதிபலிக்க உதவும் என்பதில் எம்.ஜி.ஆர். ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தார். அவர் நடிப்பில் அவர் தன் உடல் மொழியோடு நயன பாஷையையும் பொருத்தமாகச் சேர்த்திருப்பார். பாடல் காட்சிகளில் அவர் கண் அசைவு முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது.



காவல்காரன் படத்தின் காவல்நிலையக் காட்சியில் நம்பியார் தான் நிரபராதி என நிரூபிக்க முயலும்போது எம்.ஜி.ஆருக்கு அதிக வசனமே இருக்காது. அவரது கண் அசைவும் தலை அசைவும் அவர் பேச வேண்டிய வசனங்களைப் படம் பார்ப்போருக்கு உணர்த்திவிடும். திரை அரங்கில் ரசிகர், ரசிகைகள் இக்காட்சியை மிகவும் ரசித்துப் பார்ப்பர்.

சினிமாவில் நடனக்காட்சி

எம்.ஜி.ஆர் தன் படங்களில் பலவகையான நடனங்களை இடம்பெறச் செய்தார். அவர் ஒவ்வொரு ரசிகரும், ரசிகையும் அந்த நடனத்தை ரசிக்கும்படி மாற்றியமைத்தும் இருப்பார். நடனத்தில் இலக்கணம் நடன மேடையில் நடக்கும் நடன நிகழ்ச்சிக்குப் பொருந்தும். ஆனால், திரைப்படக்கலை மக்களின் ரசனை சார்ந்தது என்பதால் நடன இலக்கணத்தைவிட படம் பார்ப்போரின் ரசனையே முக்கியமாகும். அவர்கள் திரையரங்கை விட்டு வெளியே செல்லும்படி நடனக்காட்சி அமையக்கூடாது என்பதில் எம்.ஜி.ஆர். கவனமாக இருந்தார்.

நடனப் பயிற்சி

எம்.ஜி.ஆர். சாஸ்திரீயக் கலைகளில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர். அதனால், நாடகங்களில் நடிக்கும்போது கர்நாடக சங்கீதப் பயிற்சி பெற்றார். அவர் காரில் போகும்போது தியாகராஜ பாகவதர் பாபனாசம் சிவன், எம்.எஸ். சுப்பு லட்சுமி ஆகியோரின் பாடல்களை விரும்பிக்கேட்பார். அதுபோல நடனப் பயிற்சியும் பெற்றார். குமாரன் ஆசான் என்பவரிடம்

முறைப்படி நடனம் பயின்றார். ஸ்ரீமுருகன் படத்தில் நடிகை மாலதியோடு இணைந்து சிவதாண்டவம் ஆடினார்.



நாடகங்களில் பெண் வேஷம் ஏற்று நடித்து வந்த எம்.ஜி.ஆர். பின்னாளில் தனது மேக்கப் மேனாக வைத்துக்கொண்டராம் தாஸ் என்பவருடன் இணைந்து ஒரு நாடகத்தில் இருவரும் ஊர்வசியும் மேனகையுமாக நடனம் ஆடினர். மேடையில் மக்கள் முன்னிலையில், (சினிமாவில் இருக்கும் 'ரீடேக்' வசதிகள் இன்றி) நேரடியாக அழகாக நடனம் ஆடத்தெரிந்தவர் எம்.ஜி.ஆர். பின்னர் சினிமாவிலும் நடனக்காட்சிகள் சிறப்பாக அமைய வேண்டும் என்பதற்காகத் தேவைப்படும்போது உரிய நடனப்பயிற்சிகளை மேற்கொண்டார்.

வழுவூர் ராமையா பிள்ளை ஒரு பேட்டியில் சிறந்த "எம்.ஜி.ஆர். நடனக்கலைஞர் அவரது நடனங்களை அவரே

பெரும்பாலும் அமைத்துக் கொள்வார். நாங்கள் சொல்லித் தரவேண்டிய தேவையில்லை'' என்று தெரிவித்துள்ளார்.

நடன வகைகள்

எம்.ஜி.ஆர். தனது படங்களில் பல்வேறு நாட்டிய வகைகளை அமைத்து ரசிகர்களைக் கவர்ந்தார். லாவணி என்பது எதிர்பாட்டு பாடுவதாகும். அதாவது பாட்டுவடிவில் கேள்வி எழுப்பி பாட்டு வடிவில் பதில் அளிப்பதாகும். இதை என் அண்ணன் படத்தில் ஒரு நடனக்காட்சியாக அமைத்திருந்தார். சக்கரவர்த்தி திருமகன் படத்தில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனுடன் பாடல் காட்சியாக அமைந்திருக்கும். இதைத் தொடர்ந்து அடுத்துவரும் நடனப் போட்டியில் (ஆட வாங்க அண்ணாத்தே) இ.வி. சரோஜா மற்றும் சகுந்தலாவுக்கு இணையாக ஆடி வெற்றி பெறுவார்.

குடியிருந்த கோயில் படத்தில் பங்க்ரா நடனமும் மன்னாதி மன்னனில் பரதமும், தாயின் மடியில் படத்தில் பொய்க்கால் குதிரை ஆட்டமும் (ராசாத்தி காத்திருந்தா ரோசாபோலே பூத்திருந்தா), ரிக்ஷாக்காரன் படத்தில் உறுமிகொட்டுக்கான ஆட்டமும், பெரிய இடத்துப் பெண்ணில் மேலை நாட்டு நடனமும், எம்.ஜி.ஆர். ஆடியிருப்பார். உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் இந்தோனேஷியா நடன உடையில் பச்சைக்கிளி முத்துச்சரம் பாட்டில் டபுள் எக்ஸ் போஷர் காட்சியில் நடனகாட்சி அமைக்கப்பட்டிருக்கும்.

மதுரைவீரன், ராஜாதேசிங்கு, ஒளிவிளக்கு எம்.ஜி.ஆர். ஆடிய நடனம் ரசிகர்களிடம் பெரும்வரவேற்பைப் பெற்றுத்தந்தது. மதுரை வீரன் மற்றும் ராஜாதேசிங்கு படங்களில் பத்மினிக்கு இணையாக எம்.ஜி.ஆர். ஆடியிருப்பார். ஒளிவிளக்கு படத்தில் ஜெயலலிதாவுடன் சிங்காசிங்கி என்று

அழைத்தபடி ஆடுவார். திமுக அரசின் சாதனை விளக்கமாக இந்நடனக் காட்சி அமைந்திருந்தது. மூன்றுமே மாறுவேடக்காட்சிகளாகப் படத்தில் இடம் பெற்றன.

அரச கட்டளை படத்தில் நடனமும் சண்டையுமாக சென்றது ஆடிவா ஆடிவா ஆடிவா ஆடப் பிறந்தவளே ஆடி வா என்ற பாடல் காட்சி இடம்பெற்றது. இப்பாடல் காட்சி படத்திலும் நடனத்தை ரசிக்க வந்தவர்கள் இப்பாடலை மிகவும் ரசித்து கைதட்டுவதாகக் காண்பித்தனர். திரையரங்கிலும் இப்பாடல் பெரு வரவேற்புப் பெற்றது.



நடனத்தில் வீர விளையாட்டு அசைவுகள்

எம்.ஜி.ஆருக்கு நடனத்திலும் சண்டையிலும் சம அளவு ஈடுபாடு இருந்ததால் நடனக் காட்சிகளில் வீரவிளையாட்டு நடைகளை இணைத்திருப்பார். பறக்கும் பாவை படத்தில் முத்தமோ, மோகமோ என்ற கனவுப்பாடலில் காஞ்சனாவோடு ஆடும்போது அவர்கையில் "கலர் ரிப்பனைச் சுற்றுவது போலிருக்கும். அது சுருள்வாள் சுற்றுவதாகும். சுருள்வாள் என்பது இருபுறமும் கூர்மையான சுருள்சுருளாக உள்ள பல அடி நீளம் உடைய கத்தி இதைச் சுற்றும்போது தரையில் படாமல் சுற்ற வேண்டும். அப்போதுதான் வேகமாகவும் தடங்கல் இல்லாமலும் சுற்ற முடியும். இதை லாவகமாக எம்.ஜி.ஆர். அப்பாட்டில் சுற்றுவார். இதுவும் ஒரு நடனம் போலவே தோன்றும்.

எங்க வீட்டுப்பிள்ளை படத்தில் வரும் 'நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்' பாட்டில் சாட்டையை வீசியும் சொடுக்கியும் பாடும்போது சிலம்பாட்ட முறைப்படி அவர் கால்களை அடிவைத்து ஆடுவார். இந்தக் கால் வைப்பை சிலம்பாட்டக்காரர்கள் 'சவடு' (காலடிச்சுவடு) வைத்தல் என்பர், பின்னும் முன்னும் அடி வைத்து அவர் கையில் சவுக்கை வீசி ஆடி வருவது இரண்டு கால்களைப் பொருத்தமான இணைப்பாகும்.

நீரும் நெருப்பும் படத்தில் 'கடவுள் வாழ்த்து பாடும் இளம் காலை நேரக்காற்று'பாட்டுக்காட்சி முழுக்கவும் சிறுவர்களின் வீர விளையாட்டுப் பயிற்சிப் பாடலாக அமைந்தது. இப்பாடல் காட்சியில் சிறுவர்கள் பல்வேறு உடற்பயிற்சிகள் சண்டை பயிற்சிகள் செய்வதாகவும் அவர்களுக்கு இடையே எம் ஜி ஆர் கையில் இரண்டு வாள்களுடன் ஆடிப் பாடி வருவதாகவும் எடுக்கப்பட்டது.

குடியிருந்த கோயில் படத்தில் வரும் துள்ளுவதோ இளமை பாட்டுக்கான நடனம் வெளிநாட்டில் சிவப்பு துணியை வீசி மாட்டை மிரளச்செய்து அதை அடக்குவதை போல ராஜஸ்ரீயை எம் ஜி ஆர் சிவப்பு வெல்வெட் துணியை வீசிக் கவர்வதான நடன அசைவுகளுடன் அமைந்திருந்தது. இது மாடு பிடி விளையாட்டுடன் இணைந்த நடனக் காட்சி. சிலம்பாட்டம் ஒயிலாட்டம் போல ஒரு வீர விளையாட்டு நடனம்.

பொய்க் கால்குதிரை ஆட்டம்

'தாயின்மடியில்' படத்தில் எம்.ஜி.ஆர். ரேஸ் குதிரை ஜாக்கியாக நடித்திருப்பார். அதில் ஒரு மேடைக்காட்சியில் இவரும் சரோஜாதேவியும் பொய்க்கால் குதிரையாட்டம் ஆடுவார்கள்.

"ராசாத்தி பூத்திருந்தா, ரோசா போலே காத்திருந்தா

ராசாவும் ஓடி வந்தான் ராகத்தோடே பாடிவந்தான்

ராசாவே ராசாவே ராசாவே ராசாவே

ராசாத்தி ராசாத்தி ராசாத்தி ராசாத்தி"

என்ற பாட்டும் நடனமும் அந்தப்படத்தை அக்காலத்தில் ஓட வைத்தது. அந்தக் கதை ரசிகர்களுக்குப் பிடிக்காததால் படம் நூறுநாள் ஓடவில்லை. ஆனால், இந்தப் பாட்டில் எம்.ஜி.ஆரும் சரோஜாதேவி நாட்டுப்புறக்கலைஞர்களைப் போலவே முகபாவமும் உடலசைவும் காட்டி நடித்திருப்பார். இதைக் கண்டு ரசிக்க ரசிகர்கள் விரும்பினர். திரையரங்கிற்குச் சென்றனர்.

பங்க்ரா நடனம்

பஞ்சாபியர் அறுவடை முடிந்த பின்பு ஆடும் மகிழ்ச்சியான நடனம் பங்க்ரா நடனம் ஆகும். இந்த

நடனத்தைக் குடியிருந்தகோயில் படத்தில் அமைத்த போது சிறந்த நடனக் கலைஞரான எஸ்.விஜயலட்சுமிக்கு இணையாகதான் ஆட வேண்டும்'என்ற அக்கறையில் அவர் ஒருவாரம் பயிற்சி எடுத்துக் கொண்டார். படத்தில் அவரது தோற்றமும் நடன அசைவும் துள்ளலும் எல்.விஜயலட்சுமியை விடச்சிறப்பாக அமைந்திருந்தது. அது மிக நீண்ட பாடல் என்பதால் 'டபுள்சைட்'ரெக்கார்டு என்பார்கள். இந்த பாடலை பார்த்த இந்திக்காரரர் ஒருவர் இது போன்ற முழுமையான பங்க்ரா நடனம் இந்திப் படங்களில் கூட வந்ததில்லை என்றார்.

மேலை நாட்டு நடனம்

பெரிய இடத்துப்பெண் படத்தில் எம்.ஜி.ஆர். பட்டிக்காட்டு முருகப்பனாக இருந்து படித்த அழகப்பனாக மாறிய அறிமுகக் காட்சியில் சரோஜாதேவியைக் கவர்வதற்காக ஒரு மேலைநாட்டுநடனக்காட்சி அமைக்கப்பட்டது. அதில் எம்.ஜி.ஆர். ஆடவேண்டும் என்று இயக்குநர் ராமன்னா கூறியபோது அவர் மிகவும் தயங்கினார். "என் ரசிகர்கள் நான் மேலைநாட்டு நடனம் ஆடுவதை விரும்புவார்களா? என்று கேட்டார்." நிச்சயம் விரும்புவார்கள். இந்த நடனக் காட்சியைப் பிரமாதமாக எடுப்போம் என்று இயக்குநர் கூறவும் எம்.ஜி.ஆர் ஆட சம்மதித்தார். அந்தப் பாட்டும் நடனமும் ரசிகர்களின் மறக்க முடியாத பெட்டகக் காட்சியாகஅமைந்துவிட்டது.

அன்று வந்ததும் இதே நிலா – சச்சச்சா

இன்று வந்ததும் அதே நிலா – சச்சச்சா

என்று இருவரும் பாடிய ஜோடிப்பாட்டும் சச்சச்சாநடனமும் ரசிகர்களை மிகவும் கவர்ந்தது.

குறவன் குறத்தி நடனம்

ராஜ தேசிங்கு, மதுரை வீரன் படங்களில் எம் ஜி ஆறும் பத்மினியும் குறவன் குறத்தி வேடமிட்டு எதிரியின் இருப்பிடத்துக்குப் போய் எச்சரித்து விட்டு வரும் காட்சிகளில் குறவன் குறத்தி நடனம் இடம்பெற்றது. ஒளிவிளக்கு படத்தில் புதிய திமுக அரசின் பெருமைகளை எடுத்துரைக்கும் பாடளாக ஒரு குறவன் குறத்தி பாடல் காட்சி அமைந்தது. எம் ஜி ஆர் ஜெயலலிதா இருவரும் குறவர்களின் குடியிருப்புக்குள் போய் ஒளிந்து கொண்டு போலீசார் அவர்களை தேடி வரும் வேளையில் ''நாங்க புதுசா கட்டிக்கிட்ட ஜோடி தானுங்க நல்ல பாட்டு படிக்கும் வானம்பாடி தானுங்க'' என்று பாடுவதாக அமைந்த இக்காட்சி ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றது.

குழு நடனங்கள்

எம் ஜி ஆரைப் புகழ்ந்து பாடும் நடனக் காட்சிகள் ஊராரின் பங்கேற்புடன் இருப்பனவாகக் காட்டப்பட்டன. நம் நாடு படத்தில் வரும் வாங்கய்யா வாத்தியாரய்யா பாடல் காட்சி இதயக்கனி படத்தில் வரும் நீங்க நல்லா இருக்கோணும் நாடு முன்னேற பாடல் காட்சி பல்லாண்டு வாழ்க படத்தில் வரும் புதியதோர் உலகம் செய்வோம் போன்றவை, குழு நடனங்கள் இடம்பெற்ற பாடல் காட்சிகள் ஆகும். இவை தவிர ஓட்டல் அல்லது கிளப் நடனகளில் எம் ஜி ஆருடன் நடனக் குழுவினர் சேர்ந்தும் தனித்தும் ஆடுகின்ற நடனக் காட்சிகள் இடம்பெற்றன. பெரிய இடத்து பெண் படத்தில் வரும் அன்று வந்ததும் அதே நிலா, குடியிருந்த கோயிலில் வரும் 'என்னைத் தெரியுமா நான் சிரித்து பழகி கருத்தைக் கவரும் ரசிகன் என்னைத் தெரியுமா , நம் நாடு படத்தில் வரும் நினைத்ததை நடத்தியே முடிப்பவன் நான் நான் நான் , சிரித்து வாழ

வேண்டும் படத்தில் வரும் மேரா நாம் அப்துல் ரஹ்மான் மேரா நாம் அப்துல் ரஹ்மான் போன்ற பாடல் காட்சிகளில் குழு நடனங்கள இடம்பெற்றன..

புலியூர் சரோஜா பாராட்டிய “பிரேக் ’டான்ஸ்

டான்ஸ் மாஸ்டர் புலியூர் சரோஜா எம்.ஜி.ஆர். காலத்தில் டான்ஸ் மாஸ்டரின் உதவியாளராக இருந்தார். பின்பு, கமல் ரஜினி காலத்தில் மாஸ்டர் ஆகிவிட்டார். அவர் ஒரு பேட்டியில் எம்.ஜி.ஆரின் மேலை நாட்டு நடனத்திறமையைப்பாராட்டி ‘‘அன்பேவா’’படத்தில் நாடோடி, நாடோடி, போக வேண்டும், ஓடோடி, ஓடோடி’’ என்ற பாட்டில் எம்.ஜி.ஆர். ஆடிய நடனம் இன்றைய ‘பிரேக்’டான்சை விட சூப்பராக இருக்கும்’’, என்றார்.

டான்ஸ் மாஸ்டர்கள்

எம்.ஜி.ஆர் தன்படத்தில் டான்ஸ் மாஸ்டராக இருப்பவர்கள் தூய்மையான பழக்கவழக்கங்களோடு எளிமையான செயற்பாடுகளுடன் தொழில் பக்தி மிக்கவர்களாக இருக்க வேண்டும் என்பதில் அக்கறை காட்டினார். ஒருமுறை எம்.ஜி.ஆர். தன் குழுவினருடன் பம்பாய் போனபோது அங்குக் குடித்துவிட்டு வந்த டான்ஸ்மாஸ்டரை டிக்கெட் எடுத்துக்கொடுத்து உடனே சென்னைக்கு அனுப்பிவிட்டார். குடித்துவிட்டு வந்து தொழில் செய்வது தொழிலின் மீதானமரியாதையைக் கெடுத்துவிடும் என்று எம்.ஜி.ஆர். நம்பினார்.

ஓர் இளம் டான்ஸ் மாஸ்டர் ராமாவரம் தோட்டத்துக்கு எம்.ஜி.ஆர் படங்களில் வாய்ப்பு கேட்க பெரிய ‘ஒசி’ கார் ஒன்றில் வந்தார். எம்.ஜி.ஆர். அவரைத் திருப்பி அனுப்பி விட்டார். மீண்டும் அந்த டான்ஸ்மாஸ்டர் எம்.ஜி.ஆரை சத்யாஸ்

டூடியோவில் போய்ப் பார்த்தார். தன் படங்களில் அவருக்கு வாய்ப்பளித்தார். அவரும் எம்.ஜி.ஆருக்குச் சிறப்பாக நடனக்காட்சிகளை அமைத்தார். ஒரு நாள் எம்.ஜி.ஆரே அவருக்கு ஒரு பெரிய கார் வாங்கி பரிசளித்தார். அதன் பிறகு அவர் தன் சொந்த பெரிய காரில் வலம் வந்தார். அவர் தான் டான்ஸ் மாஸ்டர் சலீம்.

எம்.ஜி.ஆர் ஒரு படத்தில் ஒரே மாதிரி இரண்டு பாடல் / நடனக்காட்சிகள் அமைக்காமல் வித்தியாசங்களைப் புகுத்தியதால்தான் ரசிகர்கள் விசிலடித்து கைதட்டி அனைத்துக் காட்சிகளையும் ரசித்தனர்.

"எம்.ஜி.ஆர். அவர்களின் உள்ளம் மிகப்பெரியது. அது தங்கம் போன்றது. தங்கத்தை உருக்கி என்ன பொருளைச் செய்தாலும், அது அழகாகவே இருப்பதைப்போல அவருடைய நேர்மையான உள்ளம், எதில் ஈடுபட்டாலும் அதில் வெற்றி காணவே செய்யும்."

- அறிஞர் அண்ணா

3

இறைவா உன் மாளிகையில்
(சென்னை தீ விபத்துக்களின் போது உதவிய எம்.ஜி.ஆர்.)

''கடவுள் இல்லவே இல்லை,

கடவுளை நம்புகிறவன் முட்டாள்,

கடவுளை வழிபடுகிறவன் காட்டுமிராண்டி''

என்று பெரியார் பிரச்சாரம் செய்தது நெருப்பாகப் பரவி வந்த தமிழகத்தில் திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் கடவுள் நம்பிக்கை என்பது பகுத்தறிவுக்குப் பொருந்தாது என்று பிரச்சாரம் செய்து வந்தனர். அப்போது இளைஞர்கள் குறிப்பாக இந்துக்கள் தங்களுடைய புராணங்களை மற்றும் இதிகாசங்களைப் பற்றி வெளியில் பேசுவதற்கு கூச்சப்பட்டனர். இறை நம்பிக்கை, இறைவழிபாடு, சமயச் சடங்குகள் ஆகியவை மூடநம்பிக்கை சார்ந்தனவாகும். பகுத்தறிவு உடையவன் நன்மை எது தீமை எது என்று இனம் பிரித்து அறிய தெரிந்தவன் இறை நம்பிக்கை உள்ளவனாக இருக்க மாட்டான் என்றும் கட்சிகள் பிரச்சாரம் செய்து வந்தன. இவ்வாறான இறை மறுப்பு கருத்துக்களும் சமூக சீர்திருத்தக் கருத்துக்களும் வேகமாக பரவி வந்த காலகட்டத்தில் நெற்றியில் விபூதி பூசுவது, திருமண் இடுவது ஆகியன கேலிக்கூத்தாக பார்க்கப்பட்டன.

1967 திமுக ஆட்சிக்கு வந்ததும் அறிஞர் அண்ணா தமிழகத்தின் முதலமைச்சர் ஆனதும் இறைமறுப்ப கொள்கைகளும் குறிப்பாக இந்து மத சம்பிரதாயங்களை எதிர்த்து பேசுவதும் எள்ளி நகையாடுவதும் மிகுந்த செல்வாக்குப் பெற்றன. இந்துக்களே தங்களை பத்தாம்பசலிகள் என்றும் மூட நம்பிக்கை உடையவர்கள் என்றும் நம்பிக்கொண்டு இருந்தனர். 1965இல் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவுடன் நடிக்க ஆரம்பித்த பிறகு நம் நாடு [7-11-1969], என் அண்ணன் [12-5-1970], போன்ற படங்களில் இருவரும் கோயிலில் இருக்கும் காட்சிகள் இடம்பெற்றன. குறிப்பாக என் அண்ணன் படத்தில் 'நீ சாமியிடம் என்ன வேண்டிக்கிட்ட?' என்று எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவிடம் கேட்டபோது அவர் தங்களுடைய திருமணம் விரைவில் நடைபெற வேண்டும் என்று வேண்டிக் கொண்டதாக சொல்வார். அடுத்து ஜெயலலிதா எம்.ஜி.ஆரிடம் அதே கேள்வியைக் கேட்பார், அப்போது எம்.ஜி.ஆர். தன் தங்கையின் திருமணத்திற்காக வேண்டி கொண்டதாகச் சொல்வார். இறைவேண்டல் என்பதில் உள்ள நம்பிக்கை இந்த வசனத்தின் மூலம் வெளிப்படையாகத் தெரிய வந்தது.

எம்.ஜி.ஆரின் 100ஆவது படமான ஒளி விளக்கு [29-9-1968] படத்தில் எம்.ஜி.ஆர். ஒரு தீ விபத்தில் இருந்து சிறுமி ஒருத்தியை காப்பாற்றிய பிறகு தீக்காயங்களுடன் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் வேளையில் அந்தப் பகுதியை சார்ந்த மக்கள் அதுவரை அவரை திருடன் என்று ஏளனமாகப் பேசி வந்தவர்கள் எம்.ஜி.ஆர். தன உயிரைப் பொருட்படுத்தாமல் ஒரு சிறுமியை காப்பாற்றிய காரணத்தினால் அவர் உயிர் பிழைக்க வேண்டும் என்பதற்காக தத்தம் கடவுளரை வேண்டிக்கொள்வார்கள்.



தனிப்பட்ட வாழ்வில் காளி, முருகன், இயேசு கிறிஸ்து ஆகியோரை எம்.ஜி.ஆர். வணங்குவார் என்று அறிகிறோம். ஒளிவிளக்கு படத்தில் எம்.ஜி.ஆரை நம்பி அவருடன் ஒரே வீட்டில் வாழும் இளம் விதவையான சவுகார் ஜானகி எம்.ஜி.ஆர். உயிர் பெற்று வரவேண்டும் என்பதற்காக ''இறைவா உன் மாளிகையில் எத்தனையோ மணிவிளக்கு, தலைவா உன் பாதங்களில் என் நம்பிக்கையின் ஒளிவிளக்கு'' என்ற பாடலைப் பாடி முருகனிடம் வேண்டுவார். அப்போது சுற்றியுள்ள கிறிஸ்தவர், முஸ்லீம், சீக்கியர், பிராமணர் போன்றோர் தத்தம் கடவுளரை வணங்கும் காட்சிகள் காட்டப்படும். அனைத்து மதத்தினரும் ஜாதி மத பேதமின்றி எம்.ஜி.ஆருக்காக இறைவனை வேண்டுகின்ற காட்சி படம் வந்த காலத்தில் பெரிதாக பேசப்படாவிட்டாலும் அவர் அமெரிக்காவில் சிறுநீரக மாற்று சிகிச்சை பெற்ற போது தமிழகமெங்கும் இந்த பாடல் ஒலிக்காத டீக்கடை திரையரங்குகள் கிடையாது. மக்கள் அனைவரும் இந்தப் பாட்டை ஒரு தெய்வ கீதமாகக் கொண்டு பக்திப் பாடலாகக்

கருதி தினமும் திரும்பத் திரும்ப கேட்டு தங்களுடைய தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றினர்.

ஒளிவிளக்கு படத்தில் எம் ஜி ஆர் பிழைத்து கண் திறக்கும் முன்பு அங்கு அனாதையாக வசித்து வந்த ஒரு பாட்டில் இறந்து போவார். ஆவர் எம் ஜி ஆர் மீது மிகுந்த பாசம் வைத்திருப்பார். எம் ஜி ஆர் அமெரிக்காவில் சிகிச்சைக்கு போயிருந்த வேளையில் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியை அவரது காவலர்களே சுட்டுக்கொன்றனர். எம் ஜி ஆர் சிகிச்சை முடிந்து உடல் நலம் தெரி வந்த பொது அவரைப் பார்க்க இந்திரா காந்தி உயிருடன் இல்லை. எம் ஜி ஆர் உடல் நலம் அடைந்து வந்த போது அவர் மகன் ராஜீவ் காந்தி பிரதமராகி விட்டார்.

ஒளிவிளக்கு படம் வந்தபோது திமூக ஆட்சியின் சிறப்புகளை எடுத்துரைத்த "நாங்க புதுசா கட்டிக்கிட்ட ஜோடிதானுங்க" என்ற பாடல் மிகவும் பிரபலமாக இருந்தது. ஆனால் எம்.ஜி.ஆர். உடல் நலிவுற்ற போது அவர் அமெரிக்காவில் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என்ற சந்தேகம் எழுந்தபோது இறைவா உன் மாளிகையில் என்ற சோகப் பாட்டு மக்களிடையே அதிக வரவேற்பு பெற்று அதிக எண்ணிக்கையில் இந்த ஒலித்தட்டு விற்கப்பட்டு சாதனை படைத்தது.

எம்.ஜி.ஆர். மீண்டும் பழைய ஆரோக்கியத்துடன் தாய்நாடு திரும்ப வேண்டும் என்ற எண்ணத்தில் அவருடைய ரசிகர்கள், பெரியவர்கள், பெண்கள் ஆகியோர் பகிரங்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் அதுவரை பரப்பி வந்த இறை வழிபாடு, இந்து மத வழிபாடு ஒரு மூடநம்பிக்கை என்ற கருத்தினை உடைத்தெறிந்து விட்டு கோயில்களுக்கு வந்து கூட்டம்

கூட்டமாக வழிபாடுகள் நடத்தினர். பால்குடம் எடுப்பது, மொட்டை போடுவது, அலகு குத்தி தேர் இழுப்பது என பல சடங்குகளைப் பகிரங்கமாக செய்தனர். மற்ற மதத்தினரும் தங்கள் தேவாலயங்களிலும் வணக்க ஸ்தலங்களிலும் தத்தம் கடவுளரை வழிபட்டனர். இதனை நாம் இதற்கு முந்தைய நூல்களிலும் கட்டுரைகளிலும் எம்.ஜி.ஆரால் தமிழகத்தில் நடைபெற்ற ஆன்மிகப் புரட்சி என்று குறிப்பிட்டிருக்கிறோம்.

எம்.ஜி.ஆருக்காக இறை வழிபாடு நடத்துவதற்கு ஒளி விளக்கு படத்தில் காரணமாக இருந்தது ஒரு தீ விபத்து எம்.ஜி.ஆர். இதனை வெறும் படத்துக்காக மட்டும் காட்சியாக அமைக்கவில்லை. எங்கு மக்கள் இயற்கை பேரிடரால் தீவிபத்தால் இழப்புக்களை சந்தித்தால் உடனே அந்த இடத்தில்

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு



என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க உதவும் முதல் கரம் எம்.ஜி.ஆர். உடைய கரங்களாக இருந்தன. தீ விபத்தில் பாதிக்கப்பட்டோர் குறிப்பாக பெண்களும் குழந்தைகளும் எம்.ஜி.ஆரின் உடனடி உதவியை நன்றியுடன் இன்றும் நினைவுகூர்கின்றனர். பாதிக்கப்பட்ட பகுதியை சேர்ந்த வீடிழந்த பண்ட பாத்திரங்களை இழந்த துணிமணிகள் கருகிப் போய் மாற்று துணிக்குக் கூட வழியின்றி திகைத்த பெண்கள் அந்த வேளையில் எம்.ஜி.ஆர். கொடுத்த சில நூறு ரூபாய் நோட்டுக்களால் தங்கள் துயரத்தை தீர்த்து கொண்டனர். அவர்களால் உடனடியாக ஒரு குடிசை போட முடிந்தது. ஒரு மாற்றுத்துணிக்கு வழி கிடைத்தது. சில சட்டி பாத்திரங்கள் வாங்கி சோறாக்க வழி பிறந்தது. தங்கள் பிள்ளைகளின் பசியாற்றவும் பனி, மழை, வெயிலில் இருந்து பாதுக்காக்கவும் முடிந்தது. எனவே இப்பெண்கள் தங்கள் குல தெய்வமாக கருதி எம்.ஜி.ஆரை இன்று வரை பரம்பரை பரம்பரையாக ஆதரித்து வருகின்றனர்.

சென்னையில் அந்தக் காலங்களில் தீ விபத்து ஏற்பட்ட இடங்களில் எம்.ஜி.ஆர். செய்த உதவிகள் சிலவற்றை இங்கு எடுத்துக்காட்டலாம். ஒரு இடம் இரண்டு இடம் என்று இல்லாமல் எங்கு தீ விபத்து வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டாலும் உடனே எம்.ஜி.ஆர் பாதிக்கப்பட்ட பகுதிக்கு உணவு மற்றும் நிதி உதவி அளித்து விடுவார். அரசு ஆலோசனை கூட்டம் நடத்தி உதவி செய்ய முன் வருவதற்குள் எம்.ஜி.ஆரின் உதவியாளர்கள் அந்த பகுதி எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றங்களின் பொறுப்பாளர்கள் மூலமாக உதவிகளை அளித்துவிடுவர். எம்.ஜி.ஆர். தான் செய்யும் உதவிகளை ஏனோ தானோ என்று செய்யாமல் அன்போடும் அக்கறையோடும் உடனடியாக செய்யும் மனம் கொண்டவர்.

அதை புரிந்து கொண்ட அவரது உதவியாளர்களும் எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றப் பொறுப்பாளர்களும் விரைவாகவும் விவேகத்துடனும் பணியாற்றுவர். இந்தக் கட்டுரையில் நாம் காண்பது எம்.ஜி.ஆர். தனிக் கட்சி ஆரம்பிப்பதற்கு முன்பு திமுகவும் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு காங்கிரஸ் ஆட்சி காலத்தில் அவர் செய்த உதவிகள் ஆகும். அப்போது இவர் செய்த உதவிகள் திமுகவுக்கு வாக்குகளாகக் குவிந்தன.

1960 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் புளியந்தோப்பு என்ற பகுதியில் ஏழை எளிய மக்கள் சிறு குடிசைகள் அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் அந்த குடிசைகளில் தீவிபத்து ஏற்பட்டு எல்லாம் கருகிப் போயின. உடனே எம்.ஜி.ஆர். அப்பகுதியில் வாழும் மக்கள் மீண்டும் குடிசை அமைத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு 5000 ரூபாய் நிதியுதவி அளித்தார். அவர்கள் ஓரளவுக்கு நல்ல குடிசைகளா கட்டிக்கொண்டனர்.

1960 ஆம் வருடத்தில் சென்னை ஹாமில்ட்டன் பாலத்தின் அருகில் குடிசை போட்டு குடியிருந்த ஏழை எளிய ஜனங்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய துயரம் ஏற்பட்டது. யார் வீட்டிலோ சோறாக்க பற்ற வைத்த அடுப்பிலிருந்து ஒரு பொறி பறந்தது, சுவரில்லாத அந்த குடிசையில் பட்டு தீ குடிசைக்கு குடிசை பரவி அங்கிருந்த குடிசைகள் அனைத்தும் எரிந்து சாம்பலாகின. திருடன் புகுந்த வீட்டில் ஏதாவது மிஞ்சும், ஆனால் தீ புகுந்த வீட்டில் எதுவும் மிஞ்சாது என்ற பழமொழிக்கிணங்க அனைவரும் உடுத்திய துணியுடன் நெருப்பு காயங்களுடன் அனாதையாக நின்ற போது எம்.ஜி.ஆர். தன் சொந்தப் பொறுப்பில் தன் சொந்தப் பணத்தில் இருந்து அவர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள மூவாயிரம் ரூபாய் வழங்கினார்.

1961 ஆம் ஆண்டு சென்னையில், ஆழ்வார் பேட்டையில் உள்ள மௌபரிஸ் சாலையில் திடீரென்று ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 75 குடிசைகள் தீக்கிரையாயின. அந்த குடிசைகளில் வாழ்ந்து வந்த 300க்கும் மேற்பட்ட மக்கள் வீடு இழந்து அனாதையாகத் தவித்தனர். அங்கிருந்த எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றத்தினர் மூலமாக எம்.ஜி.ஆர் இத்தகவலை அறிந்ததும் உடனே பாதிக்கப்பட்ட மக்களை நேரில் போய்ச் சந்தித்து அவர்களுக்கு உணவு சமைத்து வழங்குவதற்கு மூன்று மூட்டை அரிசி வழங்கினார். பின்பு அங்கு சொந்த இடத்தில் வீடு கட்டி இருந்தவர்களுக்கு புது வீடு கட்டுவதற்கு ஒவ்வொருவருக்கும் 300 ரூபாய் வழங்கினார். 300 ரூபாயில் அந்தக் காலத்தில் நல்ல மண் சுவர் வைத்து, உயரமான வாசல் வைத்து குடிசை போட்டுக் கொள்ளலாம். இது போன்ற பகுதிகளில் குடிசை போட்டு இருப்பவர்கள் சுவர் இல்லாமல் வீடு கட்டி இருப்பார்கள். ஆனால் எம்.ஜி.ஆர். 300 ரூபாய் கொடுத்ததும் அவர்கள் வசதியாகத் தங்கள் வீடுகளை கட்டிக்கொண்டனர்.

சென்னையில் எங்கு விபத்து ஏற்பட்டாலும் எம்.ஜி.ஆர். உடனடியாக அவ்விடத்திற்கு சென்று மக்களுக்கு ஆறுதல் கூறி அவர்களுக்கு பண உதவியும் பொருளுதவியும் செய்யும்போது அங்கு அனைத்தையும் இழந்து குழந்தைகளோடு தவித்துக் கொண்டிருக்கும் பெண்கள் எம்.ஜி.ஆரின் ரசிகர்களாக மாறிவிடுவது தவிர்க்க இயலாதது. அவர்கள் எம்.ஜி.ஆரின் உதவிக்கு நன்றி காட்டும் வகையிலும் அத்தருணத்தில் எம்.ஜி.ஆரின் சொல்லுக்கு மதிப்பளிக்க வேண்டும் அவர் சொல்லும் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்ற மன உறுதிக்கு உள்ளாகின்றனர். அந்தக் காலத்தில் எம்.ஜி.ஆரின் பிரச்சாரத்தை கேட்டு திமுகவுக்கு வாக்களித்த இவர்கள்

பின்னர் எம்.ஜி.ஆர். அண்ணா திமுக ஆரம்பித்ததும் அந்தக் கட்சியின் வாக்காளர்களாக மாறி விட்டதில் வியப்பேதும் இல்லை. ஆபத்பாந்தவனாக அனாதை இரட்சகனாக எம்.ஜி.ஆர். அவர்களின் கண்களுக்கு தெரிந்ததால் அவர் தனி கட்சி தொடங்கும் முன்பே அவருக்கு அதிகளவில் ஆதரவு இருந்தது. எம்.ஜி.ஆர். விரல் நீட்டும் கட்சிக்கு வாக்களிக்க மக்கள் தயாராக இருந்தனர். அவர் இருக்கும் கட்சியையே தங்களின் கட்சியாகக் கருதினர்.

சினிமாவில் நடித்துக் கொண்டிருக்கும்போது தீ விபத்துக்கள் ஏற்பட்ட பகுதியில் ஓடிப்போய் உதவி செய்த எம்.ஜி.ஆர் பின்னர் கட்சி தொடங்கி அரசியலுக்கு வந்ததும் மாஸ்கோவிற்கு திரைப்பட விழாவிற்கு சிறப்பு அழைப்பின் பேரில் சென்றிருந்தார் அங்கு அவர் நடித்த இதயக்கனி படம் வெளியிடப்பட்டது. ரஷ்ய அரசு அவருக்கு கவுரவம் அளிக்கும் வகையில் அவருக்கு சிறப்பு விருந்து ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. அப்போது அவரிடம் ‘‘உங்களது சமூக அக்கறை மற்றும் சமூக பொறுப்புணர்ச்சியை நாங்கள் மிகவும் பாராட்டுகின்றோம், உங்கள் சமுதாயத்திற்கு நாங்களும் உதவி செய்ய விரும்புகின்றோம் எங்களுடைய பங்களிப்பு என்னவாக இருக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்’’ என்று கேட்டார்கள். அதற்கு எம்.ஜி.ஆர். எங்கள் ஊரில் பல குடிசைகளில் கூரை தென்னை ஓலையில் இருப்பதனால் அடிக்கடி தீ விபத்து ஏற்பட்டு எரிந்துவிடுகின்றன. அங்கு வாழும் ஏழை மக்கள் குடியிருக்க வீடு இல்லாமல் சிரமப்படுகின்றனர் நீங்கள் எங்களுக்கு ஆஸ்பெஸ்டாஸ் கூரை போடக்கூடிய உதவியை செய்தீர்கள் என்றால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பாதுகாப்பான வீடுகளில் வசிக்க முடியும் என்று கேட்டார். உடனே ருஷ்ய அரசு இரண்டு கோடி ரூபாய் அவருக்கு வழங்கியது.

அந்தப்பணம் ஏழைகளின் குடிசைகளை மாற்றி ஆஸ்பெஸ்டாஸ் சீட் போடுவதற்கு உதவியது. தன்னால் முடிந்தவரை, ஏழை மக்களுக்கு தீ விபத்து ஏற்படும்போது அவர்களுக்கு உதவிய எம்.ஜி.ஆர்., அயல்நாடுகளுக்கு போகும்போது கூட நம்முடைய மக்களுக்கு என்ன செய்ய வேண்டும் எந்த வகையில் இந்த பயணத்தை நாம் நம்முடைய மக்களின் நன்மைக்காக பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற சிந்தனையில் செயல்பட்டு அங்கிருந்து இரண்டு கோடி ரூபாயை பெற்று ஏழை மக்களுக்கு தீப்பிடிக்காத கூரைவேய்ந்து கொடுத்தார்.

எம்.ஜி.ஆரின் உதவியினால் கூரை குடிசைகளில் வாழ்ந்த குடும்பங்கள் எம்.ஜி.ஆருக்கு என்றென்றும் நன்றிக் கடன்பட்டதாக உணர்ந்தன. இவர்களின் வாரிசுகள் இன்றைக்கும் எம்.ஜி.ஆருக்கு விசுவாசமாக இருக்கின்ற வகையில் அவருடைய கட்சிக்கு வாக்களிப்பது தம்முடைய கடமையாகும் எனக் கருதுகின்றனர். ஏழைப் பங்காளனாக எம்.ஜி.ஆர். வாழ்ந்ததைத் தெரிந்து கொண்டதால் பெண்களின் ஆதரவு இன்றைக்கும் அமோகமாக இருக்கிறது.

ஒரு முறை ஒரு பத்திரிகை பேட்டியில் உங்களுக்கு மட்டும் மக்களை ஆதரவு அமோகமாக இருப்பதற்கு என்ன காரணம் என்று கேட்ட போது எம்.ஜி.ஆர், "என்னுடைய சினிமா நடிப்பு வேறு, என் நிஜ வாழ்க்கை வேறு என நான் அமைத்து கொள்ளவில்லை. நான் சினிமாவில் காட்டுவதையே என் வாழக்கையிலும் பின்பற்றுகிறேன் அதனால் மக்கள் எனக்கு அமோக ஆதரவு தருகின்றனர்" என்றார். இதுவே எம்.ஜி.ஆர் மகளிர் போற்றும் மக்கள் தலைவராக இருப்பதன் மாபெரும் வெற்றி ரகசியம் ஆகும்.

4

மகளிர்க்கென தனிப் பேருந்து முதல் பற்பல நன்மைகள் செய்த எம்ஜிஆர்.

“ஆண்டவன் உலகத்தின் முதலாளி

அவனுக்கு நான் ஒரு தொழிலாளி”

என்று தொடங்கும் பாடலில்

இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும்

இலக்கணம் படித்தவன் தொழிலாளி,

என்று தொழிலாளியின் வறுமையிலும் செம்மை என்ற ஒழுக்கத்தினையும் கட்டுப்பாட்டினையும் சிறப்பித்துப் பாடும் எம்.ஜி.ஆர்., அந்த படத்தில் பட்டப்படிப்பு படித்துக் கொண்டே கைவண்டி இழுத்து தன் தாயை காப்பாற்றுவார். பின்பு ஒரு பஸ் கம்பெனியில் நடத்துனராக சேர்வார். தன் பெற்ற தாயை கூட ஏற்ற இடம் இல்லாததால் அவரை அந்த பேருந்தில் ஏற்றாமல் கடமை உணர்வோடு பணியாற்றும் இவருடைய பொறுப்புணர்ச்சியை கண்டு மகிழ்ந்த முதலாளி, அவரை அடுத்து பரிசோதனை அதிகாரியாக (செக்கிங் இன்ஸ்பெக்டர்) பதவி உயர்த்துவார். இதற்கிடையே எம்.ஜி.ஆர். பஸ் கம்பெனி உரிமையாளரின் மகள் இவரை

ஒருதலையாக காதலிப்பதால் அவள் தன் தந்தையிடம் ''இவருக்கு மேலாளர் பொறுப்பை வழங்கலாமே'' என்று பரிந்துரைப்பார். இவருடைய நேர்மை மற்றும் கடமை உணர்ச்சியில் மகிழ்ந்து போயிருந்த முதலாளி இவரை மேலாளராக நியமித்து விடுவார்.

''தொழிலாளி'' படத்தில் ஒரு பஸ் கம்பெனியில் நடத்துனராக சேர்ந்த எம்.ஜி.ஆரின் சீரிய தலைமையில் அனைவரும் செயல்பட்டு பின்னர் முதலாளியாகி விடுகின்றனர். ஒரு பிரச்சனையில் எம்.ஜி. ஆரும் அவரது சக பணியாளர்களும் கூண்டோடு வெளியேற்றப்பட்டு வழக்கு நடத்தி வழக்கில் வெற்றி பெற்ற தொழிலாளர்கள் தங்களுக்கு கிடைத்த இழப்பீடு பணத்தை கொண்டு புதிதாக பஸ்கள் வாங்கி அவர்கள் கூட்டுறவு முறையில் ஒரு பஸ் கம்பெனி நடத்துகின்ற அளவுக்கு உயர்ந்து விடுகின்றனர். இது ஒரு திரைப்படக் கதை என்றாலும் கூட இப்படி நடக்க வாய்ப்பில்லை என்று எவராலும் சொல்ல இயலாது. பல பெரிய நிறுவனங்களில் இன்றைக்கு முதலாளியாக இருப்பவர்கள் ஒரு காலத்தில் அங்கு தொழிலாளியாக வேலை பார்த்தவர்கள் தான் ஆக தொழிலாளியாக சேர்ந்து வேலை நுட்பங்களைக் கற்றுக்கொண்டு பின்பு முதலாளியாக பரிணமிப்பது என்பது இயற்கையில் நடக்கக் கூடிய ஒன்று தான். நடக்காத ஒன்றை எம்.ஜி.ஆர். இந்த படத்தில் எடுத்துக் காட்டவில்லை.

தொழிலாளி படத்தில் பெண்களுக்கு உட்கார இடம் கொடுக்க வேண்டும். பேருந்துக்குள் இருக்கும் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்களை ஏற்ற வேண்டும், பேருந்தை அதற்கு நியமிக்கப்பட்ட

வேகத்தில் தான் ஓட்ட வேண்டும். ஓவர் ஸ்பீடு போகக்கூடாது. நிறுத்தத்தில் வண்டியை நிறுத்த வேண்டுமே தவிர, அதை கடந்து கொண்டு போய் நிறுத்தம் இல்லாத இடத்தில் நிறுத்தக்கூடாது. ஓட்டுநரும் நடத்துநரும் சீருடையில் தலையில் தொப்பி போட்டு இருக்க வேண்டும். வண்டியில் பணியில் இருக்கும் நேரத்தில் பீடி சிகரெட் பிடிக்கக்கூடாது. நடத்துனர் பயணியர் ஏறிய உடனேயே அவர்களுக்கு பேருந்து சீட்டை வழங்கி விட வேண்டுமே தவிர அவர்களுக்கு காலம் தாழ்த்தி வழங்கக் கூடாது என்று பல சரியான நடைமுறைகள் எடுத்து காட்டப்பட்டிருக்கும்

இப்படத்தில் எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடிப்பதால் ஒரு நடத்துனருக்கு உரிய அனைத்து பொறுமையும் கடமை உணர்ச்சியும் ஒரு பஸ் கம்பெனி மேலாளருக்கு உரிய கண்டிப்பும் கருணையும் பரிசோதனை அதிகாரியாக வரும்போது உரிய பொறுப்புணர்ச்சியும் காட்டி மிகச் சரியாக ஒரு முன்மாதிரி கதாபாத்திரமாக தன்னை எடுத்துக் காட்டி இருப்பார். தொழிலாளியாக இருப்பவன் தொழிலாளியாகவே வாழ்நாள் முழுவதும் இருந்து இறந்துவிடக்கூடாது. “வெந்ததைத் தின்று விதி வந்தால் சாகும் வாழ்க்கை” அவனுக்கு அமைந்துவிடக்கூடாது. அவன் படிப்படியாக முன்னேறி வாழ்வின் உச்சக்கட்டங்களை தொட்டுப் பார்க்க வேண்டும் என்று ஒரு முன்னேற்றம் நோக்கிய, மேம்பாடு சார்ந்த சிந்தனையையும் இப்படம் புலப்படுத்தும்.

ஏழைகளிடமும் பெண்களிடமும் இரக்கம் காட்ட வேண்டும் என்பதை தன் வாழ்நாளில் கொள்கையாகக்



கொண்டிருந்த எம்.ஜி.ஆர். தான் முதல்வர் ஆன பிறகும் இக்கொள்கையை இம்மியும் மாறாமல் பின்பற்றி வந்தார் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டை முன்வைத்தால் அவர் பெண்களின் பேராதரவை பெற்ற ரகசியம் நமக்கு புலப்படும்.

முதல்வர் எம்.ஜி.ஆர். மாலை 3 மணிக்கு கோட்டையிலிருந்து தன் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது குயின் மேரிஸ் கல்லூரி வாயிலில் சுமார் முன்னூறு நானூறு பெண்கள் ஐந்தாறு பேராக கூட்டம் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். எம்.ஜி.ஆர். ஓட்டுனரிடம் வண்டியை ஓரமாக நிறுத்து என்று சொல்லிவிட்டு நடைபாதையில் நின்று பேசிக்கொண்டிருந்த பெண்களில் ஒருவரை அழைத்து, “என்ன ஆயிற்று ஏன் இப்படி கூட்டமாக தெருவில் நிற்கிறிர்கள்” என்று கேட்டார். அந்தப் பெண் சார், “பஸ் இன்னும் வரவில்லை, கல்லூரி முடிந்து விட்டது பஸ்சுக்காக காத்து இருக்கிறோம்” என்று சொன்னாள். எப்போது கல்லூரி முடிந்தது? எத்தனை பஸ்கள் தினமும்

வருகின்றன? என்ற விவரங்களை எல்லாம் அந்த பெண்ணிடம் கேட்டவர், தன் காரில் இருந்த தன்னுடைய உதவியாளர், காவல்துறை அதிகாரி ஆகியோரிடம் சொல்லி பல்லவன் பேருந்து அதிகாரியிடம் பேசி உடனே பஸ்களை அனுப்பும்படி கூறினார். அவர்கள் பல்லவன் பேருந்து போக்குவரத்து கழக அதிகாரியிடம் தொடர்பு கொண்டு மாணவிகள் தெருவில் நீண்ட நேரம் நின்று, காத்துக் கொண்டிருப்பதை அறிந்த முதலமைச்சர் உடனே அவர்களை அனுப்பி வைக்கும்படி கூறியதாக தெரிவித்தனர்.

பத்து நிமிடத்தில் மூன்று பஸ்கள் அங்கு வந்து விட்டன. அதுவரை எம்.ஜி.ஆர். அங்கிருந்தவர்களிடமும் தன்னைப் பார்க்க அங்கு கூடியவர்களிடமும் அந்த பகுதியில் உள்ள பஸ் வசதிகளைப் பற்றி விசாரித்து தெரிந்து கொண்டார். வந்ததும் பெண்கள் அந்த மூன்று பஸ்களிலும் ஏறிச் சென்றுவிட்டனர்.

எம்.ஜி.ஆர். ஆட்சியில் தான் பெண்களுக்கென்று தனிப் பேருந்து, மகளிர் பேருந்து என்ற பெயரில் காலையிலும் மாலையிலும் அவர்கள் பள்ளிக்கூடம் கல்லூரி மற்றும் அலுவலகங்களுக்கு செல்வதற்கு வசதியாக விடப்பட்டது. சில கல்லூரிகளுக்கு, கல்லூரியின் உள்ளேயே சென்று பெண்களை, மாணவிகளை இறக்கிவிடும் வசதியும் செய்து தரப்பட்டது. சிறப்பு பேருந்துகளைக் கல்லூரிகள் குறிப்பிட்ட நேரத்தில் கேட்டுப் பெற்றுக் கொண்டன.

வேலைக்குச் செல்லும் பெண்கள் தன் குடும்ப பொருளாதார தேவைக்காக காலையிலும் மாலையிலும் பேருந்துகளில் செல்ல வேண்டியிருப்பதால் அவர்கள்

ஆண்களோடு சேர்ந்து அடிபட்டு நசுங்கி செல்லும் அவல நிலையிலிருந்து மாற்றவும் அவர்கள் கண்ணியமாக கவலையின்றி வேலைக்குச் செல்வதற்காகவும் எம்.ஜி.ஆர். தனி பேருந்துகளை அனுமதித்தார். இது போன்ற நுட்பமான சிறப்பு தேவைகளை உணர்ந்து பெண்களுக்கு அவற்றை நிறைவேற்றுவதில் எம்.ஜி.ஆர். தந்தையாகவும் தமையனாகவும் இருந்தார்.

பொதுவாக ஆண்களுக்கு தன் வீட்டு பெண்கள் மட்டுமே பஸ்ஸில் இடிபடாமல் பாதுகாப்பாக கண்ணியமாக போய் திரும்ப வேண்டும் என்ற அக்கறை அதிகமாக இருக்கும். பஸ்ஸிற்குள் சில விபரீதங்கள் விஷமங்கள் நடக்கும்போது அருகில் இருக்கும் ஆண்கள் பரிதாபப் படுவார்கள், ஓரிருவர் கோபமாக கூட பேசுவார்கள். ஆனால் இவையெல்லாம் தீர்வாகிவிடாது. பெண்களின் சிரமங்களைக் கண்ட எம்.ஜி.ஆர். அப்பெண்களை தன வீட்டு பெண்களாகக் கருதி அவர்களுக்கு நிரந்தரத் தீர்வாக தனிப் பேருந்துகளை அனுமதித்தார். எம்.ஜி.ஆர். இப்பெண்களை தனது வீட்டுப்பெண்களை போல நேசித்தார். மதித்தார். அதனால் அவர்களின் அன்றாட கவுரவப் பிரச்சனையை நிரந்தரமாக தீர்த்து வைத்தார்.

மகளிர் பேருந்துகளில் பயணம் செய்தவர்களில் நூற்றுக்கு தொண்ணூறு பேர் அதற்கு முன்பாக வேறு கட்சியின் ஆதரவாளர்களாக இருந்தாலும், மகளிர் பேருந்தில் பயணம் செய்யத் தொடங்கிய பின்பு அவர்கள் எம்.ஜி.ஆரின் ஆதரவாளர்களாக மாறிவிட்டனர். ஏனெனில், தினமும் அவர்கள் சந்தித்து வந்த, எதிர்கொண்ட அவமரியாதையான அவமானம் நிறைந்த

பிரச்சினைகளிலிருந்து அவர்களுக்கு ஒரு விடுதலை கிடைத்தது. பெண்கள் நிம்மதியாக பயணம் செய்வதற்கு எம்.ஜி.ஆர். உதவியதால் அவர்கள் எம்.ஜி.ஆரை மிக உயர்வாக மதித்து அவருக்குத் தேர்தலில் பிரதி உபகாரமாக தங்கள் வாக்குகளை அளித்தனர்.

அன்றைய தினத்தில் தெருவில் பெண்கள் கூட்டமாக பஸ்சுக்கு காத்திருப்பது கூட பொறுக்காத எம்.ஜி.ஆர். உடனே அவர்களுக்கு கல்லூரி முடிந்த பத்து நிமிடத்திலேயே அடுத்தடுத்து பேருந்துகள் வந்து அவர்களைக் கொண்டுபோய் விட்டுவிட வேண்டும் என்று பல்லவன் பேருந்து போக்குவரத்து அதிகாரிக்கு தெரிவிக்கும்படி செய்தார். தன் வீட்டு பிள்ளை தெருவில் நின்று கொண்டு பஸ் வராமல் காத்து இருந்தால் ஒரு தாயின் தந்தையின் மனம் என்ன பாடுபடுமோ அதே வேதனையை எம்.ஜி.ஆரும் உணர்ந்ததால் மட்டுமே இந்த தீர்வு கிடைத்தது. ஆங்கிலத்தில் *empathy* என்று ஒரு சொல் உண்டு. ஒருவர் படும் துன்பத்தை ஒருவர் படும் அவமானத்தை அடுத்தவர் தன்னுடைய துன்பமாக, தன்னுடைய அவமானமாக உணர வேண்டும். அப்படி உணரும்போது அவர்களுக்குச் செய்யும் உதவி தற்காலிகமானதாக இல்லாமல் நிரந்தரமானதாக இருக்கும். இந்த உணர்வு எம்.ஜி.ஆருக்கு எப்போதும் ஏழைகளிடமும் பெண்களிடமும் இருந்து வந்தது.

எம்.ஜி.ஆர். ஆட்சியில் பாலர் பள்ளிகளில் பெண்களை ஆசிரியர்களாக நியமிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அத்துடன் பெண்கள் ஆசிரியைகளாக இருக்கும் பள்ளிகளுக்கு அருகிலேயே சில கிலோமீட்டர் தொலைவுக்குள் அவர்களுடைய கணவருக்கும் பணி

மாற்றம் செய்து தர வேண்டும் என்ற உத்தரவும் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் பிறப்பிக்கப்பட்டது. இதனால் கணவனும் மனைவியும் அருகருகே இருந்தபடி தங்கள் வேலைகளைச் செய்து சேர்ந்து குடும்பத்தை நடத்தும் வாய்ப்பு பெற்றனர். ஆளுக்கொரு மாவட்டத்தில் அதிக தூரத்தில் இருந்து வேலை செய்தால் அந்த வேலையின் பலன் முழுமையாக கிடைக்காது. தாயும் தந்தையும் பிரிந்திருப்பதால் பிள்ளைகளும் வேதனைப்படுவார்கள் கணவன் மனைவிக்கிடையேயும் வருத்தங்கள் ஏற்படும் என்பதால் ஒரு இலட்சிய குடும்பத்தின் இலக்கணத்தை உணர்ந்த எம்.ஜி.ஆர். அனைவரும் இலட்சிய தம்பதியராக வாழ்வதற்கு தன்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் செய்தார். உத்தரவையும் பிறப்பித்தார். அவருடைய ஆட்சி ஒரு பொற்கால ஆட்சியாக மக்களால் உணரப்பட்டது. தன் மேல் மிகுந்த அன்பு கொண்ட ஒரு தந்தையும் தனயனும் ஆட்சி செய்வதை போலவே மக்கள் பாதுகாப்பாக உணர்ந்தனர். எம் ஜி ஆர் எது செய்தாலும் அதை சரியென ஏற்றுக்கொண்டனர்.

மத்திய அரசால் 20 அம்ச திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட போது குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஆசிரியர்கள் போய் ஆள் பிடித்துக்கொண்டு வரும் வேலை கொடுக்கப்பட்டது. அவர்கள் தங்கள் பணியை முடித்துக் கொண்ட பிறகு தாங்கள் வேலை பார்க்கும் கிராமங்களில் சென்று பெண்களையோ அல்லது ஆண்களையோ குடும்ப கட்டுப்பாடு செய்வதற்காக மருத்துவமனைக்கு அழைத்து வர வேண்டும். ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒரு

மாதத்திற்கு இத்தனை பேரை அழைத்து வரவேண்டும் என்று எழுதப்படாத விதி ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

1977இல் எம்.ஜி.ஆர். முதலமைச்சரானதும் ஆசிரியர்களை இதுபோன்ற வேலைகளில் ஈடுபடுத்தக்கூடாது, அவர்கள் ஓர் உன்னதமான பணியைச் செய்ய வந்திருக்கிறார்கள். அவர்கள் நம் பிள்ளைகளின் அறியாமை இருளை அகற்றி அறிவொளி பரப்ப வேண்டுமே அல்லாது ஆள்பிடிக்கும் வேலைக்கு அவர்களை அனுப்பி வைக்கக் கூடாது என்று எம்.ஜி.ஆர். ஒரு உடனடி உத்தரவு பிறப்பித்தார். அதன்பின்பு அரசுப் பள்ளி ஆசிரியர்கள் நிம்மதியாக ஆசிரியப் பணியை மட்டும் செய்தனர்.

எம்.ஜி.ஆர். படத்திலும் நிஜத்திலும் பெண்களுக்கு ஆதரவாகவே ஆரம்பம் முதல் இருந்து வந்துள்ளார். அவருடைய ஆட்சிக் காலத்தில் நூலகர்கள் அரசு ஊழியர் ஆக்கப்பட்டனர்

அரசு பள்ளிகளின் ஆசிரியை ஆசிரியர்கள் அரசு ஊழியராக தரம் உயர்த்தப்பட்டனர். அதற்கு முன்பு வரை அவர்கள் தாம் வேலை பார்த்த கிராமங்களின் பண்ணையார், மணியக்காரர், பெரிய வீட்டுக்காரர் போன்றவர்கள் மூலமாக சம்பளம் பெற்றதால் அவர்களின் தொல்லைகளுக்கும் கட்டுப்பாட்டுக்கும் அதிகாரத்துக்கும் ஆளாகி வந்தனர். இவற்றை அறிந்த எம்.ஜி.ஆர். உடனடியாக ஏழை குழந்தைகளிடம் அறிவொளி பரப்பும் ஆசிரியப் பெருமக்களின் பணியின் மேன்மையை உணர்ந்து அவர்களைப் பெரிய மனுஷ போர்வையில் திரியும் பசுத்தோல் போர்த்திய புலிகளிடம் இருந்து விடுவித்து, அரசு ஊழியர் ஆக்கினார். இனி

அவர்கள் உள்ளூர் லோக்கல் தாதாக்களுக்கு அஞ்சி நடக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது.

அரசு ஊழியர் என்ற பெருமித உணர்வோடு வந்து பெண்கள் அரசுப்பள்ளிகளில் ஆசிரியை பணி ஆற்றினர். கவுரவமாக வந்து பாடம் நடத்திச் சென்றனர். அரசு பள்ளிகளிலும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் சத்துணவுத் திட்டம் மூலமாக ஒரே நாளில் 10 ஆயிரம் பெண்களுக்கு குறிப்பாக ஆதரவற்ற பெண்கள், விதவைகள் கணவனால் கைவிடப்பட்டோர் போன்றவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலைவாய்ப்பு வழங்கியவர் இந்தியாவிலேயே எம்.ஜி.ஆர். ஒருவர் மட்டுமே. இதனாலும் பெண்களின் ஆதரவு அவருக்கு அன்று முதல் இன்று வரை தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கிறது.

எம்.ஜி.ஆரால் நன்மை பெற்ற பெண்கள் தங்களுடைய பிள்ளைகளையும் எம்.ஜி.ஆரின் ஆதரவாளராகவே வளர்த்து வந்தனர். பிள்ளைகள் பெரியவர்கள் ஆனதும் தங்கள் பிள்ளைகளை அண்ணா திமுக ஆதரவாளர்களாகவே உருவாக்கியதால் எம்.ஜி.ஆரின். வாக்குவங்கி சிதறாமல் இருப்பதை இன்றும் காண்கிறோம்.

“எம்.ஜி.ஆர். என்றேனும் ஒருநாள், ஒருக்கால் அரசியலில் பொறுப்பேற்றுச் செயல்படுவாரேயானால், அதிலும் அவரது தனி முத்திரை பதிக்கப்படும் என்பது தெளிவு.”

- அறிஞர் அண்ணா

5

பெண்களின் ஆதரவு குறைந்த படங்கள்

எம்.ஜி.ஆர் வசூல் சக்கரவர்த்தி என்றும் மினிமம் கேரண்ட்டி ராமச்சந்திரன் (MGR) என்றும் அவரது படங்களின் வெற்றியால் பெயர் பெற்றிருந்தாலும் சில படங்கள் நூறு நாட்கள் ஓடவில்லை. வசூலை அள்ளிக் குவிக்கவில்லை அதற்கான முக்கிய காரணம் சில படங்கள் பெண்களின் அமோக ஆதரவை பெறவில்லை. எம்,ஜி,ஆரின் படங்கள் அனைத்துமே தயாரிப்பாளருக்கு இலாபம் தந்தன. எம்,ஜி,ஆர், படம் ஓடாமல் நஷ்டம் ஏற்படுத்தியது என்ற நிலை எப்போதுமே இருந்ததில்லை. அதனால் தான் ஒரு படம் எடுக்கும் போது சிரமப்படும் தயாரிப்பாளர் கூட அந்த படத்தின் இலாபத்தை பார்த்ததும் பட்ட துன்பங்களை மறந்துவிட்டு அடுத்து எம்,ஜி,ஆரை வைத்து மறு படம் எடுத்தனர். அவரது படங்கள் சில நீண்ட காலத் தயாரிப்பில் இருந்தாலும் அவற்றால் இழப்பு அல்லது நஷ்டம் என்ற பேச்சுக்கே இடமில்லை. எம் ஜி ஆர் படங்களை குறைந்த இலாபம் தந்தவை அதிக இலாபம் தந்தவை மிக மிக அதிக இலாபம் தந்தவை என்று தான் பிரிக்க முடியும்பெண்களின் ஆதரவு குறைந்ததால் இலாபம் குறைந்த படங்களை பார்க்கலாம்.

பாசம், தாயின் மடியில், என் கடமை, மாடப்புறா, நான் ஆணையிட்டால், ராஜாதேசிங்கு, பட்டிக்காட்டு பொன்னையா, ராணி சம்யுக்தா, நீரும் நெருப்பும், கலையரசி, தலைவன் போன்றவை நூறு நாட்கள் ஓடவில்லை. மறுவெளியீடுகளில் வெற்றிவாகை சூடிய அரசகட்டளை, மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் படங்கள் முதல் வெளியீட்டின்போது பெருவெற்றி பெறவில்லை.

பாசம், ராஜா தேசிங்கு, நீரும் நெருப்பும், ராணி சம்யுக்தா போன்ற படங்களில் எம்.ஜி.ஆர். இறந்து விடுவதாகக் கதை அமைந்திருந்ததால் எம்.ஜி.ஆர். ரசிகைகள் இவற்றைப் பார்ப்பதில் ஆர்வம் காட்டவில்லை. என் கடமை, அரசியல் காரணத்தால் பாதியிலேயே திரையரங்கை விட்டு வெளியேற்றப்பட்டது. தாயின் மடியில், பட்டிக்காட்டுப் பொன்னையா ஆகியன பெண்களின் ஆதரவு குறைந்ததால் ஓடவில்லை. கலையரசி, தலைவன் படங்கள் அறிவியல் புரட்சி செய்திருந்தாலும் மக்கள் படம் வெளியான காலகட்டத்தில் அவற்றை நம்பத் தயாராக இல்லாததால் அவையும் பெருவெற்றி பெறவில்லை.

எம்.ஜி.ஆர். சாவதா?

காலத்தை வென்றவனாகவும் வெற்றித் திருமகனாகவும் நம்பப்பட்ட எம்.ஜி.ஆர் நிஜத்தில் சாவார் என்பதை மக்கள் நம்பத் தயாராக இல்லாத காலத்தில் படத்தில் அவர் சாவார் என்பதை எவரும்

ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. எம் ஜி ஆரை தன மகனாகக் கருதிய வயதான பெண்கள் எம் ஜி ஆர் படத்தில் சாவதை பார்க்க வேதனைப்பட்டனன்ர். அவரது அழகு முகத்தை காண அடிக்கடி திரையரனகத்துக்கு வந்த பெண்கள் ஆவர சாவை காண அஞ்சி அந்தப் படங்களை பார்ப்பதை தவிர்த்துவிட்டனர். எம் ஜி ஆர் என் ரசிகர், ரசிகைகள் நான் சாவதை விரும்பமாட்டார்கள் என்று 'பாசம்' படத்தின் இயக்குனர் டி.ஆர்.ராமண்ணாவிடம் எம்.ஜி.ஆர் கூறியபோது இயக்குனர் அவர் கருத்தின் உண்மையை உணர மறுத்துவிட்டார். எம்.ஜி.ஆர் சாவதைப் பார்த்த இரசிகர், ரசிகைகள் ஆர்ப்பாட்டம் செய்து திரையைக் கிழித்தனர். திரையரங்கு உரிமையாளர் படத்தை எடுத்துவிட்டார். பாசம் படத்தில் பாடல்கள் ஆறும் தேனாறுகளாகப் பாய்ந்தும் எம்.ஜி.ஆரை படம் முழுக்க அழகற்றவராக, திருடனாக, இடதுகை பெருவிரல் நகத்தைக் கடிப்பவராக, நண்பனின் தங்கையை ஒருதலையாகக் காதலிப்பவராக, தன்னை காதலிக்கும் நாட்டியக்காரி மஞ்சுவை (சரோஜாதேவி) ஏற்க மனமில்லாதவராக வந்ததால் ரசிகர், ரசிகைகளால் படத்தை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. வசூல்ரீதியாக படம் தோற்றாலும் எம்.ஜி.ஆரின் "திருவாய்க்கு மறுவாய் ஏது" என்ற நிலை தோன்றியது. அதற்குப் பிறகு அவர் கருத்துக்கு எதிர்கருத்து தோன்றவில்லை. இந்தப் படத்தில் வந்த எம் ஜி ஆர் பெண்களின் மனம் கவர்ந்த கதாபாத்திரத்தை ஏற்கவில்லை.

மதுரை வீரன் 'மேஜிக்'

தமிழகத்தில் அதிக பிரிண்ட்கள் போட்டு வெற்றி விழா கொண்டாடிய "மதுரை வீரன்" படத்தில் மாறுகால் மாறுகை (இடதுகால் வலது கை வெட்டுப்படல்)

வாங்கியதால் மதுரைவீரன் செத்த காட்சி இடம்பெற்றதே என்று கேட்கலாம். அந்தப் படத்தில் எம்.ஜி.ஆர் செத்துக்கிடக்கும் போது பொம்மியும் வெள்ளையம்மாளும் அழுது உயில் விடுவர். உடனே மூவரும் தெய்வமாகி காட்சி அளிப்பதாக படம் நிறைவுறும். எம்.ஜி.ஆர் தனது கட்சிக்கொள்கை காரணமாக தெய்வக்காட்சியில் நடித்திருக்க மாட்டார். ஆனாலும் அவர் தெயவமாகிவிட்டதால் ரசிகர், ரசிகைகள் சமாதானம் அடைந்தனர். படம் முழுக்க ரசனைக்குரியதாக எடுக்கபட்டிருந்ததால் படம் வெற்றிவிழா கொண்டாடியது. மற்றும் கதையின் முடிவு அவர் தெய்வமாகிவிடுவார் என்பதை தெரிந்துகொண்டு வந்ததால் பெண்களால் மதுரை வீரனை தெய்வப் படம் போல பார்த்து ரசிக்க முடிந்தது.

ராஜா தேசிங்கு படத்தில்

ராஜா தேசிங்கு படத்தில் நண்பன் மகமத்கான் பாத்திரப்படைப்பின் முக்கியத்துவம் குறைந்துவிடும்படி தேசிங்குக்கு மூத்த அண்ணனாக இன்னொரு எம்.ஜி.ஆர் கதாபாத்திரம் உருவாக்கப்பட்டது. படத்தின் இறுதியில் இந்த இரண்டு எம்.ஜி.ஆர்களும் (ஒருவரின் தாய் முஸ்லீம், அடுத்தவரின் தாய் இந்து) சண்டையிட்டு இறந்து விடுவர். சண்டைக்காட்சி வெகு சிறப்பாக எடுக்கப்பட்டிருந்தாலும் முடிவு மரணம் என்பதால் ரசிகர், ரசிகைகள் இதை விரும்பவில்லை. ஒரே தகப்பனுக்கு பிறந்த பிள்ளைகளான இரண்டு எம்.ஜி.ஆறும் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டு மடிவதை எந்தப் பெண்ணாலும் ரசிக்க முடியவில்லை. இரண்டு எம்.ஜி.ஆரையும் தங்களுக்கு வேண்டியவராககவே பார்த்ததால் யாருடைய சாவையும் அவர்களால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

எம்.ஜி.ஆருக்கு இப்படத்தில் ஜோடியாக வரும் பானுபமதி அவருக்குப் பெரியம்மா போலக் காட்சி அளிப்பார். ரசிகர், ரசிகைகளால் அதையும் ரசிக்க இயலவில்லை.

கண்ணதாசன் கதைவசனம் எழுதி இந்தப்படம் தொடங்கப்பட்ட போது தமிழ், தெலுங்கு இரண்டிலும் தயாராகும் எண்ணம் இருந்தது. தமிழில் தேசிங்காக எம்.ஜி.ஆரும், மகமத்கானாக என்.டி.இராமாராவும் நடிக்க இருந்தனர். இவர்களுக்கு ஜோடியாக பத்மினியும் பானுமதியும் ஒப்பந்தமாகி இருந்தனர். மகமத்கான் பேச வேண்டிய வசனங்களைப் படித்துப் பார்த்த கலைவாணம், எஸ.எஸ். ஆரால் மட்டுமே இந்த வசனங்களைச் சிறப்பாகப் பேசமுடியும் என்று சொல்லி என்.டி.ஆரை மாற்றி எஸ்.எஸ்.ஆரைக் கொண்டு வந்தார். என்.டி.ஆர். அதன் பின்பு தமிழ்த்திரையை முற்றிலுமாக ஒதுக்கி விட்டு தெலுங்கில் சூப்பர் ஸ்டார் ஆகிவிட்டார். பழைய நாடகக் கதை ஒன்றை படமாக எடுத்தனர். அந்த நாடகம் அந்தக் காலத்தில் வெற்றி பெற்றிருந்தாலும் எம் ஜி ஆருக்கு இக்கதை பொருந்தவில்லை. இரண்டு எம்.ஜி.ஆர்கள் தகக்குள் பகை கொண்டு சண்டைபோடும் படங்கள் ஓடியதாக சரித்திரம் இல்லை. இதற்கு இன்னொரு உதாரணம் நீரும் நெருப்பும்.

நீரும் நெருப்பும்

மணிவண்ணன், கரிகாலன் என்ற இரு வேடங்களில் எம்.ஜி.ஆர் நடித்த நீரும் நெருப்பும் படம் அவரது இளமைக்காலக் கனவுப்படம் ஆகும். தன் குருநாதரின் மகன் எம்.கே. இராதா நடித்த இரு சகோதரர்கள் படத்தைப் பார்த்து ரசித்த எம்.ஜி.ஆர். தான் அப்படத்தின்



நீரும் நெருப்பும்

கதையில் நடித்து வெளியிட்டார். எம்.ஜி.ஆர்., கரிகாலன் என்ற வில்லன் கதாபாத்திரமாக நடத்ததை மக்கள் ரசிக்கவில்லை. சகோதரனின் காதலியிடம் அவர் முறை

தவறி நடக்க முயற்சிப்பதை பெண்களால் ஏற்க முடியவில்லை. மிகுந்த எதிர்பார்ப்புடன் இந்த படத்தை பார்க்க ரசிகர், ரசிகைகள் திரையரங்குக்கு வந்தனர். கூட்டத்தை கட்டுப்படுத்த முதன் முதலாக தமிழகத்தில் குதிரை படை வந்தது இந்தப் படத்துக்கு தான் என்ற பெருமையும் உண்டு. படத்தில் அருமையான பாடல்கள் இருந்தும் இறுதிக்காட்சியில் கரிகாலன் செத்ததும் மணிவண்ணன் மகுடம் சூடியதும் மக்களுக்கு உவப்பாக இல்லை. ஒரு எம்.ஜி.ஆர் வலது கையாலும் அடுத்தவர் இடது கையாலும் வாளைச் சுழற்றி சண்டை போட்ட அருமையான காட்சிகள் இருந்தாலும் படம் வெற்றியடையவில்லை. எம்.ஜி.ஆர். படவுலகுக்கு வந்த பொது சாலிவாகனன் என்ற படத்தில் வில்லன் வேடம் ஏற்று நடித்தார் அப்போது இவர் இறு கைகளாலும் வாளைச் சுழற்றி சண்டை செய்தார். அதன் பிறகு இந்தப் படத்தில் இரு கைகளாலும் வாள் சண்டை போட்டார்.

அறிவியல் புரட்சி

1963 இல் எம்.ஜி.ஆர் பானுமதி நடித்த ‘கலையரசி’ என்றொரு படம் வந்தது. இதில் எம்.ஜி.ஆர். வேற்றுலகவாசியாகவும் ஒரு கதாபாத்திரம் ஏற்றிருப்பார். எரிகல் மோதி உயிர் இழப்பார். இப்படத்தில் வீணை வாசிக்கும் பானுமதியை சந்திரமண்டலத்துக்கு பறக்கும் தட்டில் நம்பியார் கடத்திக்கொண்டு போய் விடுவார். எம்.ஜி.ஆர் போய் மீட்டுக் கொண்டு வருவார். ஷரோடி பிரதர்ஸ் எடுத்த இப்படம் பெரியளவில் நூறுநாட்கள் ஓடாவிட்டாலும் தயாரிப்பாளருக்கு நல்ல இலாபத்தைத் தந்ததால் அவர்கள் தங்கள் ஷரோடி கிராமத்தை விட்டு மாநிலத் தலைநகரான திருவனந்தபுரத்தில் எம் ஜி ஆர் நிலையம் என்ற பெயரில் புது வீடு கட்டி குடிபோயினர்.



கலையரசி

'கலையரசி'யில் புதுமுகமாக ராஜஸ்ரீ யை அறிமுகம் செய்தனர். அவர் சந்திரமண்டலத்து இளவரசியாக நடித்திருப்பார். (பின்பு இவர் ஸ்ரீதரின் காதலிக்க நேரமில்லை படத்தில் மறு பிரவேசம் செய்தார்.) இந்தப்படம் பார்த்த பலருக்கு இது நம்பக்கூடியதாக இல்லை. ராஜஸ்ரீயை காதலிப்பதாகக் நடித்து தன காதலியான பானுமதியை மீட்டுக் கொண்டுவருவார். அதுவும் ராஜஸ்ரீ அப்பாவி போல நிற்க எம்ஜிஆரும் பானுமதியும் டுயட் பாடும் காட்சியும் இப்படத்தில் இருந்தது. இது போன்ற காட்சிகள் பெண்கள் மத்தியில் வரவேற்பு பெறுவதில்லை. பறக்கும் தட்டு,

சந்திரமண்டலம் போன்றவை கட்டுக்கதையாகத் தோன்றியதாலும் வசூல் குறைந்தது.

'எங்கள் தங்கம்' (9-10-1970) படத்தில் நீல் ஆம்ஸ்ட்ராங் சந்திரனினல் கால் வைத்ததை ஒரு நையாண்டி காலட்சேபமாக எம்.ஜி.ஆர். செய்வதை ரசிகர், ரசிகைகள் ரசித்தனர். முதலில் மனிதன் சந்திரமண்டலம் போனதை நம்பாதவர்கள் இப்போது அவன் சந்திரமண்டலம் போனதை நம்பினர். அதை நம்பாமல் பேசும் பத்தாம் பசலிகளைக் கேலி செய்து ரசித்தனர். காலம் மாறியிருந்தது.

ஒழுக்க மீறலால் வசூலை இழந்தவை

தாயின் மடியில், பட்டிக்காட்டுப் பொன்னையா, மாடப்புறா போன்றவை மக்கள் எதிர்பார்த்தபடி எம்.ஜி.ஆரின் ஒழுக்கம் அமையாததால் வசூலைப் பெறவில்லை. மாடப்புறாவில் அவர் காதலிப்பது ஒருத்தியாகவும் ஆனால் அவர் சந்தர்ப்ப சூழலால் திருமணம் செய்வது மற்றொருத்தியாகவும் அமைந்து விடும். கதையின் வேகமும் காட்சியமைப்பும் சுமாராகவே இருந்ததால் படமும் சுமாராகவே ஓடியது.

தாயின் மடியில் படத்தில் இரண்டு முக்கியக் கோளாறுகள் காணப்பட்டன. ஒன்று எம்.ஜி.ஆரின் பிறப்பில் குற்றம் சாட்டப்பட்டது. இரண்டு படத்தின் முக்கியத் திருப்பமாக அவர் தன் தங்கையையே காதலிப்பதாகக் கதையை அமைத்திருந்தது. (கடைசியில் தங்கை இல்லை என்பது தெரிய வரும்). யாரோ பெற்று அனாதையாகப் போட்டுவிட்டு போன குழந்தையை (எம்.ஜி.ஆர்) ஒரு பணக்காரர் எடுத்து வளர்ப்பார். அவர்

தான் குழந்தையைக் கண்டெடுத்த நாளை குழந்தையின் பிறந்த நாளாகக் கொண்டாடுவார். எம்.ஜி.ஆர் வளர்ந்த பிறகும் இக்கொண்டாட்டம் தொடரும். பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது அவர் கடுமையான கேலி கிண்டலுக்கு உள்ளாவார். இதை ரசிகர், ரசிகைகள் விரும்பவில்லை.

எம்.ஜி.ஆரும் சரோஜாதேவியும் ஒருவரை ஒருவர் காதலித்து வரும் வேளையில் இருவரும் ஒரு தகப்பன் வயிற்றுப்பிள்ளைகள் என்ற தகவலறிந்து எம்.ஜி.ஆர். தன் காதலைக் காரணம் சொல்லாமல் முறித்து விடுவார். பின்பு ஒரு நாள் இந்தக் காரணத்தைச் சொன்னதும் இருவருமே தற்கொலை செய்து கொள்ளத் துணிந்து விடுவர். பின்பு இருவரின் தந்தையும் வெவ்வேறு நபர்கள் என்ற உண்மையை நாகேஷ் இவர்களுக்கு எடுத்துச் சொல்லி தற்கொலையைத் தடுப்பார். இது ரசிகர், ரசிகைகளுக்கு வேப்பங்காயாகக் கசந்தது. பாடல்கள் அருமையாக இருந்தும் எம்.ஜி.ஆரின் கதாபாத்திரம் சரியாக அமைக்கப்பட வில்லை. அதனால் படம் எதிர்பார்த்த வெற்றியை இழந்துவிட்டது.

பட்டிக்காட்டுப் பொன்னையா

பட்டிக்காட்டு விவசாயி, பட்டணத்துக் கல்லூரி வாலிபன் என இரண்டு வேடங்களில் சகோதரர்களாக எம்.ஜி.ஆர். இரட்டை வேடமிட்டு நடித்திருந்தார். படம் உலகம் சுற்றும் வாலிபன் வந்து மூன்று மாதம் கழித்து (10-8-73) வெளிவந்தது. ஜெயலலிதா மற்றும் ராஜாஸ்ரீ கதாநாயகிகளாக நடித்தனர்.

கல்லூரி மாணவனாக நடித்த எம்.ஜி.ஆர் ஒரு மழையில் காதலியுடன் நனைந்து மகிழ்ந்த வேளையில் அவளிடம் வரம்பு மீறி நடந்து விடுவார். இதனால் ஊரில் இருக்கும் தந்தைக்குக்கூடத் தெரிவிக்காமல் அவளை அவசரத்திருமணம் செய்து வீட்டு மாப்பிள்ளையாகி அவமானப்பட்டு வெளியேறுவார். இந்த எம்.ஜி.ஆரை பெண்களும் ரசிக்கவில்லை ஆண்களும் ரசிக்கவில்லை.



பட்டிக்காட்டுப் பொன்னையா

யோகா செய்து உயர எழும்பிய எம்.ஜி.ஆர்.

1970 இல் 'தலைவன்' என்றொரு படத்தில் ஹடயோகம் மூலமாக உடலை உயர்த்தி இலகுவாக்கி காற்றில் மிதக்கலாம் என்று எம்.ஜி.ஆர். நடித்திருந்தார். சித்தவைத்தியம், யோகா பற்றி அப்போது அவர் காட்டியதை எவரும் நம்பவில்லை. அதனால் படத்தில் கதையும் பாடல்களும் சிறப்பாக இருந்தும் படம் *63*

நாட்களே ஓடின. வண்ணப்படங்கள் வந்துவிட் காலத்தில் இது கறுப்பு வெள்ளைப்படமாக இருந்ததும் ஒரு காரணமாகும். யோகா முலமாக உடம்பை வசப்படுத்தலாம் என்பதை நம்ப வைக்க எம் ஜி ஆர் இலண்டனில் இந்த யோகப் பயிற்சியை பெற்று வருவதாக கூட காட்டி இருந்தனர். ஆனால் இதற்கு முன்பு வந்த புதிய பூமி படத்தில் பச்சிலை மருந்து தரும் நாட்டு வைத்தியரை காமெடியனாக காட்டிவிட்டு இந்த தலைவன் படத்தில் ஜி சகுந்தலாவின் காயத்தை ஆற்ற ஒரு பச்சிலை சாறைப் பயன்படுத்துவதை மக்கள் ஏற்க தயாராக இல்லை.

நிறைவு

தேர்த்திருவிழா படத்தில் எம்.ஜி.ஆர். ஜெயலலிதா ஜோடியும் விஜயகுமாரி முத்துராமன் ஜோடியும் மழையில் நனைவதாகக் காட்சி உண்டு, அப்போது **“மழை முத்து முத்து பந்தலிட்டு, கிட்ட கிட்ட நெருங்குது ஹாய்”** என்று பாட்டு பாடி எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் மகிழ்ச்சியாக மழையை ரசிப்பார்கள். ஆனால் அடுத்த ஜோடி தன்னிலை மறந்து தவறு செய்துவிடுவர். அதனால் விஜயகுமாரியின் வாழ்க்கை சிக்கலாகிவிடும். இரண்டு ஜோடிகளையும் காட்டி எம்.ஜி.ஆர். ஜெயலலிதா ஜோடி ஒழுக்கத்தில் மிஞ்சி நிற்பதை உணர்த்தும் வகையில் இப்பாடல் காட்சி அமைந்திருக்கும். எம்.ஜி.ஆரிடம் பெண்கள் எதிர்பார்ப்பது தான் இது போன்ற ஒழுக்கமும் கட்டுப்பாடும் தான். இவை மீறப்படும்போது அவர்கள் அப்படத்தை ஆதரிப்பது கிடையாது.

பட்டிக்காட்டு பொன்னையா படத்தில் தம்பி எம்.ஜி.ஆரும் ராஜஸ்ரீயும் மழையில் நனைந்துவிட்டு தன

கட்டுப்பாட்டை இழந்து விடுவர். இதனால் இந்த எம்.ஜி.ஆர். தன் பெற்றோருக்கும் ஊருக்கும் தெரியாமல் தன் காதலியின் வீட்டார் பேச்சை கேட்டு அவர் திருமணம் செய்துகொள்வார். அந்த வீட்டில் வீட்டு மாப்பிள்ளையாக இருந்து தனது படிப்பையும் முடிக்க முடியாமல் மிகவும் அவமானப்படுவார். இந்த காட்சிகள் பெண்களுக்கு விருப்பமில்லாதவை. ரசிகர், ரசிகைகளும் எம்.ஜி.ஆரின் தன்னிகரற்ற தலைவன் என்ற பிம்பம் சிதறிப்போனதாகக் கருதியதால் திரையரங்குக்கு இப்படத்தை பார்க்க திரும்பத் திரும்ப வரவில்லை.

எம் ஜி ஆரை சிக்க வைத்த பிம்பச் சிறை

எம்.ஜி.ஆருக்கு ஆரம்ப காலம் முதல் நல்லவர் வல்லவர் என்ற பிம்பம் நிலைத்துவிட்டதால் பிறகு அவர் வேறு மாதிரியான படங்களில் நடிப்பதை மக்கள் ரசிக்கவில்லை. அவரை அந்த பிம்பச் சிறையிலேயே அடைத்தனர். அவரே பெற்றால் தான் பிள்ளையா, நாடோடி ஆகியன தனக்கு மிகவும் பிடித்த படங்கள் என்றார். நாடோடியில் கண் தெரியாதவராக தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவராக நடிப்பதை மக்கள் ரசிக்கவில்லை. மதுரை வீரன் போன்ற சாகச செயல்களில் ஈடுபட்டிருந்தால் ரசித்திருப்பார்கள். ஒரு முறை எம்.ஜி.ஆர். தொப்பியும் கருப்பு கண்ணாடியும் இல்லாமல் தனது காரை தானே ஒட்டிக்கொண்டு சென்னை தெருக்களில் சென்றார். அவரை யாரும் அடையாளம் கண்டுகொள்ளவில்லை. அவர் வீட்டுக்குத் திரும்பியதும் ‘நான் தொப்பியும் கண்ணாடியும் அணிந்தால் மட்டுமே என்னை எம்.ஜி.ஆர். என்று ஏற்றுகொள்வார்கள் போல’ என்றார்.

தமிழ் பாரம்பரியத்தின் அடையாளம் எம் ஜி ஆர்

எம்.ஜி.ஆர். படங்களின் மூலமாக அவர் தமிழ் பாரம்பரியத்தின் அடையாளமாக கருதப்பட்டார். திராவிட இயக்கங்கள் ஒரு தரமான தமிழ் ஆண்மகனின் இலக்கணம் என விவரித்ததை திரைப்படங்கள் எம்.ஜி.ஆரை வைத்து நிரூபித்தன. அவரும் தத்துவப் பாடல்கள் பாடும்போது அக்கருத்துக்கள் தனது கட்சியின் கொள்கை சார்ந்தன என்பதைப் படம் பார்ப்போர் உணரும்படி கருப்பு சட்டை அணிந்தே நடித்தார். இவ்வாறு தமிழ் கலாச்சாரத்தின் அடையாளமாக போற்றப்பட்ட நிலையில் அதற்கு முரண்பட்ட வேடங்களில் எம்.ஜி.ஆர். நடிப்பதை மக்களால் ஏற்றுகொள்ள இயலவில்லை. இத்தகைய இலட்சியக் கதாபாத்திரம் ஏற்று நடிக்காவிட்டால் அந்த படத்தின் இலாபம் சுமாராக இருந்தது. எனவே திரையுலகம் எப்போதும் வெற்றி பெரும் குதிரை மீதே பணம் கட்டி பழகியதால் அவரை அந்த வகை கதாப்பாத்திரங்களிலேயே நடிக்க வைத்தது.

“எம்.ஜி.ஆர். என்ற இதயக்கனியை என் இதயத்திலே வைத்துக் கொண்டதற்குக் காரணம், வேறு எங்கே அதனை நான் வைத்துக் கொண்டிருந்தாலும், எவரேனும் பறித்துக் கொண்டு போய் விடுவார்கள் என்பதற்காகத்தான்.”

- அறிஞர் அண்ணா

6

முதியவர் வேடத்தில் எம்.ஜி.ஆர்.

நாற்பது வயதுக்கு மேல் கதாநாயகன் வாய்ப்புப் பெற்ற எம்.ஜி.ஆர். புகழ் அடைய தொடங்கிய நாள் முதலே முதியவர் என்று அவருக்கு வேண்டாதவர்களால் அழைக்கப்பட்டார். இதனால் இயற்கையை மீறி அவர் தன் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. வயோதிகத்தின் சாயல் தெரியாமல் அவர் நடந்துகொள்ள வேண்டியிருந்தது. முகத்தில் சுருக்கம் இல்லாமலும் புறங்கையில் நரம்பு தெரியாமலும் அவர் தன் தோற்றத்தைப் பாதுகாத்து வந்தார்.

நடிப்பு என்றால் என்ன?

ஒரு பேட்டியில் எம்.ஜி.ஆரிடம் ஒரு நிருபர் ‘நீங்கள் நூறு வயதுவரை வாழுங்கள் ஆனால் அதுவரை இப்படித்தான் இளைஞராக நடிப்பீர்களா? உங்கள் வயதுக்கேற்ற கதாபத்திரங்களை ஏற்று நடித்தால்என்ன?’ என்று அவரிடம் கேட்டார். அதற்கு எம்.ஜி.ஆர். ஒரு கடை இலாபமாக நடக்கும்போது யாராவது வியாபாரத்தை நிறுத்துவார்களா என்றார். தன் படம் வசூலை அள்ளிக் கொட்டும்போது தான் ஏன் இளைஞனாக நடிப்பதை நிறுத்த வேண்டும் என்பதுதான் அவர் கூற விரும்பிய

கருத்து. மேலும் அவர் நடிப்பு என்றால் என்ன? இருபது வயதுக்காரர் 80 வயது முதியவராக நடிப்பதை ஏற்றுக்கொள்கிறீர்கள் அல்லவா? அது சிறப்பான நடிப்பு என்றால் அதைப்போல நான் இருபது வயது இளைஞனை போல நடிப்பதும் சிறப்பான நடிப்புதானே என்று அவர்களுக்குப் புரியும்படி எடுத்துக்கூறினார்.

நடிப்பில் வயது வித்தியாசம் இருப்பது குறித்து விளக்க அப்போது மேலும் ஓர் உதாரணத்தையும் எடுத்துரைத்தார். நாடகத்தந்தை எனப்போற்றப்படும் பம்மல் சம்பந்த முதலியார் தன் முதிர்ந்த வயதில் மனோகரா நாடகத்தில் நடிக்கும்போது தர்பாருக்குச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு அவரை இழுத்துவரும் காட்சியில் இந்தப் பதினாறு வயது பாலகனை என்று தன்னைக் குறிப்பிட்டபடி ஒரு நீண்ட வசனம் பேசுவார். அப்போது அந்நாடகத்தைப் பார்த்த அனைவருக்கும் அவர் வயது 60 என்பது தெரியும். இருந்தும் அந்நாடகம் வெற்றி பெற்றது. ஏன் தெரியுமா? பார்ப்போர் நடிப்பைப் பார்த்து ரசிக்கிறார்களே தவிர நடிப்பவரின் வயதைக் கருதுவதில்லை. அதனால்தான் இன்னும் என் படங்கள் நல்ல வசூலைப் பெறுகின்றன என்றார்.

முதியவர் வேடம் ஏன்?

தமிழ் பாரம்பர்யத்தில் வள்ளி திருமணம் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குப் பெற்றது. அதில் முருகனாக நடிப்பவர் வேலன் [இளைஞன்] விருத்தன் [முதியவர்] என்று இருவேடம் போடுவார். யானையைக் கண்டு அஞ்சி ஓடும் வள்ளியை முதியவர் வேடத்தில் வந்து முருகன் காப்பாற்றி தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி சத்தியம் வாங்குவார். எனவே, மாறு



வேடங்களில் முதியவர் வேடம் என்பது தமிழ் ரசிகர், ரசிகைகள் ஏற்கெனவே பார்த்து ரசித்து ஏற்றுக்கொண்ட ஒரு வேடம் ஆகும். முதியவராக வரும்போது ரசிகர், ரசிகைகளிடையே ஒரு ‘சிம்பதி’கிடைக்கும். எனவே, எம்.ஜி.ஆர். பாரம்பர்ய வெற்றி ஃபார்முலாவான முதியவர் வேடத்தை தன் பல படங்களில் பயன்படுத்திக் கொண்டார்.

எம்.ஜி.ஆர். தன் படங்களில் ஆக்ஷன் ஹீரோவாகவே நடித்ததால் பிற வேடங்களில் நடிக்கவாய்ப்பில்லை. எனவே, அவர் போலீஸாக வரும்போதும் அவர்மீது தவறாகக் குற்றம் சுமத்தப்பட்டு தப்பிக்கும் போதும் கதாநாயகியை வேற்றுருவில் வந்து காதலிக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட போதும் மாறு வேடங்களைத் தெரிவுசெய்தார். முதியவர் வேடத்தில் பல படங்களில் நடித்திருக்கிறார். அதுவும் வெவ்வேறு

வகையான முதியவர் வேடங்கள். அவற்றை இப்போது விரிவாகக் காண்போம்.

வேடப் பொருத்தம்

முதியவர் வேடத்துக்குரிய நரைத்த தலை, தளர்ந்த உடல், சுருங்கிய கண்கள், ஒளியிழந்த முகம், நடுங்கும் குரல் என மேக்கப், காஸ்டியூம், நடிப்பு என அனைத்திலும் எம்.ஜி.ஆர். கவனம் செலுத்தியிருப்பார். குலேபகாவலி, மலைக்கள்ளன், மகாதேவி, பாக்தாத்திருடன், படகோட்டி, தேடி வந்த மாப்பிள்ளை போன்ற சில படங்களில் முதியவராக மாறுவேடமிட்டு வந்து சில முக்கியக் காட்சிகளில் நடித்திருப்பார்.

குலேபகாவலியில் முதியவர் வேடத்தில் வந்து லக்பேஷ்வாக நடிக்கும் டி.ஆர்.ராஜகுமாரியை பகடையில் ஜெயிக்கும் ரகசியத்தை அறிந்து அவரை வெல்வார். மலைக்கள்ளன் படத்தில் முதியவராக வந்து பி. பானுமதியைக் காப்பாற்றுவார் பின்னர் அவரை ரகசியமாகச் சந்திக்க இரவில் வந்த போது கூட முதியவரைப்போல நடுங்கும் குரலில் பேசி தன்னை வெளிப்படுத்துவார்

சக்கரவர்த்தி திருமகள் படத்தில் சாக்ரட்டீஸ் போன்ற தோற்றத்தில் ஒரு முதியவர் வேடத்தில் வந்து அவர் பாடிய மனுசன் பொறக்கும் போது பொறந்த புத்தி போக போகமாறுது என்ற பாடலில் வரும் ‘கணக்குத் தெரியாம சிலது கம்பையும் கொம்பையும் ஆட்டுது. ஆனால் காதோரம் நரைச்ச முடிகதை முடிவைக் காட்டுது’ என்ற வரிகள் எம்.ஜி.ஆருக்குப் பிடித்தவை ஆகும். இந்தப் பாட்டு வரிகள் சிலர் தம் செல்வாக்கு நிரந்தரமானது என



நினைத்து ஆடும் ஆட்டங்களின் நிலையாமையை விளக்குவதால் அவருக்கு மிகவும் பிடித்தன. அவர் மிகப் பெரிய ஜாம்பவான்கள் இருந்த இடம் தெரியாமல் போனதைநேரில் கண்டவர் என்பதால் நிலையாமை தத்துவத்தை நன்கு புரிந்து வைத்திருந்தார். இந்தப் படம் திமுகவின் முதல் வெற்றி வாய்ப்புக்கு வழி கோலிய படமும் ஆகும்.

உதய சூரியன் என்ற பெயரில் சக்கரவர்த்தி திருமகள் படத்தில் நடித்த எம்.ஜி.ஆர். திமுகவின் முதல் தேர்தல் பிரவேசத்தை முன்னிட்டு சாக்ரட்டீஸ் முதியவர் வேடத்தில் வந்து பாட்டிலேயே பகுத்தறிவு பிரசாரமும் செய்தார். 'உப்புக்கல்லை வைரம் என்று சொன்னால் – அதை ஒப்புக்கொள்ளும் வீரருக்கு முன்னால -- நாம் கத்தி என்ன கதறி என்ன – ஒன்றுமே நடக்கவில்லை தோழா ரொம்ப நாளா'என்றுபாடுவார்.

பாக்தாத் திருடனில் வைஜயந்திமாலாவை ஏலத்தில் வாங்கும் அருவருப்பான முதியவராக வருவார். அவருக்குக் கூரிய ஒட்டு மூக்கும் பெரிய தொந்தியும் இருப்பதால ஆள் அடையாளமே தெரியாது. அவரிடமிருந்து தப்பிக்க நினைக்கும் வைஜெயந்திமாலாவின் காலில் சுருக்குப்போட்டு ''சூத்திரக் கயிறு என்னிடம் இருக்கு சும்மா எழுந்தே நில்லு – உன் பாச்சா ஒன்னும் பலிக்காது இங்கே செல்லு '' என்று அவரை மீண்டும் குகைக்குள்ளே அனுப்பி விடுவார். இந்த வேஷத்தில் எம்.ஜி.ஆரின் நடிப்பு வித்தியாசமாக இருக்கும்.

படகோட்டியில் இரண்டு குப்பத்தையும் ஒற்றுமைப்படுத்த முதியவர் வேஷம் போட்டிருப்பார்.

சரோஜாதேவியைக் குழந்தே குழந்தே என்று கூப்பிடுவார். அதற்கு அவர் ''சதா குழந்தே குழந்தேன்னுட்டு விலைக்கு வாங்குன சனியன் மாதிரி''என்று திட்டுவார். **“நானொரு குழந்தை நீயொரு குழந்தை–ஒருவர் மடியிலே ஒருவரடி”** என்ற பாட்டு இந்தத் தாத்தா வேடத்துடன் தொடங்கும் பிறகு அந்த வேடம் கலைந்து மாணிக்கமாக காட்சியளிப்பார்.

தேடி வந்த மாப்பிள்ளை படத்தில் ஜெயலலிதாவுக்கு இங்கிலீஷ் மியூசிக் கற்றுத்தரும்



வாத்தியாராக வருவார். இவரது தோற்றம் தலையில் தொப்பியும் செம்பட்டை தாடியும் வட்டக் கறுப்புக்கண்ணாடியும் பார்க்க சற்று அருவருப்பாக இருக்கும். ஆனால் ஆறுமுகம் இது யாரு முகம் – தாடியை வச்சா வேறுமுகம் -- தாடியை எடுத்தா தங்க முகம்'' என்ற பாட்டு தாத்தா வேடத்துடன் தொடங்கும்.

தாய் சொல்லை தட்டாதே படத்தில் சந்தையில் சுற்றித்திரியும் ஒரு நாடோடி முதியவராக மாறுவேடம் போட்டு வழக்கம் போல குற்றவாளிகளைப் பிடிக்க வருவார். அதில் வேடம் போட்டவர் எம்.ஜி.ஆர். என்பதை கண்டு பிடிக்க முடியாத அளவுக்குத் தோற்றம் முற்றிலும் வேறுபட்டிருக்கும். உச்சியில் வழுக்கை நரைத்த முடி மீசை தாடி, கிழிந்து ஒட்டுப்போட்ட பழைய நைந்தகோட், தோளில் ஒரு பச்சைக்கிளி கை மடக்கில் உட்கார்ந்திருக்கும் ஒரு குரங்கு, கக்கத்தில் இடுக்கிய ஒரு குடை, கையில் ஒரு தடியோடு தளர்ந்து தடுமாறும் நடை, சில சமயம் அந்தக் குரங்கு சங்கிலியைப் பிடித்த படியும் நடப்பார், கூடவே அந்தக் குரங்கு ஓடி வரும். சந்தையில் பிக்பாக்கெட் அடித்தல், பெண்களை, ஃபாலோ செய்தல், அவர்களோடு நடந்து வந்தபடி விசிலடித்தல் போன்ற குற்றங்களைத் தடுக்கும் வகையில் நாக்கை துருத்தி முறைத்துப் பார்த்து குற்றவாளிகளை அதட்டுவார். கூடவே

''போயும் போயும் மனிதனுக்கு இந்த புத்தியைப் படைத்தானே அதில்

பொய்யும் புரட்டும் திருட்டும் கலந்து பூமியைக் கெடுத்தானே”

என்று பாட்டும் பாடுவதாக அக்காட்சி அமைந்திருக்கும். காவல் நிலையத்துக்கு வந்து வேடத்தைக் கலைக்கும் போது எம்.ஜி.ஆர். என்பது தெரிய வரும். முதல் முறை இப்படம் பார்ப்போருக்கு எம்.ஜி.ஆர். என்று தெரியாது.

ஆசை முகம் படம் தமிழில் அந்த முதல் ப்லாஸ்டிக் சர்ஜரி பற்றிய படம் ஆகும். எம்.ஜி.ஆர்., வஜ்ரவேல் என்ற ராம்தாஸ் தன்னைப்போல முகத்தை ப்லாஸ்டிக் சர்ஜரி செய்து தன் வீட்டில் புகுந்து விட்டதை அறிந்து தன் அப்பாவின் சித்தப்பாவைப் போல ஒரு கோட்சூட் போட்ட வெளிநாட்டு முதியவர் போல மாறு வேடத்துடன் வந்து தன் வீட்டிலேயே தங்குவார். அப்போது ராம்தாசை கேலி செய்து பாடுவதாக ஒரு பாடலை எம்.ஜி.ஆர். பாடுவார் அதுதான்



'எத்தனை பெரிய மனிதனுக்கு எத்தனை சிறிய மனமிருக்கு

எத்தனை சிறிய பறவைக்கு எத்தனை பெரிய மனமிருக்கு'

என்ற பாடல். இப்பாடல் காட்சியில் நாகேஷும் சரோஜாதேவியும் மாறுவேடமிட்ட எம்.ஜி.ஆருடன் சேர்ந்து ஆடுவார்கள் ராம்தாசுக்கு இது கோபத்தை ஏற்படுத்தும். இந்த வேடத்தி ல்எம்.ஜி.ஆர். ஒரு காலை சாய்த்து சாய்த்து ஒரு கைத்தடியை ஆதரவாகக் கொண்டு நடப்பார். இதில் தலை முடி கறுப்பும் வெளுப்புமாகக் காணப்படும் தாடி இருக்கும் கண்ணில் கூலிங்க்கிளாஸ் போட்டிருப்பார். ஒரு ஸ்டைலான கோட் சூட் போட்ட தாத்தாவாக வெளிநாட்டிலிருந்து வந்தவராகத் தோன்றுவார். இந்த மேக்கப் காஸ்டியூம் அனைத்தும் நவீன காலத்து தாத்தா போல இருக்கும்.

"எம்.ஜி.ஆர். கலைஞர்களுக்கெல்லாம் ஒரு கலைஞராகவும், வழி காட்டியாகவும். முன்னோடியாகவும் இருந்து வருபவர் ஆவார்."

- அறிஞர் அண்ணா

7

காதலியை காப்பாற்ற காதல் நாடகமாடிய எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். படங்களில் அவர் தன்னை நம்பியவர்களை நட்டாற்றில் விடுவதில்லை. நிஜ வாழ்க்கையிலும் திரை பிம்பத்திலும் அவருடைய நிலைப்பாடு இதுவாகவே இருந்தது. நாடோடி மன்னன் படத்தில் 'என்னை நம்பி கெட்டவர் இதுவரை யாரும் இல்லை' என்று சொன்னதை மெய்ப்பிக்கும் வகையில் அவரது படங்களில் அவர் தன்னை நம்பி வாழும் அனைவரையும் நல்ல முறையில் காப்பாற்றி மேன்மையான இடத்துக்கு கொண்டு வந்ததாகவே படங்கள் எடுக்கப்பட்டன. நிஜவாழ்விலும் அவர் தன்னை நம்பி வாக்களித்த மக்களுக்கு நல்ல பல திட்டங்களை அறிமுகப்படுத்தி அவர்களையும், அவர்களின் பிள்ளைகளையும் வாழ்க்கை தரத்தில் உயர்த்தியது வரலாறு கூறும் உண்மையாகும்.

வில்லனிடம் இருந்து காதலியை மீட்டல்

எம்.ஜி.ஆர். படங்களில் அவரது காதலி வில்லனிடம் சிக்கிக் கொள்வதும், பிறகு அவர் போய் காப்பாற்றி மீட்டுக் கொண்டு வருவதும் உண்டு. வில்லனை எதிர்க்க வேண்டிய சூழலில் அவர் பலவகையான சண்டை காட்சிகளை

அமைத்து படத்துக்குப் படம் வேறுபாடு காட்டி இளைஞர்களை கவரும் வகையில் வீரதீர செயல்களில் ஈடுபட்டு காதலியை மீட்டுக் கொண்டு வருவது வழக்கம். சில படங்களில் இந்த முறை பின்பற்றப்படாமல் வேறொரு முறை பின்பற்றப்பட்டுள்ளது.

அதிகாரம் படைத்த பெண்ணிடம் இருந்து காதலியை மீட்டல்

அடிமைப்பெண் படம் மற்றும் கலையரசி படங்களில் அவர் ஒரு பெண்ணை மீட்க இன்னொரு பெண்ணை காதலிக்கும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இந்த இரு படங்களில் கலையரசி படத்தில் அவர் காதலிப்பதாக நடிக்கும் சந்திர மண்டலத்து இளவரசி ராஜஸ்ரீ ஒரு அப்பாவி பெண். அடிமைப்பெண் படத்தில் அவர் காதலிப்பதாக நடிக்கும் பவளவல்லி ஜெயலலிதா சுயநலத்துக்காக எதையும் கெடுக்க தயாராக இருக்கும் கொடூர சிந்தை படைத்தவள். ஆனால் இந்த இரு பெண்களின் அதிகாரத்துக்குரிய ஆட்சியில் சிக்கியிருக்கும் தன் காதலியை மீட்டுக் கொண்டு போவதில் எம்.ஜி.ஆருக்கு இந்த பெண்களை போலியாக காதலிக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்படுகிறது. எனவே, இவர்களை காதலிப்பது போல நடித்து உண்மையை அறிந்து கொண்டு தன் காதலியை மீட்டுக் கொண்டு தன் நாடு சேர்கிறார், கலையரசி படத்தில் சந்திர மண்டலத்தில் இருந்து இந்த உலகத்துக்கே வந்து சேர்கிறார்.

கலையரசி காட்டும் அறிவியல்

கலையரசி படம் ஒரு அறிவியல் புனைவு சித்திரமாகும். பூலோகத்தில் இருக்கும் வீணை கலைஞர் வாணி என்ற

பானுமதியை சந்திரமண்டலத்தில் இருக்கும் ஒருவன் பறக்கும் தட்டில் வந்து கடத்திச் செல்கிறான். இளவரசிக்கு இசை கற்பிப்பதற்காக இவ்வாறு பானுமதி கடத்திச் செல்லப்படுகிறார். பறக்கும் தட்டு வந்து இறங்கிப்போனதை பார்த்த மக்கள் கலைவாணி காணாமல் போனதையும் கண்டு பரிதவிக்கும் போது, அவளை மீட்டு வர வேண்டும் என்ற கடமை உணர்வோடு எம்.ஜி.ஆர். சந்திர மண்டலத்திற்கு புறப்பட்டு செல்கிறார். அங்கு போனால் வில்லன் நம்பியார் பானுமதியையும், இளவரசி ராஜஸ்ரீயும் எம்.ஜி.ஆரையும் காதலிக்கின்றனர். இவர்களிடமிருந்து இருவரும் மீண்டு வருவது தான் கதை

கலையரசி படம் 19-4-1963 அன்று வெளிவந்தது. இப்படம் அன்று மிகப்பெரிய வெற்றியைப் பெறவில்லை என்பதற்கு மக்கள் அந்த சந்திரமண்டல



கதையை நம்ப வில்லை என்பதுதான் காரணம். ஆனாலும் படம் தயாரிப்பாளருக்கு நஷ்டம் ஏற்படுத்தாத வகையில் அவருக்கு கணிசமான லாபத்தை கொடுத்தது. சரோடி பிலிம்ஸ் என்று தன கிராமத்தின் பெயரில் படம் எடுத்த தயாரிப்பாளர் இந்தப் படத்தில் கிடைத்த லாபத்தால் கேரள மாநிலத்தில் திருவனந்தபுரத்தில் எம்.ஜி.ஆர். நிலையம் என்ற பெயரில் ஒரு வீடு கட்டினார். தயாரிப்பாளர் தன்னுடைய வீட்டுக்கு எம்.ஜி.ஆர். பெயர் சூட்டுவதன் மூலமாக தன் நன்றி கடனை தீர்த்துக் கொண்டார். இந்தப் படம் தயாரிப்பில் இருந்தபோது தயாரிப்பு செலவுக்கு பணம் இல்லாமல் அவர் தவித்ததை பார்த்து அவருடைய சரோடி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அவருக்கு ஆளுக்கு கொஞ்சம் பணம் கொடுத்து உதவினர். கிராமமே பணம் போட்டு எடுத்த படம் என்பதால் கிராமத்தின் பெயரே படத் தயாரிப்பு நிறுவனத்துக்கு பெயராயிற்று. கலையரசி படம் அதிக லாபம் பெற்றுத் தராவிட்டாலும் தயாரிப்பாளருக்கு தனது மாநிலத்தின் தலைநகரில் சொந்த வீடு கட்ட உதவிய அளவுக்கு லாபம் ஈட்டித் தந்த படம் ஆகும்.

பூலோகத்தில் இருக்கும் போது பானுமதியும் எம்.ஜி.ஆரும் காதலிக்கும் போது பாடிய பாட்டை, சந்திர லோகத்தில் எம்.ஜி.ஆர் ராஜஸ்ரீ யிடம் பாடுவார். ஆண் குரல் வரிகளை மட்டும் அவர் பாடிவிட்டு நிறுத்திவிடுவார். அப்போது ராஜஸ்ரீ இன்னும் பாடுங்கள் என்று சொல்லுவார். எம்.ஜி.ஆர். இந்த பாட்டு வரிகள் இனி வாணிக்கு தான் தெரியும் என்று பானுமதியை நோக்கி கை காட்டவும் பானுமதி பெண் குரல் வரிகளைப் பாடுவார். இவ்வாறாக இருவரும் மாறி மாறி ராஜஸ்ரீயின் முன்பு பாடுவார்கள். ராஜஸ்ரீ இவர்கள் மீது எவ்வித

சந்தேகமும் இல்லாமல் எம்.ஜி.ஆரிடம் தன் அன்பை பரிமாறிக் கொள்வார். எம்.ஜி.ஆர். தனது நிலையை எடுத்துக் கூற முடியாமலும், ராஜஸ்ரீயின் காதலை ஏற்றுக்கொள்ள முடியாமலும் திணறுவார். இவ்வாறாக சிரமப்பட்டு தன் காதலியை வில்லனிடம் இருந்து காப்பாற்றி, சந்திர லோகத்திலிருந்து மீட்டு தாம் வாழும் பூலோகத்திற்கு அழைத்துச் செல்லும் இரண்டு கடமைகளில் சிக்கியிருந்த எம்.ஜி.ஆர். வேறுவழியின்றி அவர் இளவரசியை காதலிப்பதாக நடிக்க வேண்டி இருந்தது. அவரும் அதனை செய்து தன்னை நம்பிய காதலியை மீட்டு நம்பிக்கையோடிருந்த கிராம மக்களிடம் கொண்டுவந்து சேர்த்தார்.

ஆயிரம் நிலவே வா

அடிமைப்பெண் படம் எம்.ஜி.ஆரின் சொந்த தயாரிப்பாகும். இப்படம் 1969ஆம் ஆண்டு மே மாதம் முதல் நாள் உழைப்பாளர் தினத்தன்று வெளியானது. எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் படம்; மாபெரும் வெற்றிப் படம் ஆகும். சொர்ணம் வசனம் எழுத, கே சங்கர் இப்படத்தை இயக்கினார். இசை கே.வி. மகாதேவன். பாடல்களை வழக்கம் போல T.M.சௌந்தர்ராஜன், P.சுசீலா, எல் ஆர் ஈஸ்வரி ஆகியோர் பாடியிருந்தனர். முக்கியமான ஆயிரம் நிலவே வா பாடலை மட்டும் எஸ். பி. பாலசுப்பரமணியம் பாடியிருந்தார்.

அடிமைப்பெண் படத்தில் ஜெயலலிதா ஜீவா, பவளவள்ளி என்று இரண்டு வேடங்களை ஏற்று இருந்தார். எம்.ஜி.ஆரை காதலிக்கும் ஜீவாவை ஒழித்துவிட்டு அவரை தான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது பவளவல்லி ஜெயலலிதாவின்

திட்டமாகும். இத்திட்டத்தை முறியடிக்கவே எம்.ஜி.ஆர். போலியாக ஒரு காதல் நாடகம் ஆட வேண்டிய நிர்ப்பந்தம் இப்படத்தில் ஏற்பட்டது.

பாலைவனத்தில் வழி தவறிப்போன ஜீவா ஜெயலலிதாவும், எம்.ஜி.ஆரும் பவளவல்லி ஜெயலலிதாவின் தளபதியான ஆர்.எஸ். மனோகரிடம் சிக்குகின்றனர். ஆர்.எஸ்.மனோகர், எம்.ஜி.ஆரை. மட்டும் அரசியான பவளவல்லியிடம் ஒப்படைத்துவிட்டு ஜீவாவை ஒளித்து வைத்து விடுகிறார். எம்.ஜி.ஆரின் உடல்



உறுதி மன உறுதி ஆகியவற்றில் தன் மனதை பறிகொடுத்த பவளவல்லி அவரை தன்னுடைய தளபதியாக்கி திருமணம் செய்து கொள்ளவும் விரும்புகிறார். ஆனால் எம்.ஜி.ஆர். அவளைப்பார்த்து ஜீவா ஜீவா என்று அழைத்துப் பேசுகிறார். அப்போதுதான் பவளவல்லிக்கு தன்னைப் போன்ற உருவத்தில் ஜீவா என்ற ஒரு பெண் இருக்கிறாள், அவளை இந்த தளபதி காதலிக்கிறார் என்பது தெரிகிறது. உடனே ஒளித்து வைத்திருக்கும் அந்தப் பெண்ணை என்னிடம் கொண்டு வந்து ஒப்படைத்து விடு என்று தளபதி மனோகரிடம் சொல்கிறாள். இந்த உண்மையை சோவின் மூலம் அறியும் எம்.ஜி.ஆர். இப்போது பவளவல்லியிடமிருந்து மட்டுமே உண்மையை பெற முடியும் என்பதனால் ஜீவாவை காப்பாற்றும் நோக்கத்தில் சோ வின் அறிவுரையை ஏற்று விருப்பமில்லாமல் பவளவல்லியை காதலிப்பது போல நடிக்கிறார். அப்போது பாடப்பட்ட பாடல் ஆயிரம் நிலவே வா என்ற மிக நீண்ட பாடலாகும். படம் வந்த காலத்தில் இப் பாட்டு ஒலித்தட்டின் [ரெக்கார்டின்] இருபுறமும் பதியப்பட்டிருக்கும்.

“ஆயிரம் நிலவே வா” பாடல் காட்சியில் எம்.ஜி.ஆரை காதலோடு அணுகும் பவளவல்லி அவளைக் கோபத்தோடும் வெறுப்போடும் பார்க்கும் எம்.ஜி.ஆர் வித்தியாசமான முகபாவங்களை காட்டி மிகத்தெளிவாக நடித்திருப்பார். எம்.ஜி.ஆர் இப்பாட்டில் தனது முக பாவத்தை மாற்றிக் கொண்டே இருப்பார். பவளவல்லி நேருக்கு நேர் பார்க்கும்போது முகத்தில் புன்னகையை வரவழைப்பதும், அவளின் முகம் வேறு திசையில் திரும்பியதும் சட்டென்று எம்.ஜி.ஆரின் முகம் இறுகிவிடுவதும் காணலாம். சிலநேரங்களில் பாட்டின்

கருத்துக்கேற்ப 'அப்படியா' என்பது போலவும் தலை அசைப்பார். இதுபோன்ற மாறிவரும் பாவங்கள் அவருடைய காதல் வெறும் நடிப்பு, போலி என்பதை ரசிகர், ரசிகைகளுக்கு உணர்த்துகின்றன. இதனால் ரசிகர், ரசிகைகள் இவர் ஜீவாவை காப்பாற்றுவதற்காகத்தான் பவளவல்லியோடு டூயட் பாடுவதாக நடிக்கிறார் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்வார்கள். எம்.ஜி.ஆர். மீது கோபப்பட மாட்டார்கள்.

போலி காதலின் தர்ம நியாயம்

கொல்ல வந்த பசுவை கொல்லலாம் என்பது உலக நியதி. எனவே ஒரு பெண் பசுவைப் போன்றவளாக இருந்தாலும் அவள் சில தர்ம நியாயங்களை கொல்லும்போது அவளுக்கான தர்ம நியாயங்கள் கொல்லப்படும் என்பதைத்தான் இந்தப் போலி காதல் காட்சிகள் நமக்கு உணர்த்துகின்றன. அடிமைப்பெண், கலையரசி படங்களில் தன் காதலியை மீட்டுக் கொண்டு போவதற்காக அதிகாரம் படைத்த அவர்களை கட்டிப் போட்டு வைத்திருக்கும் இளவரசிகளை காதலிப்பதாக நடித்த எம்.ஜி.ஆர். இன்னொரு படத்தில் வேறு ஒரு காரணத்துக்காக இது போன்ற போலி காதலன் வேடம் ஏற்றிருப்பார்.

நாட்டு மக்களின் தாகம் தீர்க்க

பாக்தாத் திருடன் கதை ஆயிரத்தொரு அரபு கதைகளில் இருந்து எடுக்கப்பட்டதாகும். இந்த படத்தில் எம்.ஜி.ஆரும் வைஜெயந்தி மாலாவும் ஜோடியாக நடித்திருப்பார்கள். இதில் தன் நாட்டு மக்களின் தாகத்தை தீர்க்க ஒரு இளவரசியை காதலிப்பதாக நடிப்பார்.

நாட்டை எம்.ஜி.ஆரின் தந்தையிடம் இருந்து நயவஞ்சகமாகப் பெற்ற டி எஸ் பாலையா ஊர் மக்கள் அரண்மனையிலிருந்து குடி தண்ணீர் காசு கொடுத்து வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற உத்தரவை பிறப்பித்து விட்டு ஊரில் உள்ள குடிநீர் குளங்களில் எல்லாம் விஷத்தை கலந்து விடும் படி கட்டளையிடுவார். மக்களிடம் இருந்து குடி நீருக்கு காசு வசூல் செய்வார். பாலையாவின் ரகசிய கட்டளையினால் மனிதர்கள் யாரும் ஊருணிகளில் இறங்கி தண்ணீர் குடிக்க முடியவில்லை. எல்லோரும் காசு கொடுத்து அரண்மனையிலிருந்து நல்ல தண்ணீரை வாங்கிச் செல்ல வேண்டும். பணம் இல்லாதவர்கள் நோயாளிகள் குடிக்க சமைக்க குளிக்க தண்ணீர் இன்றி தவிக்கின்றனர்.

ஊர்களில், கிராமங்களில் குளங்களில் கலக்கப்பட்டுள்ள விஷத்தை முறிப்பதற்கான மாற்று மருந்து அரண்மனையில் இரகசியமான ஒரு



இடத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. அதைக் கொண்டு வந்தால் மட்டுமே ஜனங்களின் தாகத்தை தீர்க்க முடியும். இந்த இக்கட்டான சூழ்நிலையில் தன்னை ஒருதலையாக காதலிக்கும் இளவரசி எம்.என்.ராஜத்தின் உதவியை மட்டுமே எம்.ஜி.ஆர். நாடிப் பெற முடியும். மன்னரை எதிர்த்து அந்த சூழ்நிலையில் எதுவும் செய்ய இயலாது. எனவே, இரவில் ரகசியமாக இளவரசியின் அரண்மனைக்குள் குதித்து அவரைத்தான் காண வந்தது போல அவரிடம் காதல் மொழிகள் பேசுவார்.

எம் என் ராஜம் தன்னை திருமணம் செய்து கொள்வதில் எம்.ஜி.ஆருக்கு என்ன தடை என்று கேட்பார். அதற்கு எம்.ஜி.ஆர். 'ஓர் இளவரசியை திருமணம் செய்ய வேண்டும் என்றால் ஒன்று அரச குடும்பத்தில் பிறந்து இருக்க வேண்டும் அல்லது மக்களின் ஆதரவு பெற்றவனாக இருக்க வேண்டும்' என்பார். 'நான் அரச குடும்பத்தை சேர்ந்தவன் இல்லை. மக்கள் ஆதரவு பெற்றவனும் இல்லை. மக்கள் இன்று குடிக்க தண்ணீர் இல்லாமல் தவித்து போய் இருக்கின்றனர், இந்நிலையில் அவர்களின் ஆதரவு எனக்கு எப்படி கிடைக்கும்' என்று சொல்லும்போது 'நான் மாற்று மருந்து தருகிறேன். அதை கொண்டு போய் நீர்நிலைகளில் கலந்து விடுங்கள் மக்கள் உங்களை போற்றுவார்கள். மக்களின் ஆதரவைப் பெற்ற நீங்கள் என்னை திருமணம் செய்துகொண்டு மன்னர் ஆகிவிடலாம்' என்று இளவரசி எம். என். ராஜம் ஒரு யோசனை கூறுவார். இதை எதிர்பார்த்து வந்த எம்.ஜி.ஆர். உடனே சரி என்று சொல்லி எம் என் ராஜம் கொடுத்த

மாற்று மருந்து பெட்டியை எடுத்துக்கொண்டு போய்விடுவார்.

மருந்தை கொடுத்து தண்ணீரில் கலந்ததால் நீர்நிலைகளில் கலக்கப்பட்ட விஷம் முறிந்துவிடும். மக்கள் நல்ல தண்ணீர் குடிக்க கிடைத்து மகிழ்ச்சியாக இருப்பார்கள். இந்தக் கதையில் ஒரு பொது காரியத்துக்காக பொது நலம் வேண்டி மக்களின் தண்ணீர் தேவையைத் தீர்க்க எம்.ஜி.ஆர். இந்த காதல் நாடகத்தை நடத்த வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டது. மேலும் இந்தக் கதை ஆயிரத்தோரு அரபு கதைகளில் ஒன்றாக இருப்பதனால் இதிலுள்ள நிகழ்ச்சிகளை அதிக அளவில் மாற்றவும் இயலாது.

ரசிகர், ரசிகையர்கள் ஏற்பு

தன்னை நம்பி வாழப் போகும் காதலியை காப்பாற்றவும் பிறருடைய நன்மைக்காகவும் மட்டுமே எம்.ஜி.ஆர். போலியாக காதலிப்பது போல நடித்ததால் அதுவும் இந்த படங்களில் மட்டும் நடித்ததால் ரசிகையர் மத்தியில் அவர் மீது வெறுப்பு காணப்படவில்லை. அடிமைப்பெண் படத்தில் பெண்கள் பவளவல்லியை வெறுத்தனர், ஜீவாவை ஆதரித்தனர். பெண்கள் எம்.ஜி.ஆர். நடத்திய இந்த போலி காதல் நாடகத்தின் நியாயத்தைப் புரிந்துகொண்டனர். மேலும் தன்னை நம்பியுள்ள பெண்ணையும் தன்னை நம்பியிருக்கும் மக்களையும் காப்பாற்றவேண்டிய உயர்ந்த கடமையும் பொறுப்பும் தனக்கு இருப்பதனால் அவர் கடமைக்கும் பொறுப்புணர்ச்சிக்கும், முக்கியத்துவம் கொடுத்து அதை நிறைவேற்றும் வழிகளை ஆராய்ந்து அதன்படி நடந்து கொண்டார்.

காதலியைப் பிரிந்ததுண்டு, பின் சேர்ந்ததுண்டு

எம்.ஜி.ஆர். படங்களில் தன் காதலியைப் பிரிந்து வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்வது கிடையாது. பரிசு, பணம் படைத்தவன் போன்ற ஓரிரு படங்களில் இத்தகைய சூழ்நிலை ஏற்பட்ட போதும் கூட பிரிவுக்குப் பின் இணைந்து விடுவர். பெரிய இடத்துப் பெண் அவர் தன் அத்தை மகளை காதலித்ததாக எங்கும்



எந்த காட்சியும் இடம்பெறவில்லை. தில்லை, வள்ளி ஆகிய இரண்டு பேர் மீதும் அவர் சமமான அன்பு கொண்டுள்ளார். ஆனால் தில்லைக்கு தான் அவரை திருமணம் செய்து வைக்கப் போகிறார்கள் என்று வள்ளி கேலிசெய்து பேசுவதால், தில்லை எம்.ஜி.ஆர். மீது ஈர்ப்பு கொண்டுள்ளார். இதுபோன்ற சம்பவங்கள் கிராமங்களில் சகஜம் என்பதனால் இதனை மிகப் பெரிய அளவில் எடுத்துக்கொள்ள இயலவில்லை. மேலும்

எம்.ஜி.ஆருக்கு மயக்க மருந்து கொடுத்து சிலம்புப்போட்டியில் தோற்கடித்துவிட்டு அசோகன் தில்லையை திருமணம் செய்து கொள்வார். அதனால் பட்டணத்துக்குப் போய் படித்து பெரியாளாகி பிரபலமானவராகி அசோகனின் தங்கையையே காதலித்து மணப்பார். இந்த கதையிலும் அவர் தில்லையை காதலித்து ஏமாற்றியதாக கொள்ள இயலாது.



பரிசு, பணம் படைத்தவன் போன்ற படங்களில் எம்.ஜி.ஆர். காதலித்த பெண்ணை திருமணம் செய்ய இயலாமல், வேறொரு பெண்ணை திருமணம் செய்தாலும் கதையின் முடிவில் இடையில் வந்த மனைவி இறந்து போக அவர் தான் காதலித்த பெண்ணுடன் இணைந்து வாழ்வார். ஆக எம்.ஜி.ஆர். தன் காதலியை எந்தச் சூழ்நிலையிலும் கைவிட்டது கிடையாது. தன் காதலிக்காக வேறு ஒருவரை போலியாக காதலித்துக் கூட தன் காதலை காப்பாற்றி விடுவார். இந்த கதை சிக்கலில்

காதலை, காதலியைக் காப்பாற்றுவதே அவரது கடமையாகி விடுகிறது. அந்தக் கடமையை அவர் செவ்வனே நிறைவேற்றி பெண்கள் மனதில் இடம் பிடித்து விடுகிறார்.

எல்லாம் சரியே !

எம்.ஜி.ஆர். தவறு செய்ய மாட்டார். அப்படியே அவர் ஒரு தவறு செய்தாலும் அவர் அதை தனக்காக செய்திருக்க மாட்டார், வேறு ஒருவரின் நன்மைக்காகவே செய்திருப்பார் என்று ரசிக ரசிகையர் நம்பும்படி காரணத்தை படத்தில் சரியாக அமைத்திருப்பார். எம்.ஜி.ஆர். எது செய்தாலும் சரியாகக் செய்வார் என்ற எண்ணமும் நம்பிக்கையும் அவர் ரசிகர், ரசிகைகள் மனங்களில் ஆழமாகப் பதிந்துவிட்டது. இந்த நம்பிக்கையை அவர் வாழ்வும் படங்களும் இன்று வரை காப்பாற்றி வருகின்றன. சினிமாவிலும் அரசியலிலும் மக்களின் முழு நம்பிக்கையைப் பெற்ற எம்.ஜி.ஆர். இன்றைக்கும் மகளிரின் மனம் கவர்ந்தவராக இருந்து வருகிறார். அவர் முதலமைச்சர் ஆன பின்பும் அவர் சத்துணவு திட்டம், இலவசச் சீருடை திட்டம் மூலமாக பெண்களின், குழந்தைகளின் உள்ளம் கவர்ந்தவராகி தன்னை நம்பிய பெண்ணை கைவிடாத உத்தமர் என்ற நற்பெயரை பெண்களிடம் பெற்று விட்டார்.

எம்.ஜி.ஆர். அவர்களின் வெற்றி இயற்கையானது மட்டுமல்ல: இமயம் போன்று உயர்ந்து விளங்குவதாகும்.

- *அறிஞர் அண்ணா*

8

அனைத்து வகைப் பெண்களிடமும் அன்பு காட்டிய எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். பெண்களை மிக மிக உயர்வாக மதித்த காரணத்தால் அவர்களிடம் மிகுந்த கண்ணியத்தோடும் அன்போடும் பண்போடும் பழகினார். அவர்களுக்கு தன்னால் ஆன அனைத்து உதவிகளையும் உடனடியாக செய்து கொடுத்தார். பெண்களைப் பாதுகாக்க வேண்டியது ஆண்களின் கடமை என்பதை சிறுவயது முதற்கொண்டு உணர்ந்திருந்ததால் அவரோடு வெளிப்புற படப்பிடிப்புக்கு வரும் நடிகையர்களையும் அவருடைய பொதுக்கூட்டத்துக்கு வரும் பெண்களையும் அவருடைய திரைப்படங்களை பார்க்க வரும் ரசிகைகளையும் பாதுகாப்பாக திரும்ப அனுப்பி வைப்பதை தமது முதன்மையான கடமையாக கொண்டிருந்தார். ஆதரவற்ற பெண்களுக்கு தன்னால் ஆன உதவிகளை உடனே செய்தார். கொடிகாத்த குமரன், முன்னாள் அமைச்சர் கக்கன், நகைச்சுவை நடிகர் என். எஸ். கிருஷ்ணன் போன்றோரின் மனைவிமார் எம்.ஜி.ஆரை தன் பிள்ளை என்று போற்றி பாராட்டும்படி அவர்களிடம் அன்பாக நடந்து கொண்டார். அவர்களுக்கு வேண்டிய உதவிகளை குடியிருக்க வீடு, உதவித்தொகை, வைத்திய வசதி ஆகியவற்றைச் செய்து கொடுத்தார்.



முந்தானையில் ஆட்டோகிராப்

எம்.ஜி.ஆர். இளம் பெண்கள் குடும்ப வாழ்க்கைக்கு உரியவர்கள் என்பதால் அவர்களை பாதுகாத்து விதைநெல் போல போற்ற வேண்டும் என்பதில்

கவனமும் அக்கறையும் கொண்டிருந்தார். தன் ரசிகைகளுக்கு தன்னால் தனது சினிமாவால் எவ்வித துன்பமும் வந்துவிடக்கூடாது என்பதில் அக்கறை காட்டிய எம்.ஜி.ஆர். இளம் பெண்களிடம் மிகவும் கவனமாக நடந்து கொண்டார். பொது இடங்களில் படப்பிடிப்புத் தளங்களில் இளம் நடிகைகள் பிறருடைய கவனத்தை கவரும் வகையில் சத்தமாகப் பேசவோ சிரிக்கவோ கூடாது என்பதில் கண்டிப்போடு இருந்தார். வெளிப்புற படப்பிடிப்புக்கு போகும்போது ஒரு இளம் நடிகை குடித்துவிட்டு இருப்பதை பார்த்து அவரை கண்டித்து புலியூர் சரோஜாவிடம் ஒப்படைத்து இங்கிருந்து திரும்பி போகும் வரை நீ இவளை கவனமாகப் பார்த்துக் கொள் என்று கூறினார். “நம்முடைய தொழில் நடிப்புதானே; நடிகைகள் எப்படி இருந்தால் நமக்கென்ன” என்று விட்டேற்றியாக இருக்கும் குணம் எம்.ஜி.ஆரிடம் கிடையாது. தன்னைச் சுற்றியுள்ள அனைவரையும் தன்னுடைய குடும்பத்தாரை போலக்கருதி அன்பு செலுத்தும் நல்ல அன்புள்ளம் கொண்டவர் எம்.ஜி.ஆர்.

‘பரிசு’ படப்பிடிப்புக்காக கேரளாவில் திருவாங்கூர் சமஸ்தானத்துக்கு சொந்தமான ஒரு மாளிகையில் எம்.ஜி.ஆர். தங்கி இருந்தார். அப்போது மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண் தன்னுடைய கல்லூரி தோழிகள் இருவரை அழைத்து வந்தார். எல்லோரும் எம்.ஜி.ஆரிடம் ஆட்டோகிராப் வாங்கினர். அப்போது தோழிகளில் ஒருவர் தன்னுடைய முந்தானையை நீட்டி அதில் ஆட்டோகிராப் போட்டு தருமாறு எம்.ஜி.ஆரிடம் வேண்டினார். எம்.ஜி.ஆர் மறுத்துவிட்டார். “ உன் முந்தானை உன் கணவனுக்கு சொந்தம்; அதை நீ



என்னிடம் கொடுக்கக்கூடாது'' என்று கண்டித்து அவளிடம் இருந்த ஒரு நோட்டை வாங்கி அதில் கையெழுத்து போட்டுக் கொடுத்தார். இச்சூழ்நிலையில் வேறு எந்த நடிகர் இருந்திருந்தாலும் அல்லது வேறு ஆண்கள் இருந்திருந்தால் அவர்களில் பலர் முந்தானையில் கையெழுத்துப் போட்டு கொடுத்து இருப்பார்கள். வெகு சிலர் தான் எம்.ஜி.ஆர். போல முந்தானையின் மகத்துவத்தை நினைத்துப் பார்த்து மறுத்துக் கூறியிருப்பார்கள்.

மந்திரிகுமாரி படப்பிடிப்பில்

மந்திரிகுமாரி படம் எம்.ஜி.ஆரும், ஜீ. சகுந்தலாவும் இணைந்து நடித்த படம் ஆகும். இப்படத்தில் நாடக நடிகையாக இருந்து திரைப்படத்திற்கு நடிக்க வந்திருக்கும் சகுந்தலாவுக்கு எம்.ஜி.ஆர். அவ்வப்போது நடிப்பை சொல்லிக் கொடுத்து 'மார்க்' போட்ட இடத்தில்

நின்று வசனம் பேச வேண்டும்; எப்போது கேமராவை பார்த்து பேச வேண்டும்; எப்போது சக நடிகரை பார்த்து பேச வேண்டும்? என்று சில பல விவரங்களை சகுந்தலாவுக்கு அவ்வப்போது சொல்லிக் கொடுத்தார். கண்டிப்புக்கு பேர்போன மாடர்ன் தியேட்டர்சின் உரிமையாளரிடம் இவர்கள் இருவரும் அடிக்கடி பேசுவதைப் பார்த்து சிலர் தவறாக கருதியதால் 'வத்தி' வைத்துவிட்டனர். விஷயம் அறிந்த சுந்தரம் இவ்விருவரையும் அழைத்து விசாரிக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

ஒரு நாள் படப்பிடிப்பு முடிந்த பிறகு எம்.ஜி.ஆரை பார்த்து 'ராமச்சந்திரா நீயும் சகுந்தலாவும் என்னை வந்து பார்த்து விட்டுப் போங்கள்' என்றார். எம்.ஜி.ஆருக்கு என்ன நடந்திருக்கும் என்பது புரிந்துவிட்டது. ஜி. சகுந்தலாவுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. தன் பெயர் கெட்டுப் போகும் படி முதல் படத்திலேயே யாரோ தனக்கு எதிராக சதி செய்கிறார்கள் என்று அவர் கண்களில் கண்ணீர் மளமளவென்று வழிந்தது. அழாதே என்று சொல்லிவிட்டு சகுந்தலாவை அழைத்துக்கொண்டு சுந்தரத்தின் அறைக்கு போன எம்.ஜி.ஆர். "முதலாளி நீங்க என்ன கேட்கப் போகிறீர்கள் என்பது எனக்கு தெரியும். சகுந்தலாவை அனுப்பி விடுங்கள் பாவம் அவள் சிறு பெண்" என்றார். உடனே சுந்தரம் சகுந்தலாவை திரும்பி பார்த்து 'போ' எனத் தலையசைத்தார். சகுந்தலா தன் அறைக்குப் போய்விட்டார். பிறகு எம்.ஜி.ஆர். இயக்குனர் சுந்தரத்தை பார்த்து 'முதலாளி சகுந்தலாவுக்கு நாடகத்தில் நடித்து நல்ல பயிற்சி உண்டு. சினிமாவில் கேமராவை பார்த்து நடிப்பது அவளுக்கு புது அனுபவம். எனவே, அவளுக்கு நான் என்னுடன் நாடகத்தில் நடித்த நடிகை

என்ற உரிமையில் நான் அவளை நாடகத்தில் இயக்கி இருக்கிறேன் என்ற பழக்கத்தில் அவளுக்கு எப்படி நடிக்க வேண்டும் என்பதை அவ்வப்போது சொல்லிக் கொடுப்பேன். அவள் என் அண்ணனின் மகள் வயது உடையவள். எனவே, எங்களைப் பற்றி நீங்கள் தவறாகக் கருதாதீர்கள். நீங்கள் என்னிடம் இதுகுறித்து விளக்கம் கேட்டதற்கு நன்றி' என்றார். சுந்தரம் எம்.ஜி.ஆரை பார்த்து தலையசைத்து 'போய் வா' என்று சொல்லிவிட்டார்.

விசாரணையின் போது எம்.ஜி.ஆர். சகுந்தலாவையும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி நிறுத்தாமல் அந்த பெண்ணை அனுப்பி விடுங்கள் என்று கூறியது தான் பெண்ணின்பால் அவர் கொண்டுள்ள அன்பும் பாசமும் இரக்கமும் ஆகும். ஒரு இளம்பெண்ணை, அதுவும் திரையுலகுக்கு முதன்முதலாக அறிமுகமாகி இருக்கும் பெண்ணை, எடுத்த எடுப்பிலேயே அவளுடைய ஒழுக்கத்தைப் பற்றி சந்தேகப்பட்டு விசாரணைக்கு உட்படுத்துவது அவளை மேலும் வளரவிடாமல் தடுக்கும் முயற்சியாகும். மேலும் இது போன்ற விசாரணை பெண்களுக்கு மிகப்பெரிய அவமான உணர்ச்சியை ஏற்படுத்தி தீவிர மன உளைச்சலுக்கு கொண்டு போய் விட்டுவிடும். இதைத்தான் ஆங்கிலத்தில் *character assassination* என்கின்றனர். எனவே, ஒரு பெண்ணை அவமானப்படுத்தக் கூடாது என்ற நல்ல நோக்கத்தில் எம்.ஜி.ஆர். சகுந்தலாவை அனுப்பி விடுங்கள் என்று சொல்லி அவரை அனுப்பிய பின்னர் சகுந்தலாவுக்காகப் பரிந்து பேசி உண்மை நிலவரம் என்ன என்பதை எடுத்துச் சொல்லி சுந்தரத்தை அமைதிப்படுத்தினார்.

எம்.ஜி.ஆரின் வசியப் பேச்சுக்கு கட்டுப்படாதவர் எவரும் இருக்க இயலாது என்றாலும் ஜி. சகுந்தலாவை விசாரணைக்கு உட்படுத்துவது அவர் மனம் ஒப்புக் கொள்ளாத செயலாக இருந்தது. தன்னால் தான் நடிப்புச் சொல்லிக் கொடுத்த காரணத்தால் அந்தப் பெண்ணுக்கு ஒரு பிரச்சனை வந்து விட்டதே என்று அவர் வருந்தி தன்னுடைய விளக்கத்தை முதலாளியிடம் தெரிவித்து விட்டார். அந்தப் பெண்ணை ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருந்து காப்பாற்றி அனுப்பி வைத்துவிட்டார். இதுபோன்ற சூழ்நிலைகளில் எம்.ஜி.ஆர். பெண்களின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் மிகவும் உயர்வாக மதித்தார்.

தெருவில் நின்ற தாயும் சேயும்

எம்.ஜி.ஆர். ரசிகர்கள் பற்றி ஒரு அமெரிக்க மாணவியின் ஆய்வுக்காக பல பெண்களை திரையரங்குகளில் சந்தித்து பேசி அனுபவம் எனக்கு உண்டு. அப்போது ஒரு பெண் நன்றியோடும் கண்ணீரோடும் சொன்ன சம்பவம் இங்கு குறிப்பிடத்தக்கது. அவர் எங்களிடம் இருபது வருடத்திற்கு முன்பு நடந்த ஒரு சம்பவத்தை குறிப்பிட்டார். ஒருநாள் அந்தப் பெண் தன் கணவரிடம் கோபித்து கொண்டு சென்னையில் இருக்கும் அண்ணன் வீட்டுக்கு தன் இரு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு சென்றார். பேருந்தை விட்டு இறங்கி எப்படி விசாரித்து செல்வது என்று தெரியாமல் ஒரு டீக்கடை வாசலில் பிள்ளைகளுக்கு டீ வாங்கி கொடுத்துவிட்டு நின்று கொண்டிருந்தார். அப்போது இரவு எட்டு எட்டரை மணி இருக்கும். அவர் சொன்ன விவரங்களைக் கொண்டு அந்த டீக்கடையில் நின்று இருந்த எவருக்கும் அவரது

அண்ணனின் விலாசத்தை விவரமாக கண்டுபிடித்துச் சொல்ல தெரியவில்லை. மணி ஆகிவிட்டது. இனி என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தபடி இடுப்பில் ஒரு குழந்தையும் கையில் ஒரு குழந்தையும் பிடித்துக்கொண்டு நின்று கொண்டிருந்தார். அவர் மனதில் அச்சம் சூழ்ந்தது.

அச்சத்தோடு நிற்கும் பெண்ணின் அருகே ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து ஒருவர் இறங்கி வந்து 'என்னம்மா இங்கு நிற்கிறீர்கள் என்ன விவரம்' என்று கேட்டார். அப்போது இவர் தன் அண்ணனின் முகவரியைச் சொல்லி 'என் அண்ணன் வீட்டுக்கு போக வேண்டும்' என்றார் இவர் சொன்ன முகவரி தெளிவாக இல்லை. சரி கொஞ்சம் நில்லுங்கள் நான் கேட்டு விட்டு வருகிறேன் என்று அந்த காருக்கு அருகில் சென்று கேட்டு விட்டு வந்தவர் 'அம்மா நீங்க உடனே உங்கள் ஊருக்கு போய் விடுங்கள்; இங்கு இருக்காதீர்கள். இந்த முகவரியை கண்டுபிடிப்பது கடினம். இது தெளிவாக இல்லை; உங்கள் போக்குவரத்துக்கு வேண்டிய பணத்தை எம்.ஜி.ஆர். தருவார் பெற்றுக் கொள்ளுங்கள்' என்றார். உடனே அந்தப் பெண் திகைத்துப் போய் அந்த காரை பார்த்தார். காருக்குள் இருந்து எம்.ஜி.ஆர். வணக்கம் சொன்னார். இந்தப் பெண்ணும் இரு கையையும் எடுத்து வணக்கம் சொல்லிவிட்டு வேகமாக அந்த கார் அருகில் சென்று எம்.ஜி.ஆரிடம் அழுதார். தன் கணவனுடன் கோபித்துக் கொண்டு வந்துவிட்டதாக சொல்லவும் எம்.ஜி.ஆர். 'உடனே நீங்கள் ஊருக்கு போங்கள்; நான் உங்கள் கணவரிடம் பேசி உங்களிடம் அன்பாக இருக்க சொல்கிறேன். நீங்கள் எது நடந்தாலும் வீட்டைவிட்டு வெளியே வந்தது தவறு; நீங்கள் இனி வரவே கூடாது. உங்கள் வீட்டில் தான் இருக்க வேண்டும்' என்று தெரிவித்துவிட்டு

அருகில் இருந்த ஒருவரிடம் 'இவர்களை சாப்பிட வைத்து அனுப்பி விட்டு வா' என்று சொன்னார்.

எம்.ஜி.ஆரின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு அந்த பெண் மதுரைக்குத் திரும்பிவிட்டார். இங்கு அவர் வருவதற்குள் அவர் கணவர் அவரை சமாதானமாக அழைத்து வருவதற்கு பேருந்து நிலையத்திற்கு வந்து விட்டார். இரவோடு இரவாக எம்.ஜி.ஆர். அங்குள்ள தன் ரசிகர் மன்ற ஆட்களிடம் பேசி அந்த மனிதரிடம் இனி மனைவியை அன்பாக வைத்துக்கொள்ள வேண்டும்; எக்காரணம் கொண்டும் வீட்டை விட்டு அடித்து துரத்த கூடாது என்று அறிவுரை சொல்லும்படி சொல்லி இருக்கிறார். எம்.ஜி.ஆர். மூலமாக அறிவுரை வந்ததும் அந்த மனிதர் பயந்துபோய் பேருந்தில் வரும் தன் மனைவியைத் தேடி பேருந்து நிலையத்திற்கு வந்து விட்டார். அந்தப் பெண் இந்த சம்பவத்தை எங்களிடம் சொல்லும் பொழுது 'கூடப் பிறந்தவன் கூட அப்படி செய்ய மாட்டன்மா. அன்றைக்கு மட்டும் அந்த புண்ணியவானை நான் பார்க்காமல் இருந்திருந்தால் நானும் என் பிள்ளைகளும் இந்நேரம் என்ன கதிக்கு ஆளாகி இருப்போமோ தெரியவில்லை. மெட்ராசை பற்றி கேள்விப்படும் ஒவ்வொரு விஷயமும் பயமாகத்தான் இருக்கிறது'' என்று கண்ணீரோடு விவரித்தார்.

சாலையில் நிற்கும் ஒரு பெண்ணுக்கு அவள் முகத்தை பார்த்து கவனித்து இந்தப் பெண் வெளியூர்காரர் போலத் தெரிகிறார், ஏதோ பிரச்சனையில் இருக்கிறார், இவரை இப்படியே விட்டு விட்டு போனால் யாரேனும் இவரை தவறான வழிக்கு இட்டுச் சென்று விடுவார்கள். அதற்குப் பின்பு இவரை காப்பாற்றிக் கொண்டு வருவது மிகவும் கடினம் என்பதை உணர்ந்த எம்.ஜி.ஆர். உடனே

வண்டியை நிறுத்திவிட்டு விசாரித்து அந்த பெண்ணுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்துடன் தன்னுடைய ரசிகர் மன்ற ஆட்களிடம் பேசி அந்த பெண்ணின் கணவருக்கு அறிவுரை சொல்ல செய்து அந்த குடும்பத்தை சேர்த்து வைத்தார். இன்று வரை அந்த குடும்பத்தினர் எம்.ஜி.ஆரை தன் குல தெய்வமாக நினைத்து வணங்கி வருகின்றனர். இந்த கதையை கேட்ட எங்களுடன் படம் பார்க்க வந்திருந்த மற்ற பெண்களும் எம்.ஜி.ஆரை நினைத்து கை எடுத்து தலைக்கு மேல் தூக்கி கும்பிட்டனர்.

தமிழகத்தின் தாளாளர் எம்.ஜி.ஆர்.

முன்பின் தெரியாத ஒரு பெண்ணை காப்பாற்றியது ஒரு சிறு சம்பவமாக தோன்றினாலும் காரில் போகும்போது கூட சாலைகளில் சாலையோரம் நிற்பவர்களின் முகங்களை கண்டு அவர்களின் முகக் குறிப்பறிந்து அவர்களுக்கான உதவிகளை செய்யும் அருங்குணம் எம்.ஜி.ஆருக்கு இருந்ததை அறிகின்றோம். இந்த அரும்பண்பை தமிழ்ப் பெரியோர் ‘தண்டாமல் ஈவது தாளாண்மை’ என்றனர். ஒருவர் கேட்காமலே அவருக்கு வேண்டியவற்றைச் செய்து தருவது தாளாண்மை எனப்படும். அந்த வகையில் எம்.ஜி.ஆர். தமிழகத்தின் தாளாளர். இதுபோல படப்பிடிப்பு தளங்களிலும் முகம் வாடி இருந்த புகைப்படகாரரர் சங்கர் ராவ், டான்ஸ் மாஸ்டர் சுந்தரம் போன்றோர் தங்களை எம்.ஜி.ஆர். அழைத்து தங்கள் முகவாட்டத்திற்கான காரணத்தை கேட்டு உடனடியாக அதை போக்கிவிட்டார் என்று பேட்டிகளில் தெரிவித்துள்ளனர். மனவேதனையோடு இருக்கும் ஒருவரின் முகக்குறிப்பு அறிந்து உதவுகின்ற நற்குணம் எம்.ஜி.ஆரின் தனிப்பண்பு ஆகும்.

கோழி குழம்பு கொண்டு வந்த பாட்டி

அண்ணா திமுக ஆரம்பித்த காலத்தில் எம்.ஜி.ஆருக்கு உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்த திமுக தொண்டர்களும் திமுகவின் ஏவல் துறையாகிவிட்ட காவல்துறையும் முனைப்பாக இருந்தனர். அப்போது எம்.ஜி.ஆருக்கு சில ஆபத்துகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என்பது தெரிய வந்ததால் அவர் காரிலிருந்து இறங்கி வேறு மார்க்கத்தில் பயணப்பட்டார். இரவு நெடுநேரம் ஆகிவிட்டதால் புத்தனாம்பட்டி என்ற கிராமத்தில் தென்னந்தோப்புக்குள் போய் போர்வையை விரித்து அவரும் அவருடன் வந்தவர்களும் உறங்கிவிட்டனர். அப்போது எம்.ஜி.ஆரை யாரோ எழுப்புவது போல் தோன்றியது. கண்விழித்துப் பார்த்தால் ஒரு ஏழை பாட்டி இரண்டு தூக்குவாளியை வைத்துக் கொண்டு நின்றிருந்தார். ‘‘எந்திரிப்பா நீங்க தங்கி இருக்கிறதா என் பேரன் சொன்னான். அதனால உனக்கு சோறும் வெடக்கோழி அடிச்சு குழம்பு வைத்துக் கொண்டு வந்து இருக்கேன்’’ என்றார். அந்த பாட்டி நாம் இங்கு தங்கி இருப்பது தெரிந்திருக்கிறதென்றால் ஊர் மக்களுக்கு தெரிந்து இருக்கும். அப்படி என்றால் ஆபத்து தொடர்ந்து வருமே என்று யோசித்த எம்.ஜி.ஆர். ‘‘சரி பாட்டி நான் சாப்டுட்டு உங்களுக்கு பாத்திரத்தைக் கொண்டு வந்து தருகிறேன்’’ என்று சொல்லி விட்டு உடனிருந்தவர்களை எழுப்பி வண்டியில் புறப்பட்டு விட்டார்.

இரவில் பசியோடு தன் மகன் உறங்குவான் என்ற தாயுள்ளம் கொண்ட அந்த பாட்டி, உறங்கிக் கொண்டிருக்கும் பிள்ளையை எழுப்பி உண்ண வைப்பது போல தூங்கிக் கொண்டிருக்கும் எம்.ஜி.ஆருக்கு தன்



வீட்டிலிருந்த கோழி அடித்து குழம்பு வைத்து கொண்டு கொடுத்தார். இவரது அன்புக்கு அடிபணிந்த எம்.ஜி.ஆர். திரும்பி வரும்போது அந்த இடத்தில் இறங்கி உள்ளே நடந்து போகிறார். தோப்பை கடந்ததும் ஒரு சிறு குடிசை இருந்தது. வெளியே திண்ணையில் பாட்டி ஒரு பழைய சேலையை போர்த்தியபடி உறங்கிக் கொண்டிருந்தார். எம்.ஜி.ஆர். அவர் அருகில் போய் ஒரு விலையுயர்ந்த சால்வையை அவருக்கு போர்த்தி விட்டு, அவர் தலைமாட்டில் ஆயிரம் ரூபாயை வைத்து விட்டு அமைதியாக அவர் உறங்கட்டும் என்று திரும்பி வந்து விட்டார். எம்.ஜி.ஆரிடம் வயதான பெண்கள் தாயன்பு செலுத்துவதும் அவர் அந்தத் தாய்மாரிடம் மகனைப் போல பாசம் காட்டுவதும் சகஜமான விஷயமாக அந்நாளில் இருந்திருக்கிறது. இதற்கு ஏராளமான சான்றுகள் இருந்தாலும் இந்த வெடக்கோழி குழம்பு

சம்பவம் பலராலும் பல நூல்களிலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

நாட்குறிப்போடு காணாமல் போன சான்றிதழ்கள் முதல்முறை எம்.ஜி.ஆர். முதலமைச்சரான போது திருநெல்வேலியைச் சேர்ந்த ஒரு இளம் பெண் தனக்கு வேலை வேண்டும் என்று மனு எழுதி கொண்டு வந்து எம்.ஜி.ஆரிடம் கொடுத்தார். எம்.ஜி.ஆர். கைநீட்டி கேட்டபோது இவர் டைரிக்குள் இருந்த மனுவை எடுத்துக் கொடுக்க டைரியை நீட்டினார் எம்.ஜி.ஆரும் டைரியோடு வாங்கிக்கொண்டார். ஒருவாரம் கழித்த பிறகுதான் அந்தப் பெண்ணுக்கு டைரியோடு தான் வைத்திருந்த சான்றிதழ்களும் சேர்ந்து போய்விட்டன என்பது தெரிந்தது. திரும்பவும் அவர் சென்னைக்கு வந்து எம்.ஜி.ஆரை பார்த்து தனது சான்றிதழ்களையும் டைரியையும் திரும்பப் பெறுவதற்குள் எம்.ஜி.ஆரின் ஆட்சி கலைக்கப்பட்டது. ஆனாலும் அந்த பெண் எம்.ஜி.ஆரை வந்து சந்தித்தார். அப்போது எம்.ஜி.ஆர். 'நான் மீண்டும் ஆட்சிக்கு வருவேன்; வந்தவுடன் உனக்கு வேலை கிடைக்கும்; இப்போது உன்னுடைய சான்றிதழை பெற்றுக் கொண்டு ஊருக்கு போ' என்று சொல்லி விட்டார்.

எம்.ஜி.ஆரிடம் முன்பு பணியாற்றிய அதிகாரிகளிடம் சொல்லி அந்த மனுக்கள் வாங்கி தொகுக்கப்பட்டு வைத்த நாளை குறிப்பிட்டு அந்த நாளில் வாங்கப்பட்ட மனுக்கள் இருக்கும் இடத்தை தேடிப்பிடித்து அதில் இருந்து இந்த பெண்ணின் டைரியையும் அதற்குள் இருந்த சான்றிதழ்களையும் அந்தப் பெண்ணிடம் திரும்ப ஒப்படைக்கும்படி எம்.ஜி.ஆர். தெரிவித்தார். அந்தப் பெண்ணும் அந்த

சான்றிதழ்களை வாங்கி கொண்டு ஊருக்கு சென்றுவிட்டார். மீண்டும் எம்.ஜி.ஆர். முதலமைச்சர் ஆகிறார். இப்போது அந்தப் பெண் திரும்பவும் எம்.ஜி.ஆரை பார்க்க கோட்டைக்கு வந்தார். அந்தப் பெண்ணை அடையாளம் கண்டு கொண்ட எம்.ஜி.ஆர். சிரித்தபடியே அருகில் அழைத்து 'உனக்கு வேலை தானே வேண்டும், கிடைத்துவிட்டது என்று நினைத்துக் கொள் என்று சொல்லி அவருக்கு ஒரு வேலையை ஏற்படுத்திக் கொடுத்தார்.

நாடோடி மன்னன் படத்தில் என்னை நம்பாமல் கெட்டவர்கள் நிறைய பேர் உண்டு; ஆனால் நம்பிக் கெட்டவர்கள் இன்று வரை இல்லை என்று ஒரு வசனம் பேசுவார். அது வெறும் திரைப்பட வசனம் மட்டுமல்ல; அவருடைய சொந்த வாழ்க்கையின் வாசகமும் தத்துவமுமாகும். இந்தப் பெண் எம்.ஜி.ஆரை நம்பினார்; அவருக்கு வேலை கிடைத்தது. எம்.ஜி.ஆரை நம்பி கெட்டவர் எவருமில்லை என்பதற்கு இந்த சம்பவமும் ஒரு சான்றாகும்.

““தேடிப்போய் எவருடைய கண்ணீரையும் துடைத்து, அவர்களுக்குக் கைகொடுத்து, அவர்களை வாழ வைக்கிற எம்.ஜி.ஆர். வள்ளல்களுக்கு எல்லாம் வள்ளல் ஆவார்.”

- அறிஞர் அண்ணா

9

எம்.ஜி.ஆர். படங்களின் கனவுக் காட்சிகள்

எம்.ஜி.ஆர். படங்களில் கதாநாயகனும் கதாநாயகியும் ஆடிப்பாடி மகிழும் காட்சிகள் கதாநாயகியின் கனவாக இடம்பெறுவதுண்டு. "வினையே ஆடவர்க்கு உயிரே மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" என்ற குறுந்தொகையின் வரிகளுக்கேற்ப பெண்களுக்கு எப்போதும் தன் அன்புத் துணைவரின் நினைவுகள் இருந்துகொண்டே இருப்பதால் அவர்கள் இனிமையான வாழ்க்கையைக் கனவு காண்பதாகவே எம்.ஜி.ஆரின் படங்களில் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு விமர்சனம் செய்வோர் எம்.ஜி.ஆர். ஒரு பெண்ணையும் நினைத்து காதலித்தது இல்லையா கனவு கண்டது இல்லையா? ஏன் பெண்களே அவரை நினைத்து கனவு காண்கிறார்கள் என்று கேள்வி எழுப்பியது உண்டு. இந்த கேள்விக்கு விடை ஆண்கள் எப்போதும் தங்கள் தொழில் ரீதியான சிந்தனையிலேயே இருப்பதால் அவர்களுக்கு கனவு காணும் வாய்ப்பும் நேரமும் குறைவு. ஆனால் பெண்கள் எத்தனை பொறுப்புகள் இருந்தாலும் அவற்றோடு தங்கள் காதல் துணைவரை பற்றியும் மனதுக்குள் சிந்தித்துக் கொண்டே இருப்பார்கள். இந்த சிந்தனை கனவுகளாக விரிவடைவதும் உண்டு.

ஒருமுறை பேராசிரியர் சாலமன் பாப்பையா தன்னுடைய பட்டிமன்றத்தில் தொலை தூரத்தில் பணிசெய்யும் தன் கணவனை வீட்டில் இருக்கும் மனைவி எப்போதும் நினைத்துக் கொண்டே இருப்பாள் என்பதற்கு சில எளிமையான எடுத்துக்காட்டுகளைக் கூறினார். குழம்புக்கு காய் வாங்கும் போது கணவனுக்கு பிடித்தமான காய்களைப் பொறுக்கி எடுத்து வாங்கி இந்தக் காய் என்றால் அவருக்கு மிகவும் பிடிக்கும், அங்கு பாவம் என்ன சாப்பிடுகிறாரோ என்று நினைத்துக் கொள்வாளாம். அதன்பிறகு துணி துவைக்கும் போது கணவனுடைய துணிகளை அங்கு யார் துவைத்து கொடுப்பார்? அவர் கொஞ்சம் அழுக்காக இருந்தாலும் போட்டுக் கொள்ள மாட்டார். அவருக்கு தினமும் சுத்தமாக துவைத்து தேய்த்து தரவேண்டுமே; பாவம் அங்கு என்ன கஷ்டப்படுகிறாரோ என்று நினைத்துக்கொண்டே தன்னுடைய அன்றாட வேலைகளைப் பார்த்துக் கொண்டிருப்பாள் என்று சாலமன் பாப்பையா அவர்கள் தெரிவித்தார்கள். இதுபோல பெண்கள் தங்களுடைய அன்றாட அலுவல்களுக்கு இடையே தங்களுடைய காதலரையோ, கணவரையோ எந்நேரமும் நினைத்துக் கொண்டே இருப்பது ஒரு சகஜமான காரியமாகும்; இயல்பான விஷயமாகும்.

கனவுகள் என்பது வெகுகாலமாக ஆராய்ச்சிக்கு உட்பட்டதாகவே இருந்துள்ளது. இந்தியாவில் சோதிடத்தின் ஒரு பிரிவாகக் கனவு சாஸ்திரம் பிரிவு உள்ளது. இந்த சாஸ்திரத்தின் படி கனவுக்கு பலன் சொல்லப்பட்டது. அதில் யானை விரட்டுவது போல கனவு கண்டால் திருமணம் நடக்கும், பாம்பு கொத்துவது

போல கனவு கண்டால் நம்மை பிடித்த பீடைகள் விலகும், ஆடையின்றி இருப்பது போல கனவு கண்டால் தரித்திரம் பிடிக்கும், மலத்தைக் கனவில் கண்டாள் பணம் வரும் என்று கனவுகளுக்குப் பலன்கள் சொல்லப்படுவதுண்டு.

மேலைநாடுகளில்

மேலைநாடுகளில் கனவுகள் குறித்து ஃப்ராய்ட், யுங் போன்ற உளவியல் நிபுணர்கள் ஆராய்ச்சிகள் பல செய்துள்ளனர். பொதுவாக ஆண்களின் கனவுகளில் ஆயுதங்களும் பெண்களின் கனவுகளில் உரையாடல்களும் அதிகம் இருக்கும் என்றும் தெரிவிக்கின்றனர். பெண்கள் கனவுகளில் கூட பேசிக்கொண்டு தான் இருப்பார்கள் என்று அவர்கள் நம்புகின்றனர்.

நான்கு வகையான கனவுகள் உலகளவில் பொதுவாக எல்லோரிடமும் காணப்படுகின்றன. அவை நகர இயலாமல் தன்னை யாரும் அழுத்தி பிடித்திருப்பது போல உணர்கின்ற தன்மை. இதைத்தான் நாம் நமது கிராமங்களில் அமுக்குப் பிசாசு வந்து பிடித்துக் கொண்டதாகக் கூறுகின்றனர். இரண்டாவது கனவு எப்போதும் எங்கேயும் காலதாமதமாக வந்து சேர்வது ஆகும். மூன்றாவது வகை, கனவு வானத்தில் பறப்பது போன்ற ஒரு காட்சி, நான்காவது வகைக் கனவு பொதுஇடத்தில் ஆடையின்றி இருப்பதாக அமைவது. இதுபோன்ற கனவுகளுக்கு நம் ஊர்களில் சில காரணங்கள் சொல்வதுண்டு.

அடுத்து, ஒடுக்கப்பட்ட உணர்வுகல் கனவுகளில் வருவதாக மேலைநாட்டு அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட மன அழுத்தங்களும்

பாலியல் சுரண்டல் போன்றவற்றாலும் பிற்காலத்தில் பெண்களுக்கு கனவுகளில் சில காட்சிகள் தோன்றுவதுண்டு கருவுற்று இருக்கும்போது அல்லது அதிக உடல் எடை கொண்டு இருக்கும்போது தூக்கத்தில் சில பயங்கரமான கனவுகள் *[nightmares]* வருவதும் உண்டு. இது மூளைக்கு செல்லும் ரத்தக் குழாயில் ஏற்படும் அழுத்தம் காரணமாகவும் இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

பொதுவாக ஒடுக்கப்பட்ட பாலுறவு சிக்கல்கலால் பெண்களுக்கு ஹிஸ்டீரியா எனப்படும் மனநோய் வருகின்றது. இந்த மனநோயாளிகள் தங்களுக்கு கடவுளோடு தொடர்புகொண்டு இருப்பதாக அல்லது காதல் கொண்டு இருப்பதாக சொல்லிக் கொள்வார்கள் மனதார நம்புவார்கள். கனவுகளில் கடவுள்களைக் காதலித்து மகிழ்வார்கள். கிரேக்கத்தில் ஹுஸ்ட்ரா என்றால் கர்ப்பப்பை என்பது பொருள். எனவே பாலுணர்வு பிரச்சனை இருப்பவர்களுக்கு வரும் நோய் ஹிஸ்டீரியா என்று அக்காலத்தில் அழைக்கப்பட்டது. ஹிஸ்டீரியா நோயாளிகளுக்கும் அதீத காதல் உணர்ச்சிகளும் மிகையான கற்பனைகளும் இருப்பதால் இவர்கள் சிலவேளைகளில் தெய்வீகக் காதல் கொண்டவர்களாகப் போட்ரப்படுவதும் உண்டு.

பொதுவாக ஒருவரது ஒடுக்கப்பட்ட உணர்வுகள் கனவுகளில் முரண்பாடாக வெளிப்படுவது இயலபு. முதலாளியால் ஒடுக்கப்பட்ட வேலையாள் கனவில் எலி பூனையைத் துரத்துவது போல கனவு வரும். இது அவருடைய ஆசையின் வெளிப்பாடு. டாம் அண்ட் ஜெர்ரி சிரிப்பு படத்தில் எப்போதும் எலி வெற்றிபெறுவதும் பூனை முட்டாளாகி போவதும்

பலராலும் ரசிக்கப் படுவதற்கு காரணம், அவர்களுடைய கனவுகளிலும் இதுபோல வலிமை குறைந்தவன் வெற்றி பெறுவதும் வலிமை கூடியவன் தோற்றுப் போவதும் உண்டு.

எம்.ஜி.ஆர் படங்களில் வில்லனாக இருப்பவர் அந்த ஊர் பிரமுகராக அரசியல் செல்வாக்கு பணபலம் உள்ளவராக இருப்பார். ஆனால் எம்.ஜி.ஆர். சாதாரண தொழிலாளியாக ஏழையாக படிப்பறிவு உடையவனாக இருப்பான், சர்வ வல்லமை படைத்த பணக்கார வில்லனை மிக எளிமையான நிலையில் இருப்பவரை எம்.ஜி.ஆர் தோற்கடித்து விடுவார். இது ஒவ்வொரு ஏழையின் கனவாகும். இந்த கனவு படத்தில் நிறைவேறும் பொழுது படம் பார்க்கும் ஏழை எளிய கிராமத்து மக்கள் மற்றும் நகர்வாழ் மக்கள், அலுவலகத்தில் அதிகாரிகளால் ஒடுக்கப்படுகின்ற குமாஸ்தாக்கள், பணி புரியும் பெண்கள் போன்றவர் அல்லது மேலதிகாரியின் ஒடுக்குதலுக்கு உள்ளாகும். மற்ற அதிகாரிகள் என இவர்கள் எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்கும்போது நம்மாலும் அந்த அதிகாரியை நம் மீது அதிகாரம் செலுத்துபவரை நியாயமான வழியில் வெல்ல முடியும் என்ற ஆக்கப்பூர்வமான எண்ணத்தையும் உற்சாகத்தையும் பெறுகின்றனர். நான் நேர்மையாக நடந்தால் நம் மீது அதிகாரம் செலுத்தும் கெட்டவர்களை நேர்மையான வழிமுறைகளில் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கையை எம்.ஜி.ஆர். படங்கள் தருகின்றன. வாழ்வில் தன்னம்பிக்கையும் தைரியமும் ரசிகர்களுக்கு எம் ஜி ஆர் படங்களால் கிடைக்கின்றன. இவர்கள் டாம் அண்ட் ஜெர்ரி கனவுகளைக் காண வேண்டிய அவசியம் கிடையாது.

சில ஏழை எளிய பெண்களுக்குப் பணக்கார வாலிபரை திருமணம் செய்து கொண்டு வசதியாக வாழ வேண்டும் என்ற கனவு இருக்கும். ஏழை இளைஞர்களுக்கும் மதுரை வீரனைப் போல பணக்காரப் பெண்களை காதலித்து கரம் பிடிக்கும் ஆசை இருக்கும். நிஜத்தில் நடைபெறாத விஷயங்களை கற்பனை செய்வதும் கனவில் நினைத்து பார்ப்பதும் மனதுக்கு ஆறுதல் அளிக்கிறது. இக்கனவுகளை நனவாக்கும் வகையில் எம்.ஜி.ஆரின் படங்களில் ராஜா ராணி கனவுகள் இடம்பெறும் தன் காதலன் ராஜாவாகவும் தான் ஒரு ராணியாகவும் உடையுடுத்தி தோரணையாக பாட்டுப் பாடி மகிழ்ந்து இருப்பது போன்ற கனவுகள் வரும் போது அவரவர் உள்ளத்தின் ஆசைகளும் எண்ணங்களும் கற்பனையாக நிறைவடைகின்றன.



திரைப்படப் பாடல்களில் வரும் கனவுக் காட்சிகளை எவ்வாறு ரசிக்க வேண்டும் என்று எம்.ஜி.ஆர். என் அண்ணன் படத்தில் நடித்துக் காட்டி இருப்பார். ஒரு இளைஞர் திரைப்படத்தில் வரும் கதாநாயகியைக் கற்பனையில் காதலித்துக் கனவு காணக் கூடாது. அது

தவறு. தன் காதலியை அந்த கதாநாயகி அணிந்திருக்கும் உடையில் அலங்காரத்தில் ராணி போல கற்பனை செய்து கனவு காணலாம். இது திரைப்படத்தைக் கண்டு கனவு காணும் பெண்களுக்கும் பொருந்தும். தத்தம் காதலரை ராஜா ராணியாகக் கற்பனை செய்து கொள்ளலாமே தவிர எம்.ஜி.ஆரையோ அல்லது ஜெயலலிதா, சரோஜாதேவியையோ கற்பனை செய்து கனவு காணக் கூடாது. அவ்வாறு கற்பனை செய்வதாக எழுதப்பட்ட கதை தான் சினிமாவுக்கு போன சித்தாளு. அக்கதை வந்த பொது எம்.ஜி.ஆர். ஜெயகாந்தனிடம் கோபம் கொள்வார். என்று பலரும் எதிர்பார்த்து இத்தகவலை அப்வரிடம் போய் தெரிவித்தனர். அனால் எம்.ஜி.ஆர். கோபிக்கவில்லை. காரணம் அவருக்கே அந்த பெண் செய்தது தவறு என்று தோன்றியது.

சினிமாவை ரசிக்கலாம் ஆனால் சினிமா மாயை கூடாது என்பது எம்.ஜி.ஆருக்கு ஆழமான கருத்தாகும். சினிமா என்பது பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த கலைப்படைப்பாக இருப்பதை அவர் ஏற்றுக்கொண்டாலும் அதன் மூலமாக நல்ல பல கருத்துக்களை மக்களுக்குச் சொல்ல முடியும் என்பதையும் அவர் ஆணித்தரமாக நம்பினார்.

சினிமாவை சொந்த வாழ்க்கைக்கு எப்படி எந்த அளவுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை அவர் என் அண்ணன் படத்தில் காண்பித்திருப்பார். அப்படத்தில் குதிரை வண்டிக்காரனாக வரும் எம்.ஜி.ஆரும் புல்லுக்கட்டு காரியாக வரும் ஜெயலலிதாவும் ஒரு ஆடல் பாடல் நிகழ்ச்சிக்கு செல்வார்கள். அங்கு மேடையில் நிகழ்ச்சியை நடத்தும் கலைஞர்கள் என்ன உடையில் ஆடிப்பாடுகின்றனரோ அதே போன்ற உடையில் அதே

பாடலை தாங்கள் பாடுவதாக அவர்கள் இருவரும் சேர்ந்து கனவு கண்டு கொண்டிருப்பார்கள். இந்த ஒரு படத்தில் மட்டும் தான் எம்.ஜி.ஆரும் கதாநாயகியோடு இணைந்து கனவு காண்பதாக காட்டப்பட்டிருக்கும் இருவரின் கனவுகளிலும் மேடையில் ஆடும் கலைஞர்களைப் போலவே உடை உடுத்தி பாட்டுப்பாடி ஆடி மகிழ்வார்கள். இங்கு சினிமா என்ற பொழுதுபோக்கு இவர்களின் மன உளைச்சலை தீர்க்கும் மருந்து சாதனம் ஆகிறது.

மிகுந்த மன உளைச்சலோடு இருக்கும்போது யாரிடமாவது தன் துயரங்களை கொட்டி புலம்புவதும் பாட்டு பாடுவதும் நடனமாடுவதும் விளையாட்டுகளில் ஈடுபடுவது மனதுக்கு அமைதி தரும் வழிமுறைகளாகும். இதனை தான் உளவியல் நிபுணர்கள் *talk therapy* என்றும் *play play therapy* என்றும் அழைக்கின்றனர். கிராமங்களில் மதியவேளையில் திண்ணைகளிலும் அல்லது வீட்டின் பின்புறத்திலோ உட்கார்ந்து பெண்கள் பல்லாங்குழி ஆடுவதும் சொட்டாங்கல் விளையாடுவதும் கோலங்கள் போட்டு வரைந்து பார்ப்பதும் உண்டு. இவை எல்லாம் அவர்களின் மன அழுத்தத்தை போக்கும் வாழ்வியல் சிகிச்சை முறைகளாகும்.

Talk therapy, play therapy என்பன மன நோயாளிகளை குணமாக்க அளிக்கப்படும் சிகிச்சை முறைகள் ஆகும். மன அழுத்தத்திற்கு உள்ளானவர்கள் மருத்துவர்களைப் பார்க்க வரும்போது அவர்களை மனம் விட்டு பேசச் சொல்வார்கள் அவர்கள் பேசுவதை கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கும் மருத்துவர்கள் அவர்களுக்கு எங்கே எப்போது எந்த சூழ்நிலையில் மன அழுத்தம் ஆரம்பித்துள்ளது என்பதை அறிந்துகொள்வார்கள். அதை

பேசி தீர்க்க முயல்வர். அதிகமாக யோசிக்காமல் இருக்க அமைதிப்படுத்தும் மருந்துகளை பரிந்துரை செய்வர்.

அன்றாட வாழ்வில் ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசும் போது ஒருவருடைய மனதில் இருக்கும் அழுத்தமும் குறைகிறது. தன்னுடைய பிரச்சினைகளுக்கு தன் வாயிலாகவே ஒரு தீர்வும் கிடைக்கிறது இதனை நீதிக்கு பின் பாசம் படத்தில் எம்.ஜி.ஆர். நடித்துக் காட்டி இருப்பார் தன் அத்தை மகளை தான் திருமணம் செய்து கொள்ள முடியாது என்று சொன்னதனால் அப்பெண் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டாள். எனவே அவளையே தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று தன் காதலியிடம் விளக்கிச் சொல்லி விட்டு வீட்டுக்கு வந்த எம்.ஜி.ஆர். அத்தை மகள் இறந்து விட்ட செய்தியை அறிந்ததும் மனம் வருந்தி மீண்டும் போய் இதை காதலியிடம் சொல்லி விடலாம் என்று ஆர்வமாக ஓடிப்போனால் அங்கு காதலியும் தண்ணீருக்குள் குதித்து விட்டால் என்பது தெரியவரும். இந்த துயரத்தைத் தாங்க முடியாமல் அவர் ஓரிடத்தில் அமர்ந்து இருப்பார், அப்போது அங்கு வந்த எம் ஆர் ராதா தன்னுடைய பிரச்சினை ஒன்றை அவரிடம் சொல்லி அவரிடம் இருந்து தீர்வு கேட்க நினைப்பார். எம்ஆர் ராதா தான் தன் காதலியின் தந்தை என்பதை தெரியாது எம்.ஜி.ஆர். தந்து காதல் கதையை அவரிடம் சொல்லிவிட்டு அவருடைய கதையையும் கேட்டுக் கொள்வார். அதற்கு முன்பு நோயாளிக்கு நோயாளி ஆறுதல் என்பது போல உங்கள் கதையை முதலில் சொல்லுங்கள் நான் கேட்டுக்கொள்கிறேன். பிறகு என்னுடைய கதையை சொல்கிறேன் இதுதான் talk therapy. மனம்விட்டு பேசுவதே ஒரு சிகிச்சை முறையாக இருந்து மனநோயை தீர்க்கின்றது.

எம்.ஜி.ஆர். படத்தின் கனவு காட்சிகள் படம் பார்ப்போருக்கு மன உளைச்சலை தீர்க்கும் தீர்வாக அமைகின்றன. அவர்களின் மன அழுத்தத்தை குறைத்து காற்று போல லேசாக்கும் மருந்தாகவும் அமைகின்றன. பகல் கனவு பலிக்காது என்ற ஒரு நம்பிக்கை இருந்தாலும் கூட தான் ஆசைப்பட்ட காதலியோடு ஆடிப்பாடி மகிழ்வது போல் கற்பனை செய்து பார்ப்பது ஒவ்வொரு ஆணும் விரும்புவது இயற்கை. அவ்வாறு கற்பனை செய்யும் பொழுது வீட்டிற்குள் ஒரு மூலையில் ஒரு தோட்டத்தில் இருந்து பேசுவதாக இல்லாமல் வானத்தில் பறப்பதும் கடலுக்குள் நடப்பதாகவும் கூட கற்பனை செய்ய இயலும் .மனமென்னும் குதிரைக்கு கடிவாளம் ஏது.


பலவகைக் கனவுகள்

எம்.ஜி.ஆர். படங்களில் பலவகையான கனவு காட்சிகள் உண்டு. அந்தக் காட்சிகளில் விதவிதமான உடைகள் கொடுத்து தலை அலங்காரம் செய்து சிறப்பான வகையில் பாடல்கள் இயற்றி அதற்கு நடனம் அமைத்து ஒலி ஒளி அமைப்புகள் மூலமாகவும் சிறப்பு சேர்ப்பது உண்டு.

திருமணம், குழந்தைப்பேறு போன்ற நிகழ்ச்சிகளை கனவு பாடல்களில் காணலாம். வானத்தில் மிதப்பது போலவும், கடலில் நடப்பது போலவும் கனவு காண்பதுண்டு. வெளிநாட்டு மன்னர்களைப் போல கனவான்களை போல உடை உடுத்திக்கொண்டு பாடுவதாகவும் ஆடுவதாகவும் கனவு காட்சிகள் எடுத்துள்ளனர். ஒரே கனவுப் பாடலில் ஆறு அல்லது ஏழு உடைகளில் விதவிதமான தலையலங்காரம்

அணிமணிகள் அணிந்து காலணிகள் அணிந்து எம்.ஜி.ஆரும் கதாநாயகிகளும் ஆடிப் பாடுவதாக காட்சிகள் அமைவதுண்டு.

கனவு காட்சிகள் பெரும்பாலும் மகிழ்ச்சியாகவே கற்பனை கலந்து காணப்படும். கணவன் படத்தில் வரும் ஒரே ஒரு கனவு காட்சி மட்டும் எதிர்மறை எண்ணத்துடன் வருவதாக இருக்கும். கொலைக் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டு தூக்கு மேடைக்குச் செல்லும் ஒருவனை சொத்துக்காக திருமணம் செய்த ஜெயலலிதா அவன் நிரபராதி என்பது நிரூபிக்கப்பட்டு தண்டனை நீக்கப்பட்டு அவன் விடுதலையாகி வீட்டுக்கு வந்ததும் அதிர்ச்சி ஆகிவிடுவார். ஆண்களை வெறுக்கும் இவர் தன் கணவனுக்கு இனி தான் மனைவியாக வாழ வேண்டுமே என்ற பயத்தில் கனவு காண்பதாக ஒரு பாடல் காட்சி அமைக்கப்பட்டிருந்தது. அந்தப் பாட்டு எம் ஜி ஆர் பாடுவதாக அமைந்திருக்கும்;



“நான் உயிர் பிழைத்தேன் உன் புண்ணியத்தில்,

உன்னை புரிந்து கொண்டேன் ஒரு புன்னகையில்

இன்னொரு பிறவி என்று உன்னிடம் உறவு

கொண்டு வந்தேனே நன்றி சொல்வேனே”

இந்த பாட்டில் எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவை அவருடைய விருப்பத்திற்கு மாறாக அடைய நினைப்பது போல காட்சிகள் அமைக்கப்பட்டு, பாட்டும் நடனமும் இருக்கும் ஆனால் உண்மையில் ஜெயலலிதா கண்ட கனவு பொய்யாகிவிடும். அவர் நினைத்தது போல எதுவும் நடக்காது. எம்.ஜி.ஆர் அவரை எந்த தொந்தரவும் செய்யாமல் அறையை விட்டு வெளியே போய்விடுவார். இது ஒன்று மட்டுமே ஒரு எதிர்மறையான சிந்தனையை க்காட்டிய கனவு பாடலாகும் மற்ற கனவு காட்சிகள் ஆக்கபூர்வமான மகிழ்ச்சியான மனநிலையை விவரிப்பதாகவே அமைக்கப்பட்டன,.

நிகழ்ச்சிகளாக அமைந்த கனவுகள்

தன் காதலனை திருமணம் செய்து கொள்வதாக ஒரு காதலி கனவு காணும் பாடல் நம்நாடு படத்திலும், பாசம் படத்திலும் இடம்பெற்றன. நம்நாடு படத்தில்

“ஆடை முழுதும் நனைய நனைய மழை அடிக்குதடி

நெஞ்சில் ஆசை வெள்ளம் வடியவழிய அலை அடிக்குதடி

நீல விழிகள் மயங்கி மயங்கி கதை படிக்குதடி

புது நினைவு வந்து மனதில் நின்று குரல் கொடுக்குதடி”

என்ற பாடலில் இடையே பின்னணி இசை வரும் போது ஒரு சிறிய கனவுக் காட்சி இடம்பெறும், அதில் எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் சுயமரியாதை திருமண



முறையில் மாலை மாற்றி திருமணம் செய்து கொள்வதாக காட்டப்படும். இது பாட்டின் இடையே வந்த கனவு காட்சியாகும். ஆனால் பாசம் படத்தில் சரோஜாதேவி திருமணத்திற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிட்டு எம்.ஜி.ஆர். வந்ததும் தங்களுக்கு திருமணம் முடியப் போவதாக கனவு காண்பார். அந்தப் பாடல் இலக்கிய நயம் செறிந்த பாடலாகும்

“பால் வண்ணம் பருவம் கண்டு

வேல் வண்ணம் விழிகள் கண்டு

மான் வண்ணம் நான் கண்டு வாடுகிறேன்”

எனத் தொடங்கும் இந்த பாடலில் ‘‘கைவண்ணம் அங்கு கண்டேன் கால்வண்ணம் இங்கு கண்டேன்’’ என்று கம்பர் கம்பராமாயணத்தில் இராமபிரானைப் பாராட்டியது போல, அந்த வரிகளின் சாயலில்

கண்ணதாசன் எம்.ஜி.ஆருக்கு எழுதிய பாடல் இது. ராமபிரான் வில்லை ஒடித்து சீதையை திருமணம் செய்த நிகழ்ச்சியையும் பின்பு கல்லாய் மாறி இருந்த அகலிகையின் மீது ராமனின் கால் பட்டு அவள் உயிருடன் எழுந்த நிகழ்ச்சியையும் இணைத்து கம்பர் ''கைவண்ணம் அங்கு கண்டேன் கால்வண்ணம் இங்கு கண்டேன்'' என்று குறிப்பிடுவார்.



பாசம் படத்தில் வரும் பாடலில் வண்ணம் என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து பொருளழகும் தேனிசையும் கொண்டதால் ரசிகர்களின் உள்ளத்தைக் கவர்ந்த பாடலாக அமைந்தது. இந்த படத்தில் இந்த ஒரு காட்சியில் மட்டும் எம்.ஜி.ஆர். மணமகன் கோலத்தில் அழகாகத் தோன்றுவார். உலகம் பிறந்தது எனக்காக என்ற பாடலில் எம்.ஜி.ஆரின் தோற்றம் நன்றாக இருக்கும். மற்ற காட்சிகளில் அவர் ஒரு திருடனாக அருவருப்பான

தோற்றத்தில் காட்சியளிப்பார். எப்போதும் இடது கை விரல் நகத்தை கடித்தபடி ஒரு மேனரிசத்தை பின்பற்றி இருப்பார். இப்படத்தில் இந்தப் பாடல் ரசிகர்களை வெகுவாக கவர்ந்த பாடல் ஆகும். இப்பாடலில் இருவரும் மணமகள் மணமகன் அலங்காரத்தில் பாடுவதாக அமைந்திருக்கும். ஆனால் திருமண நிகழ்ச்சியோ சடங்குகளோ காட்டப்படவில்லை.

குழந்தை வளர்ப்பு கனவு

எம்.ஜி.ஆர். படங்களில் வரும் கனவு காட்சியில் கதாநாயகிகள் கனவு காண்பது இயற்கை என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். பொதுவாக காதலிகள் கணவனோடு சேர்ந்து மகிழ்ந்திருக்கும் காட்சிகளைத்தான் கனவில் காண்கின்றனர். ஆனால் கண்ணன் என் காதலன் படத்தில் தான் ஒருதலையாக காதலித்த எம்.ஜி.ஆரை திருமணம் செய்ய வேண்டும் என்பதற்காக பொய்யாக தன் கால் உடைந்து விட்டது என்று கூறி திருமணம் செய்துகொள்ளும் ஜெயலலிதா திருமண நாளன்று கனவு காணும்போது அவரோடு சேர்ந்து வாழ்ந்து குழந்தை பெற்று அந்தக் குழந்தையை வைத்து இருவரும் கொஞ்சுவதோடு, எம்.ஜி.ஆர். அந்த குழந்தையை குளிக்க வைத்து சாப்பாடு ஊட்டுவதாக, சைக்கிளில் வைத்து வீட்டுக்குள்ளேயே சுற்றுவதாக என கனவு காண்பார். எம் ஜி ஆரின் குழந்தை வளர்ப்பு காட்சிகள் விரிந்துகொண்டே போகும்.

“மின்மினியை கண்மணியாய் கொண்டவனை

என்னிடமே தந்தாள் உன் அன்னை உன்னை

ஓ சச்சா மம்மா, பப்பா , ஓ ஓ சச்சா மம்மா பப்பா

அழகு மகன் மழலை மொழி,

தென்பொதிகை செந்தமிழோ”

என்ற இந்த கனவு பாடல் ரசிகர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்ற பாடலாகும்.

இப்பாட்டில் எம்.ஜி.ஆர். வேட்டியை முழங்கால் வரை மடித்து வைத்துக் கொண்டு குழந்தையை காலில் படுக்கவைத்து குளிக்க வைப்பது, பின்பு அதற்கு தலை துவட்டி ஆடை மாற்றி அதை இடுப்பில் வைத்துக் கொண்டு ஒரு கிண்ணத்தில் பால் சாதம் வைத்து ஊட்டுவது, மூன்று வயது ஆனபிறகு குழந்தையை மூன்று சக்கர மிதி வண்டியில் வைத்து வீட்டுக்குள்ளேயே சுற்றி வருவது என வரும் இப்பாடல் காட்சிகள் ரசிகர்களை மிகவும் கவர்ந்தன.



கனவுகளில் அதீத செயல்கள்

மனிதர்கள் அன்றாடம் செய்யும் செயல்களை விட்டுவிட்டு அதீதமாக செய்ய இயலாத செயல்களை செய்வதாக கனவு காண்பது ஒரு வகையில் மகிழ்ச்சியை

தருவதாகும். எனவே எம்.ஜி.ஆரும் தனது கனவு பாடல்களில் அதீத செயல்களை புகுத்தினார். வானத்தில் பறப்பது போலவும் கடலில் நடப்பது போலவும் அப்போது ஆடிப்பாடி மகிழ்வது போலவும் காட்சிகளை அமைத்தார்.

புதுமை பித்தன் படத்தில் உலக உருண்டையின் மீது சுற்றி வந்து ஆடுவதாக ஒரு கனவு பாடல் காட்சி இடம் பெற்றுள்ளது. எம்.ஜி.ஆரும், பி.எஸ். சரோஜாவும் வெள்ளை வெல்வெட் உடை உடுத்தி வெள்ளை வெல்வெட் உடை உடுத்தி தேவதைகள் போல மெல்ல உலா வருவர்.

உள்ளம் இரண்டும் ஒன்று நம்

உருவம் தானே இரண்டு

எழில் ஓவியமே கண்ணே நீயும் நானும் ஒன்று

என்று தொடங்கும் பாடல் காட்சி ரசிகர்களின் பெரு வரவேற்பை பெற்ற பாடல் காட்சி ஆகும்.



பெற்றால் தான் பிள்ளையா படத்தில் ஜீப்பில் ஏறி உட்கார்ந்து அப்படியே அந்த ஜீப் வானத்திற்கு உயர்ந்து மேகக் கூட்டங்களின் வழியாக பயணிக்கிறது. அந்த ஜீப்பில் இருந்தபடியே எம்.ஜி.ஆரும், சரோஜாதேவியும்,

‘சக்கரக்கட்டி ராசாத்தி

என் மனச வச்சுக்கோ காப்பாத்தி

சந்தன கட்டி மேனியிலே

நான் சாஞ்சிக்கவா சொல்லு மகராணி’

என்று பாடியபடி செல்கிறார்கள். இப்பாடலில் வாலி முதலில் என் மனச வச்சுக்கோ பாப்பாத்தி என்று எழுதி இருந்தார். அதை வாசித்த அறிஞர் அண்ணா பாப்பாத்தி என்ற சொல் பார்ப்பனர் வீட்டு பெண்களை குறிக்கும் என்பதால் அவர்கள் மனம் புண்படலாம் எனவே இச் சொல்லை மாற்றி விடுங்கள் என்றார். வாலிக்கு மிகவும்



வியப்பாக இருந்தது பிராமண எதிர்ப்பில் வேரூன்றி போயிருந்த திராவிட இயக்கத்தைச் சேர்ந்த அண்ணா அவர்கள் பிராமணப் பெண்களின் மனம் வருந்தக் கூடாது என்பதில் காட்டிய அக்கறை கவிஞர் வாலிக்கு அவர் மீது கொண்டிருந்த மதிப்பை உயர்த்தியது.

நாடோடி மன்னன் படத்தில் பாதிப்படம் வண்ணத்தில் எடுக்கப்பட்டபோது அதில் எம்.ஜி.ஆருக்கும் புதுமுகமாக வந்து சேர்ந்த சரோஜாதேவிக்கு ஒரு கனவு பாடல் வைக்கப்பட்டது அந்த கனவு பாடல் காட்சி கடலுக்கு அடியில் நடந்து பாடிக்கொண்டு போவதாகவும் சங்குகளின் மீது சாய்ந்தபடியும் எடுக்கப்பட்டன. கடலுக்குள் இருந்து நீர்க்குமிழிகள் மேல் நோக்கி வருவது அற்புதமான காட்சியாக அனைவரும் ரசிக்கக்கூடிய காட்சியாக அமைந்தது. அதுபோல உள்ளே இருக்கும் சங்குகள் விதவிதமான கடல்பாசிகள் கடல் தாவரங்கள் பல வண்ண நிறங்களில் இன்றைக்கு நாம் யூ-டியூபில் பார்ப்பது போல அன்றைக்கே அப்பாடல் காட்சியில் இடம் பெற்றிருந்தன.



‘கண்ணில் வந்து மின்னல் போல்

காணுதே இன்ப காவிய கலையே ஓவியமே

செழும் கனி போல சுவை தரும் மாமணி

என் பாடிடும் பூங்குயிலே’

என்று தொடங்கும் பாடலில்

‘சுடர் மின்னல் கண்டு தாழை மலர்வது போலே

உனைக் கண்டு உள்ளமே மகிழ்ந்தேனே’

என்ற பாடல் வரிகளில் கவிஞர் சுரதா ஒரு புதுமையை பயன்படுத்தியிருந்தார் தாழம்பூ வானில் மின்னல் வெட்டியதும் மலரும் இந்த புதிய தகவல் இப்பாட்டில் காணப்பட்டது.

உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் எஸ் பி பாலசுப்ரமணியம் பாடிய

‘அவள் ஒரு நவரச நாடகம்

ஆனந்த கவிதையின் ஆலயம்

தழுவிடும் இனங்களில் மானினம்

தமிழும் அவளும் ஓரினம்’

என்ற பாடலில் எம்.ஜி.ஆர். வெளிநாட்டில் படம் பிடித்த காட்சிகளே அதிகம் இடம்பெற்றன. அவற்றுடன் இணைப்பதற்காக எம்.ஜி.ஆரும் லதாவும் மிகப் பெரிய நீச்சல் தொட்டியில் நீந்துவது போன்ற காட்சி இங்கு வந்து எடுக்கப்பட்டது. இதற்காக சத்யா படப்பிடிப்பு நிலையத்தில் மிகப்பெரிய நீச்சல் குளம் ஒன்று கட்டப்பட்டு அதனைச்சுற்றி கேமரா கொண்டு வந்து படம் எடுக்கும் வசதிகளும் செய்யப்பட்டன. வெளிநாட்டில் இருந்து கொண்டு வந்த கேமராவால் இக்காட்சிகள் படம் பிடிக்கப்பட்டன. இக்காட்சிகளில் நல்ல ஒளி அமைப்பு இருந்தது. இக்காட்சி எடுக்கப்பட்ட விதம் பற்றி நடிகை லதா விவரிக்கையில் இயக்குனர் கே. எஸ். ரவிக்குமார் ‘நாங்கள் இன்று எடுக்க யோசிக்கும் இது போன்ற முயற்சிகளை அன்றே புரட்சிதலைவர் எடுத்திருக்கிறார். நீங்களும் நன்றாக நடித்திருக்கிறீர்கள்’

என்று பாராட்டியதாக குறிப்பிட்டார். . சில காட்சிகளே இப்பாட்டில் இடம்பெற்றாலும் அவை மிகத் தெளிவாக இருந்தன. இன்னும் எம் ஜி ஆருக்கு கூடுதல் கால அவகாசம் கிடைத்திருந்தால் இந்த காட்சிகள் அதிகளவில் அப்பாட்டில் இடம்பெற்றிருக்கும்.

எம்.ஜி.ஆர். சொந்தமாக அண்ணா திமுக கட்சி ஆரம்பித்து விட்டதனால் கட்சிப் பணிகளின் சுமை பாடல் காட்சிக்கு அதிக நேரம் ஒதுக்க விடவில்லை. இது லதாவின் கனவாக அமைந்த பாடலாகும். மஞ்சுளா எம்.ஜி.ஆரை ஒருதலையாக காதலிக்கும் லதாவிடம் எம்.ஜி.ஆருக்கு அவரை திருமணம் செய்து வைப்பதாக தெரிவித்ததும் லதாவின் கனவாக இப்பாடல் வரும், இப்பாடல் உவமை சுவைமிகுந்த பாடல் ஆகும்.

ராஜா ராணி கனவுக் காட்சிகள்

கதாநாயகி தனது கனவில் ராஜா ராணியாக எம் ஜி ஆரையும் தன்னையும் கற்பனை செய்து ஆடி பாடுவதாக அமைந்த பாடல்கள் ரசிகர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றன. அன்பே வா படத்தில் எம்.ஜி.ஆரும் சரோஜாதேவியும் சாரட் வண்டியில் பிரிட்டிஷ் மன்னர் மற்றும் ராணியை போல உடை உடுத்தி பவனி வரும் போது

'ராஜாவின் பார்வை ராணியின் பக்கம்

கண் தேடுதே சொர்க்கம் கை மூடுதே வெட்கம்,

பொன் மாலை மயக்கம், பொன் மாலை மயக்கம்

ராணியின் முகமே ரசிப்பதில் சுகமே

பூரண நிலவோ புன்னகை அழகோ'



என்ற பாடல் காட்சி இடம்பெற்றது. இப்பாடல் காட்சி தூண்டுதல் ஒரு பிரெஞ்சு படத்திலிருந்து ஏ வி மெய்யப்ப செட்டியாருக்கு கிடைத்தது. அந்த படக்காட்சியை இயக்குனரிடம் விவரித்த செட்டியார் அதுபோல அன்பே வா படத்தில் ஒரு பாடல் காட்சி அமைக்கும் படி தெரிவித்தார். அதன்படியே இப்பாடலில் அவர்கள் சாரட் வண்டியில் பயணிக்கும்போது பின்புலத்தில் அழகான வண்ண நிறங்களும் சில அசைவுகளும் தோன்றும் இவை ஒருவித மயக்க உலகத்தில் அவர்கள் பயணிப்பது போன்ற பிரம்மையை தரும்.

எம்.ஜி.ஆரின் கனவுப் பாடல்களில் இன்றுவரை மிகப்பெரிய அளவில் ரசிக்கப்படும் பாடல்களில் 'ராஜாவின் பார்வை ராணியின் பக்கம் பாடல்' முக்கியமானதாகும். சரோஜாதேவி ஒரு பேட்டியின்போது இப்பாடல் காட்சிக்காகத் தனக்கு தைக்கப்பட்ட உடையும் கிரீடமும் பிரிட்டிஷ் எலிசபெத் மகாராணியின் உடை மற்றும் கிரீடத்தை பார்த்து தயாரிக்கப்பட்டவை என்று தெரிவித்தார்.

காவல்காரன் படத்தில்

‘நினைத்தேன் வந்தாய் நூறு வயது

கேட்டேன் தந்தாய் ஆசை மனது

நூறு நிலாவை ஒரு நிலவாக்கி பாவை என்பேன்

ஆயிரம் மலரை ஒரு மலராக்கி பார்வை என்பேன்’



என்ற பாடல் காட்சி ஒரு கனவு காட்சியாகும். இப்பாடலில் ஆண்டனி, கிளியோபாட்ரா போல எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் தோன்றுவார்கள் கிரேக்க மன்னன் தோற்றத்தில் எம்.ஜி.ஆர். உடையும் மகுடமும் ஆடை அணிமணிகளும் வெகு பொருத்தமாக இருக்கும். அதுபோல ஜெயலலிதாவுக்கும் ஆடை அணிமணிகள் மிக அழகாக தேர்வு செய்யப்பட்டு அவருக்கு பொருத்தமாக வழங்கப்பட்டிருக்கும். அவர் ஒரு சிறிய பாம்பு குட்டி போன்ற நெற்றிச்சுட்டி அணிந்து இருப்பது வேடிக்கையாக இருக்கும், ஏனென்றால் கிளியோபாட்ரா இறுதியில் தான் வளர்த்த பாம்பையே தன்னைக் கொத்த விட்டு தன் உயிரை மாய்த்துக் கொண்டார். எனவே அவருடைய அலங்காரத்தில் பாம்புகள் இடம்

பெற்றிருந்தன. இந்தப் பாடல் காட்சியின் பின்புலத்தில் பிரமிடுகள் அழகாக காட்சியளித்தன.

எம்.ஜி.ஆர்., எம் ஆர் ராதாவால் சுடப்பட்டு சிகிச்சை எடுத்துக்கொண்டு பிறகு பங்கேற்ற முதல் படப்பிடிப்பு 'நினைத்தேன் வந்தாய்' பாடல் காட்சியாகும். மேக்கப்புடன் படப்பிடிப்பு நிலையத்துக்கு வந்த எம் ஜி ஆரை இயக்குனர் நீலகண்டன் பெரிய மாலை அணிவித்து வரவேற்றார். அப்போது 'நினைத்தேன் வந்தாய் நூறு வயது; கேட்டேன் தந்தாய் ஆசை மனது' என்ற பாடலை ஒலிக்கச் செய்தனர். எம்.ஜி.ஆர். பிழைத்து வந்து விட்டார், இனி அவருக்கு நூறு வயது தான் என்று அங்கிருந்தவர்கள் அவரை வாழ்த்தினர். அங்கு வந்திருந்த கவிஞர் வாலியைப் பார்த்து எம்.ஜி.ஆர். மகிழ்ச்சியுடன் நீங்கள் சொன்ன சொல் பலித்துவிட்டது நான் பிழைத்து வந்து விட்டேன் எனக்கு நூறு வயது தான் என்று தெரிவித்தார்.

உரிமைக்குரல் படத்தில் சோகக் காட்சிக்கு என எழுதப்பட்டிருந்த ஒரு பாடலை எம்.ஜி.ஆர். கனவு காட்சியாக மாற்றி பட வெளியீட்டுக்கு அதிக நாள் இல்லை என்பதனால் சத்யா படப்பிடிப்பு நிலையத்தில் அதி வேகமாக செட் அமைத்து மினியேச்சர் உத்தி முறையில் மிகச்சிறிய உருவங்களை வைத்து அத்துடன் இவரும் லதாவும் ஆடிப்பாடும் காட்சிகளை இணைக்க செய்து பல விதமான உடைகளை அணிந்து வந்து அனைத்து ரசிகர்களையும் கவரும் வகையில் இப்பாடல் காட்சியை அமைத்துவிட்டார்,

'விழியே கதை எழுது கண்ணீரில் எழுதாதே

மஞ்சள் வானம் தென்றல் காற்றே

உனக்காகவே நான் வாழ்கிறேன்'

என்ற சோகப்பாடல் ஒரு அழகான கனவு பாடலாக உரு மாற்றப்பட்டது.



கனவுப் பாடலில் சர்வ சமய சமரச நெறி

இப்பாடல் காட்சியில் சிவபெருமான், பார்வதியை போல ஒரு காட்சியில் எம்.ஜி.ஆரும், லதாவும் தோன்றுவார்கள். அப்போது எம்.ஜி.ஆர். புலித்தோல் உடை அணிந்து தலையில் ஜடாமுடி தரித்து காட்சியளிப்பார். கையில் சூலம் மட்டும் இருக்காது. அடுத்த வரிகளைப் பாடும் போது இருவரும் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த தேவதூதர்கள் போல முதுகுக்குப் பின்னே இரண்டு இறக்கைகளை வைத்துக்கொண்டு ஒரு படிக்கட்டில் குதித்து இறங்கி வருவார்கள், பிறகு முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர்கள் போல உடையணிந்து பிறை நிலவின் நடுவே காட்சி அளிப்பார்கள். இவ்வாறு மூன்று மதத்தினரையும் திருப்திப்படுத்தும் வகையில் அவர்களுக்கு ஏற்ற உடைகளை அணிந்து பாடலைப்பாடி

அவர்கள் ரசிக்கும் வகையில் அவர்களின் உள்ளம் கவரும் வகையில் படக்காட்சியை அமைப்பதில் எம்.ஜி.ஆர். கைதேர்ந்தவராக இருந்தார்.

மினியேச்சர் உத்தி முறை

விழியே கதை எழுது என்ற கனவுப் பாடல் காட்சியில் சிறிய மண்டபம் போலவும் சங்கின் மீது வைக்கப்பட்டுள்ள பூங்கொத்து கூடிய ஒரு பூச்செடிகளும் பூ ஜாடிகளில் இவர்கள் ஆடும் போது இரண்டு பக்கங்களிலும் வைக்கப்பட்டிருக்கும். இதை மினியேச்சர் உத்திமுறை என்பர். செட் அமைப்பதற்கு கால தாமதமாகும் என்பதால் இவ்வாறு சிறிய பொம்மைகளைக் கொண்டு இந்த காட்சியை அழகுறத் தயாரிக்கப்பட்டது.

இரவு காட்சி கனவுகள்

இரவில் கற்பனையும் கனவும் தோன்றும் போது இருளும் நிலவும் குளிர்ச்சியும் சேரும் வகையில் எம்.ஜி.ஆரின் கனவு காட்சிகள் உருவாக்கப்பட்டன. மாட்டுக்கார வேலன் படத்தில் மாட்டுக்கார வேலனைக் காதலிக்கும் வக்கீல் மகளான ஜெயலலிதா கனவு காண்பதாக ஒரு பாடல் உண்டு. இரவு நேரத்தில் மிக அழகான உடையில் சுற்றிலும் வண்ண ஒளி விளக்குகள் ஒளிர அப்பாடல் காட்சி படம் பிடிக்கப்பட்டது. எம்.ஜி.ஆர். தங்க நிறத்தில் சபாரி சூட்டும் , ஜெயலலிதா வெள்ளை நிற புடவையில் வயலட் நிற ‘சம்கி’யால் அலங்கரிக்கப்பட்ட முந்தானை உடைய சேலையை அணிந்து இப்பாடல் காட்சியில் ஆடிப் பாடுவார்கள்,

‘தொட்டுக் கொள்ள வா நெஞ்சில் தொடுத்து கொள்ள வா

பட்டுகொள்ள வா மெல்ல பழகிக் கொள்ள வா

கட்டிக்கொள்ள வா உன்னை கலந்துக் கொள்ளவா

கட்டிக்கொள்ள வா வா வா மெள்ள தழுவிக் கொள்ள வா’

என்ற பாடல் தொடங்கும். அப்போது அவர்களின் பின்புலத்தில் உதயசூரியன், தாமரை மற்றும் இதயத்திற்குள் புகுந்த காதல் அம்பு ஆகியவை ஒளி விளக்கு அலங்காரத்தில் ஜொலிக்கும். காதல் காட்சியிலும் தன்னுடைய கட்சி சின்னத்தை காண்பிப்பது எம்.ஜி.ஆரின் கொள்கைப் பிரச்சார உத்தி ஆகும்.



இந்தப் பாடல் காட்சி மதுரை அருகே உள்ள வைகை அணைக்கட்டு பகுதியில் எடுக்கப்பட்டது. படப்பிடிப்பை பார்க்க வந்திருந்த மக்கள் கூட்டம் இரவு 10 மணி ஆகியும் வீட்டுக்கு திரும்பி போகும் எண்ணம் இல்லாமல் உட்கார்ந்தபடியே இருந்ததால் எம்.ஜி.ஆர். அவர்களிடம் போய் மெகாஃபோனை வைத்துப் பேசினார். ‘’எல்லோரும் வீட்டுக்குப் போங்கள் இத்துடன்

நாங்கள் படப்பிடிப்பை முடித்துக் கொள்கிறோம், இனியும் நீங்கள் இங்கு இருந்தால் உங்களுடைய பாதுகாப்பு கேள்விக்குறி ஆகிவிடும் உங்களுக்கு இனி பேருந்துகள் இருக்காது. நீங்கள் வீடு போய் சேர முடியாது. எனவே, இப்போதே புறப்பட்டுப் போங்கள்'' என்று அன்புக்கட்டளை இட்டார். அனைவரும் களைந்து சென்றனர்.

எம்.ஜி.ஆர். படப்பிடிப்பு நடப்பதாக அறிந்ததும் சுற்றியுள்ள கிராமங்களிலும் நகரங்களிலும் இருந்து ஆயிரக்கணக்கில் மக்கள் வந்து வைகை அணைக்கட்டுப் பகுதியில் குவிந்துவிட்டனர். அவர்களைச் சுற்றி அமைந்திருக்க படப்பிடிப்புக்கு கேமரா கோணங்களை வைக்கும்போது கேமராவை சரியான இடத்தில் வைத்துவிட்டு ஒளிப்பதிவாளர் வந்து எம்.ஜி.ஆரிடம் தெரிவிப்பார். உடனே எம்.ஜி.ஆர். அந்த கேமரா முன் போய் நின்று கூட்டத்தைப் பார்த்து இரண்டு பக்கமும் கையை விரித்து காட்டுவார் கூட்டம் மெல்ல மெல்ல அவர்கள் கை குறிக்கும் இடம் வரை விலகிச் சென்று கொண்டே இருக்கும். அந்தப் பகுதியில் மனிதர்களின் தலையே தெரியாத அளவுக்கு கூட்டம் ஒதுங்கிவிடும். அதன்பிறகு அந்த இடத்தில் படப்பிடிப்பு நடக்கும். இவ்வாறு எம்.ஜி.ஆரின் கை அசைவுக்கு கட்டுப்பட்டு ரசிகர்களின் கூட்டம் முழு ஒத்துழைப்பு கொடுத்து அங்கிருந்து இந்த படப்பிடிப்பை முடிக்க உதவியது. வைகை அணைக்கட்டு பகுதியில் 'பூ வைத்த பூவைக்கு பூக்கள் சொந்தமா' எனத் தொடங்கும் பாடலும், 'தொட்டுக்கொள்ள வா' என்ற பாடல் காட்சியும் எடுக்கப்பட்டது.

தேடிவந்த மாப்பிள்ளை படத்தில் ஜெயலலிதாவின் கனவுக் காட்சியாக ஓர் யாவு பாடல் காட்சி அமைந்திருந்தது.

‘மாணிக்க தேரில் மரகத கலசம் மின்னுவது என்ன என்ன

மன்னன் முகம் கனவில் வந்தது மஞ்சள் நதி உடலில் வந்தது

ராணி உந்தன் மேனி என்ன ராஜ வீதி தோற்றம் தானோ

கேள்வி கேட்ட மன்னன் மேனி தேவன் கோயில் தோற்றம் தானோ’



என்ற பாடல் ‘நைட் எஃபெக்ட்’ உள்ள பாடலாகும். இதுவும் ஒரு அணைக்கட்டில் எடுக்கப்பட்டதுதான், இவர்களின் இடம்பெறும் காட்சி முழுக்க ஒளி வசதி செய்யப்பட்டிருந்தது. அதாவது ‘ஃபுல் பிரேம் லைட்டிங்’ செய்யப்பட்டிருந்தது. இப்பாட்டு காட்சிக்கு எம்.ஜி.ஆர். மன்னர் உடையிலும் ஜெயலலிதா மேக்ஸி போன்ற நீண்ட ஜிகு ஜிகு உடையிலும் காட்சியளித்தார். இதுவும் ராஜா ராணி உடை போலவே இருந்தது. இப்பாடலும் இரவில்

மின்னொளியில் இருவரும் பாடுவதாக அமைந்த ஒரு கனவு பாடல் காட்சி ஆகும்.

முருகனாகத் தோன்றிய கனவுப்பாடல்

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய போது அதன் தலைவரான அறிஞர் அண்ணா 'நாங்கள் பிள்ளையாரையும் உடைக்க மாட்டோம்; பிள்ளையாருக்கு தேங்காய் உடைக்க மாட்டோம்' என்றார். அதாவது கடவுள் இல்லை என்று நாங்கள் சொல்லவில்லை, இருக்கிறார் என்றும் ஏற்றுக் கொள்ளவில்லை என்று ஒரு பொதுவான கருத்தை முன் வைத்தார். இதனால் எம்.ஜி.ஆர். தன் படங்களில் தெய்வத்தை நிந்திப்பதும் இல்லை, போற்றுவதும் இல்லை. கோயிலுக்கு செல்வது போல காட்சிகளில் நடிப்பது இல்லை.

எம்.ஜி.ஆரின் உற்ற நண்பரான சாண்டோ சின்னப்பா தேவர் எம்.ஜி.ஆரிடம் வேண்டி விரும்பி கேட்டுக் கொண்டதன் பேரில் தேவரின் வழிபடு தெய்வமாக முருகனாக நடிக்க எம்.ஜி.ஆர். ஒப்புக்கொண்டார். தேவர் எடுத்த தனிப்பிறவி படத்தில் ஜெயலலிதாவின் கனவு காட்சியில் எம்.ஜி.ஆர். முருகனாகவும், ஜெயலலிதா வள்ளி மற்றும் தெய்வானை என இரண்டாகவும் தன்னை கற்பனை செய்து பாடுவதாகப் பாடல் காட்சி அமைக்கப்பட்டது.

'எதிர் பாராமல் நடந்தடி

முகம் கண்ணுக்குள் விழுந்தடி

புதிய சுகம் ஒன்று புகுந்ததடி

அது பொழுதுக்கு பொழுது வளருதடி'



என்ற பாடலில் இவர்கள் இருவரும் முருகன் வள்ளி தெய்வானையாக நடித்திருந்தனர். அப்போது எம்.ஜி.ஆர். அந்த காட்சியில் நடிக்க மிகவும் யோசித்ததாகவும் பிறகு சம்மதித்ததாகவும் செய்திகள் வெளிவந்தன.

முருகனாக தோன்றும்போது எம்.ஜி.ஆர். முகத்தில் அதீத சாந்தம் குடிகொண்டிருந்தது. இதற்காக அவருக்கு புதிய அணிமணிகள் செய்தார்கள், தேவர் மற்றவர்கள் பயன்படுத்திய கம்பெனி நகைகளை எம்.ஜி.ஆருக்குப் பயன்படுத்த விரும்பவில்லை. 30 கிலோ எடையில் வேல் ஒன்று செய்யப்பட்டது. இந்த பாடல் காட்சி எடுத்து முடிக்கப்பட்டதும் அந்த வெள்ளி வேலை தேவர் எம்.ஜி.ஆருக்குப் பரிசாக அளித்து விட்டார். எம்.ஜி.ஆர். அதை தன் பெற்றோர்கள் படம் இருக்கும் அறையில் வைத்திருந்தார்.

எம்.ஜி.ஆருக்கும் முருகன் மீது தனி பக்தி உண்டு என்பதனால் அவர் இந்த வேடத்தில் நடிக்க ஒப்புக் கொண்டார். மருதமலை முருகன் கோயிலுக்கு ஏறும் படிக்கட்டுகளுக்கு தேவர் விளக்கு வசதி செய்து கொடுத்த போது, கோவைக்கு விவசாயி படத்தின் படப்பிடிப்புக்கு வந்திருந்த எம்.ஜி.ஆரை அழைத்துவந்து அந்த விளக்குகளுக்கான 'ஸ்விட்சை ஆன்' செய்து தரும்படி வேண்டிக்கொண்டார். எம்.ஜி.ஆரும் தேவரின் விருப்பத்திற்கு இணங்க அங்கு வந்து அந்த 'ஸ்விட்சை ஆன் 'செய்தார். அந்த இடத்தில் இதைக் குறிக்கும் ஒரு கல்வெட்டும் வைக்கப்பட்டது. எம்.ஜி.ஆருக்கு விருப்பமான தெய்வங்கள் என்று அவரது தாயார் வணங்கி வந்த காளி, தேவர் வணங்கி வந்த முருகன் மற்றும் இயேசு கிறிஸ்து என்று அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவிக்கின்றனர்.

கதையைக் காட்டும் கனவு

எம்.ஜி.ஆர். படங்களில் ஒரே ஒரு கனவு பாட்டு மட்டும் அந்தப் படத்தின் கதையின் போக்கு மாறி அதை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்திருந்தது. அப்பாடல் நான் ஆணையிட்டால் படத்தில் வரும்

'நல்ல வேளை நான் பிழைத்துக் கொண்டேன்

என் காதலை உன்னிடம் அழைத்து வந்தேன்

நல்ல வாழ்வை நான் அமைத்துக் கொண்டேன்

அந்த வாழ்விலே உன்னையும் அழைத்துக் கொண்டேன்'

என்ற பாடலாகும்.

எம்.ஜி.ஆர். தான் காதலித்த சரோஜாதேவியை விட்டுவிட்டு தன் மாமன் மகளான கே ஆர் விஜயா மணக்க வேண்டிய ஒரு நிர்பந்தத்திற்கு ஆளாகியிருப்பார். இந்த நெருக்கடியிலிருந்து எப்படி தன்னை விடுவித்துக் கொள்வது என்று அவர் அல்லும் பகலும் ஆலோசித்து வரும் வேளையில் கே ஆர் விஜயா அவரிடம் வந்து தான் செழியன் என்ற இன்ஸ்பெக்டரை காதலிப்பதாகவும் அதை எம்.ஜி.ஆர். தான் அப்பாவிடம் எடுத்துச் சொல்ல வேண்டும் என்றும் வேண்டிக் கொள்வார். உடனே எம்.ஜி.ஆர். தான் அந்த சிக்கலில் இருந்து விடுவிக்கப்பட்டது உணர்ந்து மகிழ்ந்து கண்டிப்பாக உனது திருமணத்தை நானே முடித்து வைக்கிறேன் என்று விஜயாவுக்கு உறுதிமொழி கொடுத்துவிட்டு ஓடோடி வந்து சரோஜா தேவியிடம் இந்த மகிழ்ச்சியான செய்தியை சொல்வதாக அமைக்கப்பட்ட பாடல், 'நல்ல வேளை நான் பிழைத்துக் கொண்டேன்' என் காதலை உன்னிடம் அழைத்து வந்தேன்' என தொடங்கும் பாடல் ஆகும்.



பாடல் காட்சியின் இடையே எமது அடுத்த தயாரிப்பு அடிமைப்பெண் என்று விளக்கொளியில் அலங்காரம் செய்யப்பட்ட ஒரு அறிவிப்பு பலகை காட்டப்படும். நான் ஆணையிட்டால் படம் ஆர் எம் வீரப்பன் தயாரித்த சத்யா மூவிஸ் ஆகும். ஆர் எம் வீரப்பன் எம்.ஜி.ஆரிடம் பணிபுரியும் மானேஜர் ஆவார். அடிமைப்பெண் படம் எம்.ஜி.ஆர். பிக்சர்சாரின் சொந்த தயாரிப்பாகும். அடிமைப்பெண் படம் 1960களிலேயே திட்டமிடப்பட்ட போது பானுமதியும், அஞ்சலிதேவியும் நடித்தனர். அது நின்று போய், அதன்பிறகு சரோஜாதேவி, கே ஆர் விஜயா ஜெயலலிதா ஆகியோரை கொண்டு தயாரிக்கப்பட்டது. அப்போது ஜெயலிதா அடிமைப்பட்ட பெண்ணாக நடித்திருந்தார். சரோஜாதேவி கதாநாயகியாக நடித்தார். படப்பிடிப்பு நிலையத்தில் திடீரென தீ விபத்து ஏற்பட்டதால் அப்போதும் படம் நின்றுபோய்விட்டது. கடைசியில் 1969இல் ஜெயலலிதா மட்டும் இரண்டு வேடங்களில் நடித்து வெளியாயிற்று. ராஜஸ்ரீ மட்டும் ஒரு சிறிய வேடத்தில் நடித்திருந்தார். கதையும் முற்றிலும் மாற்றி அமைக்கப் பட்டிருந்தது. இந்த படத்திற்கான விளம்பரம் தான் 'நல்ல வேளை நான் பிழைத்துக் கொண்டேன்' என்ற பாடல் காட்சியின் இடையே காட்டப்பட்டது. இது கதையோடு கூடிய பாடலாக அமைந்ததால் கதையின் முக்கிய திருப்பத்தை இந்த பாடலின் முதல் வரி உணர்த்தியது.

விதவிதமான வண்ண உடைகள்

அண்ணா திமுக ஆரம்பித்த பின்பு எடுக்கப்பட்ட படங்களில் இடம்பெற்ற காட்சிகளில் ஒரு பாட்டுக்கு எம்.ஜி.ஆர். ஏழெட்டு உடை அணிந்து வந்தார். இரண்டு வரிகளுக்கு ஒரு உடை பின்னணி இசைக்கு ஒரு உடை

என்று நிறைய உடைகளை அணிந்து விதவிதமான வண்ண வண்ணமாக அலங்காரமாக காட்சியளித்தார். குறிப்பாக 'சிரித்து வாழ வேண்டும்' படத்தில் லதாவின் கனவில் வரும் பாடல் ,

கொஞ்ச நேரம் என்னை மறந்தேன்

கடல் நீலம் என விழி கோலம் என்ன

அந்த பார்வை எந்தன் மீதோ, அந்த பார்வை எந்தன் மீதோ

என அவரும்

கொஞ்சும் நேரம் என்னை மறந்தேன்

குளிர் தென்றல் என தொடும் பாவம் என்று

அந்த பார்வை எந்தன் மீதோ, அந்த பார்வை எந்தன் மீதோ



என லதாவும் பாடுவதாக அமைந்த கனவுப் பாடலில் எம்.ஜி.ஆர். விதவிதமான பேண்ட் ஷர்ட் கழுத்தில், இடுப்பில் கட்டும் பெல்ட் காலில் அணியும் ஷு, கையில் பிரேஸ்லெட் என ஒவ்வொன்றும் உடைக்கு தக்கபடி மாறிக்கொண்டே இருக்கும். பின்னணி இசை வரும் இடத்தில் கூட புதிய உடை அணிந்து வருவார். இதில் கழுத்தில் கட்டியிருக்கும் 'டை' கூட வித்தியாசமாக இருக்கும். டான்ஸ் மாஸ்டர் சலீம் நளினமான நடன அசைவுகளை கொண்டு இப்பாடலை வடிவமைத்து இருந்தார்.

'இன்று போல் என்றும் வாழ்க' படத்தில் இடம்பெற்ற

'என் யோக ஜாதகம் நான் உன்னைச் சேர்ந்தது

இன்ப லோக நாடகம் உன் உறவில் கண்டது

உன் அழகு அல்லவோ என்னை அடிமை கொண்டது

தேன் அமுதம் அல்லவோ நான் அள்ளி உண்டது.'

என்ற பாட்டிலும் எம்.ஜி.ஆர். விதவிதமான உடையில் பல



வண்ண நிறங்களில் பலவிதமான பின்புலத்தில் விதவிதமான துணிமணிகளுடன் *accessories* எனப்படும் பிரேஸ்லெட் *(bracelet)* பெல்ட், கழுத்தணி, காலணி போன்றவை மற்றும் முடியலங்காரம் ஆகிய அனைத்தும் நிமிடத்துக்கு ஒருமுறை மாற்றப்பட்டிருக்கும். கழுத்தில் பாசிகள் கூட அணிந்திருப்பார். இவ்வாறாக காட்சிகளை காணும் போது ரசிகர்கள் மிகவும் மகிழ்ந்து ஆரவாரம் செய்தனர். இப்படம் ஒரு கொடியே பத்து இலட்சம் வசூலித்த படம் ஆகும்.

கனவுக் காட்சியில் ஒரு முத்தக் காட்சி

எம்.ஜி.ஆரின் கடைசி படமான மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் படத்தில் லதாவுக்கும் பத்மப்ரியாவுக்கு இரண்டு கனவு பாடல்கள் உண்டு

'தென்றலில் ஆடும் கூந்தலில் கண்டேன் மழைக்கொண்ட மேகம்

என் தேவதை அமுதம் சிந்திடும் நேரம் இனி என்ன நாணம்

மன்னவன் உங்கள் பொன்னுடல் அன்றோ இந்திர லோகம்

அந்தி மாலையில் அந்த மாரனின் கனையில் ஏன் இந்த வேகம்'

என தொடங்கும் பாடல் லதாவின் கனவாக அமைந்தது. தான் காதலிக்கும் பைந்தமிழ்குமரன் தான் பாண்டிய நாட்டு இளவரசன் சுந்தரபாண்டியன் என்பதை அறிந்ததும் தான் பாண்டிய நாட்டு அரசியாகப் போகிறோம் என்ற கனவில் ஒரு அரண்மனையில் அரசனும் அரசியுமாகத் தாங்கள் வாழப் போவதை நினைத்து கனவு காண்பார். இந்தக் காட்சி ஜெய்ப்பூர் அரண்மனையில் எடுக்கப்பட்டது. எம்.ஜி.ஆருக்கு மிக

அழகான கிரீடம் நகைகள் உடை என்று தரப்பட்டிருந்தது. அவருடைய மார்பில் அணிந்திருந்த சிவப்பு கல் மாலை தனிப்பெரும் கற்களாக இணைக்கப்பட்டு ஜொலித்தது. அவருடைய தங்க கிரீடத்தில் ஒரு நீண்ட இறகு சொருகப்பட்டு இருந்தது, புதுமையாகக் காட்சியளித்தது. இந்தப் பாடல் காட்சியில் ஒரு மயில் சிலையின் அருகில் நின்று இருவரும் பாடும்போது லதா அந்த மயிலுக்கு பின்னால் சென்று மறைவார். அப்போது அங்கு ஒரு முத்தக் காட்சி இடம் பெறுகிறது என்பதை சூட்சுமமாக விளக்கும் வகையில் அந்த மயில் தன் முகத்தை நாணத்தோடு திருப்பிக் கொள்வதாக கேமரா மூலமாக அந்த காட்சி விளக்கப்பட்டிருந்தது. கனவுக் காட்சிகளில் அமைந்த ஒரு நயமான முத்தக்காட்சி ஆகும்.

எம்.ஜி.ஆர். ரசிகர்களை உற்சாகப்படுத்தும் அதிலும் மகிழ்ச்சி படுத்துவதிலும் தனக்கு நிகர் தானே என்ற வகையில் அழகான மகிழ்ச்சியான காட்சிகளை எடுப்பதில் வல்லவர். ஏழைகளின் துன்பம் தீரும் வகையில் அவர்களின் கனவுகளில் கற்பனையில் ராஜா ராணியாக மகிழ்ச்சியாக பலவித உடைகளை உடுத்தி பலவித ஆபரணங்களைக் அணிந்து கொண்டு இன்பமாக ஆடிப்பாடி மகிழும் வகையில் இந்தக் கனவுக் காட்சிகளை எம்.ஜி.ஆர். அமைத்தார். காட்சிகளைப் பார்க்கும்போது ரசிகர்களின் மனம் அந்த காட்சியில் ஈடுபட்டு தானும் அந்த இடத்திலிருந்து அந்த மகிழ்ச்சியைப் பெறுவதாக ஒரு நிறைவை பெறுகிறது. ரசிகர்களிடமிருந்து ஆதரவு கிடைக்கும்வகையில் ஒவ்வொரு படத்துக்கும் வெவ்வேறு வகையில் கனவு காட்சிகளை அமைத்தார்.

பாடலாசிரியருக்கு வாய்ப்பு



மீனவ நண்பன் படத்தில் கவிஞர் முத்துலிங்கத்தின் பாடல் எழுத வாய்ப்பு தரவில்லை என்பதை அறிந்த எம்.ஜி.ஆர். ஸ்ரீதரை அழைத்து அவருக்கு ஒரு பாடல் எழுத வாய்ப்பு கொடுங்கள் என்றார். ஸ்ரீதர் படத்தில் பாடலுக்குரிய காட்சிகள் எல்லாம் முடிந்து போயிற்று. இனி ஒரு காட்சியும் இல்லையே என்றார். ஒரு கனவுக் காட்சி வைத்து அவரை எழுதச் சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டார். அவ்வாறு எழுதப்பட்டதுதான்

'தங்கத்தில் முகமெடுத்து சந்தனத்தில் உடலெடுத்து

மங்கை என்று வந்திருக்கும் மலரோ நீ

மாலை நேர பொன்மஞ்சள் நிலவோ

தங்கத்தில் முகமெடுத்து சந்தனத்தில் உடலெடுத்து

காமன் போல வந்திருக்கும் வடிவோ

அந்த தேவலோக மன்னவனும் நீயோ’

எனத் தொடங்கும் பாடல். எம் ஜி ஆருக்குத் தன் படங்களில் கனவு காட்சிகள் இடம் பெற்றால் அதை ரசிகர்கள் கண்டிப்பாக ரசிப்பார்கள் என்ற நம்பிக்கை இருந்ததனால் இயக்குனரின் கருத்தையும் மீறி அவரால் கனவு காட்சிகளை தன் படங்களில் புகுத்த முடிந்தது. பாடலாசிரியர் முத்துலிங்கத்துக்கும் நல்வாய்ப்பு கிடைத்தது. இன்றைக்கும் இப்பாடல் நல்ல வரவேற்பு பெற்று வருகிறது.

தன் ரசிகர்களின் கனவு என்னவாக இருக்கும் என்பதை ஊகித்து உணர்ந்து எம்.ஜி.ஆர். அவர்களின் கனவுகளை நிறைவேற்றும் வகையில் காட்சிகளை அமைத்தார். தனக்கு ஏற்ற வகையில் விதவிதமான உடைகளை அணிந்து நடிக்கவும், இந்த கனவு காட்சிகளை அவர் பயன்படுத்திக் கொண்டார். அவருடைய முகவசீகரமும் மேனி வண்ணமும் இதுபோன்ற காட்சிகளுக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது தான் இயற்கை அவருக்கு அளித்த கொடை.

கனவு நனவானது

எம்.ஜி.ஆர். ஆட்சி பொறுப்பு ஏற்றதும் தன் படத்தை பார்த்த ரசிகர்களின் கனவுகள் நனவாகும் வகையில் பல புதிய திட்டங்களை தீட்டி அவர்களுக்கு பல நன்மைகளைச் செய்தார். தமிழகத்தின் வருங்கால தலைமுறை ஆரோக்கியமாக இருக்க சத்துணவுத்திட்டமும், அறிவோடு வளர பள்ளிகளில் இலவசப் புத்தகம் இலவசச் சீருடை, இலவசக் காலணி என நிறைவேற்றியதும் அவர் மக்கள் மீது கொண்டிருந்த

அன்புக்கு சான்றாக நிற்பனவாகும். இன்றும் இந்தியாவில் தமிழகம் குழந்தை நலம், தாய்-சேய் நலம், சுகாதாரம் ஆகிய துறைகளில் முதலிடத்தை பெற்றிருப்பதற்குக் காரணம் எம்.ஜி.ஆர். அன்று ஆரம்பித்து வைத்த அறிவு மற்றும் ஆரோக்கியத்துக்கு வழிவகுத்த சத்துணவு திட்டம் ஆகும். தமிழகத்தில் பட்டதாரிகள் அதிகம் இருப்பதற்கு காரணம் அன்றைக்கு பிள்ளைகள் பன்னிரண்டாம் வகுப்பு வரை பள்ளிகளிலேயே பாடப்புத்தகம், உணவு, சீருடை ஆகிய மூன்றையும் பெற்றுக்கொண்டு கல்வியில் கவனம் செலுத்த எம்.ஜி.ஆர். தீட்டி செயல்படுத்திய திட்டங்களே ஆகும்.

ஜோடியாக சைக்கிள் சவாரி

நிறைவாக எம்.ஜி.ஆர். கட்சி ஆரம்பித்த சமயத்தில் தன்னுடைய கட்சிக்காரர்களை அழைத்து வருங்கால திட்டம் குறித்து பேசிக் கொண்டிருந்தபோது ஒருவர் எழுந்து நின்று 'அண்ணன் டபுள்ஸ் போனா போலீஸ் பிடிக்குது . வீட்டம்மாவைக் கூட்டிக்கிட்டு ஒரு படத்துக்கு கூட போக முடியல' என்றார். எம்.ஜி.ஆர். சிரித்துக்கொண்டே தலையாட்டினார். இது போன்ற சின்ன சின்ன பிரச்சனைகளை கூட அந்தக் கூட்டத்தில் தொண்டர்கள் எடுத்துக் கூறினர். அதிமுக கட்சி உட்கட்சி ஜனநாயகத்துக்கு உதாரணமாக அமைந்த கட்சி ஆகும். அங்குக் கூட்டத்தில் சாதாரணத் தொண்டன் பேசுவதையும் எம்.ஜி.ஆர். கூர்ந்து கவனிப்பார். எம்.ஜி.ஆர். முதலமைச்சரானதும் சைக்கிளில் டபுள்ஸ் போகலாம் என்று அனுமதி வழங்கினார். அதன் பின்னர் எம்.ஜி.ஆர். ஒரு சந்திப்பின்போது இந்த குறிப்பிட்ட தொண்டரை பார்த்து 'என்ன சந்தோஷமா' என்று கேட்டார். அந்த தொண்டரோ மகிழ்ச்சியில்

திக்குமுக்காடிப் போனார், கட்சி ஆரம்பித்த காலத்தில் என்றோ ஒருநாள் நான் சொன்னதை மனதில் வைத்திருந்து இன்றைக்கு டபுள்ஸ் போக அனுமதி கொடுத்துவிட்டார். இவரல்லவோ தலைவர் என்று மகிழ்ந்து புளங்காகிதம் அடைந்தார். மனைவியோடு இணைந்து கணவர் சைக்கிளில் செல்வது அக்காலத்தில் தனி சுகம் என்பதை எம்.ஜி.ஆர். உணர்ந்திருந்ததால் அதற்கு முன்னுரிமை கொடுத்தார். ஆண் பெண்ணின் எண்ணம், எதிர்பார்ப்பு ஆகியவற்றை எம்.ஜி.ஆர். நன்கு உணர்ந்திருந்தார்.

தன் ரசிகர்களின் தொண்டர்களின் வேண்டுகோள் சிறியதாக இருந்தாலும் பெரியதாக இருந்தாலும் அதை தன் மனதில் வைத்து அதற்குரிய காலம் வரும்போது அதை நிறைவேற்றி தருபவர்தான் எம்.ஜி.ஆர். இந்த ஒரு அருங்குணம் அவரை மக்களோடு இறுக இணைத்து வைத்திருந்தது. ஆக படங்களில் மட்டுமல்ல நிஜத்திலும் எம்.ஜி.ஆருக்கும் அவருடைய ரசிகர்களுக்கும் அவர்கள் கண்ட கனவுகள் நிறைவேறின.

எம்.ஜி.ஆர். என்றேனும் ஒருநாள், ஒருக்கால் அரசியலில் பொறுப்பேற்றுச் செயல்படுவாரே-யானால், அதிலும் அவரது தனி முத்திரை பதிக்கப்படும் என்பது தெளிவு.

- அறிஞர் அண்ண





ஆசிரியர் அவர்களின் நூல் வரிசைகள்

